வள்ளுவ ஆண்டு 2057 – ஐப்பசி – 17 – செவ்வாய்க்கிழமை – 03.11.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 12

BEHIND ME MEDIA

WE SEE BOTH AHEAD AND BEHIND

web : behindmenews.org

குறள் 12 : துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை

பொருள் : உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

இருநாட்களில் Hormuz ஜலசந்தியை திறக்க தயார் – நிபந்தனைகளுடன் ஈரான்!



எங்கள் நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக் கொண்டால் Hormuz ஜலசந்தியை அடுத்த இரண்டே நாட்களில் மீண்டும் திறக்கத் தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரானிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பகாய் கூறியதாவது: அமெரிக்காவுடன் மத்தியஸ்தர்கள் வழியாக சமரச பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. போர் பதற்றத்தைத் தணிக்க முதன்மை கோரிக்கைகள் முன்வைக்கப பட்டுள்ளன. அதில் ஈரானின் எண்ணெய் துறை மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குவதோடு, வெளிநாடுகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ள ஈரானிய சொத்துகளை உடனே விடுவிக்க வேண்டும்.

Hormuz ஜலசந்தி பகுதியில் அமெரிக்க கடற்படை முற்றுகையைக் கைவிட வேண்டும். பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும், ஓமன் நாட்டின் ஒப்புதலுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய போக்குவரத்து வழித்தடத்தை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும். இதுபோன்ற மிக முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். இவற்றை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில் 2 நாட்களுக்குள் Hormuz நீரிணையை திறக்க ஈரான் தயாராக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்..

வங்கதேசத்தில் மீண்டும் கலவரம்



ஜவுளி தொழிலாளர்களின் தொடர் போராட்டங்களால் வங்கதேசத்தில் மீண்டும் வன்முறை கலவரம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த 2009-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை வங்கதேச பிரதமராக ஷேக் ஹசீனா பதவி வகித்தார். அவரது ஆட்சிக் காலத்தில் ஜவுளி துறை செழித்தோங்கியது. சர்வதேச ஜவுளி ஏற்றுமதியில் சீனாவுக்கு அடுத்து வங்கதேசம் 2-ம் இடத்தைப் பிடித்தது.

அந்த நாடு முழுவதும் 4,000-க்கும் மேற்பட்ட ஆயத்த ஆடை ஜவுளி ஆலைகள் செயல்பட்டு வந்தன. சுமார் 40 லட்சம் தொழிலாளர்கள் ஜவுளி துறையில் பணியாற்றினர். 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. கடந்த 2024-ம் ஆண்டில் மாணவர்களின் போராட்டத்தால் ஷேக் ஹசீனா பதவி விலகி இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதன்பிறகு முகமது யூனுஸ் ஆட்சி கடந்த பிப்ரவரி வரை நீடித்தது. பின்னர் நடந்த தேர்தலில் வெற்றிபெற்று தாரிக் ரஹ்மான் பிரதமராகப் பதவியேற்றார். தாரிக் ரஹ்மான் அரசும் இந்தியாவுக்கு எதிரான மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது.

அமெரிக்கா, ஈரான் போரால் வங்க தேசத்தில் பெட்ரோல், டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. எரிசக்தி தட்டுப்பாடு காரணமாக வங்கதேச மின் உற்பத்தி முடங்கி, நாள்தோறும் 16 மணி நேரம் வரை மின் தடை ஏற்படுகிறது. இக்காரணங்களால் வங்கதேசம் முழுவதும் 1,000-க்கும் மேற்பட்ட ஜவுளி ஆலைகள் மூடப்பட்டு உள்ளன. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து உள்ளனர்.

இந்த சூழலில் வங்கதேச ஜவுளி ஆலை தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு மற்றும் ஊழிய உயர்வு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைநகர் டாக்கா, காஜிபூர், அஷுலியா, சாவர் உள்ளிட்ட நகரங்களில் ஜவுளி தொழிலாளர்களின் போராட்டத்தால் மிகப்பெரிய அளவில் வன்முறை, கலவரம் வெடித்திருக்கிறது.

தமிழீழ விடுதலை வரலாற்றின் பொன்விழா

எதிர்வரும் நவம்பர் மாதம் 07ஆம் திகதி சனிக்கிழமை தமிழீழ விடுதலை வரலாற்றில் 50வது ஆண்டு நிறைவு - பொன்விழா நிகழ்வு கனடா ஸ்ரீ ஐயப்பன் கோவில் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்று ஆவணக் கண்காட்சி, தாயகப் பாடல்கள் மற்றும் கலை கலாசார அம்சங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திகதி - 07.11.2026
முகவரி - 635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8, Canada
நேரம் - மாலை 5 மணி

வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னதாக செலவுகளைக் குறைக்குமாறு பிரதமரிடம் வலியுறுத்தல்



பிரதமர் Mark Carney வியாழக்கிழமை வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யத் தயாராகி வரும் வேளையில், டீசல் மீதான அனைத்து வரிகளையும் நீக்க வேண்டும் என்றும், வீண் செலவுகளைக் குறைக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவரும் பழமைவாதக் கட்சியின் தலைவருமான Pierre Poilievre தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

“கனடியர்கள் நல்ல வாழ்க்கையை வாழக்கூடிய வகையில், பற்றாக்குறை, பணவீக்கம் மற்றும் வரிகளைக் குறைக்க வீண் செலவுகளைக் குறைக்குமாறு Carneyயைப் பழமைவாதிகள் வலியுறுத்துகிறார்கள்” என்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் Pierre Poilievre கூறினார்.

P- 25



பிரித்தானிய இலங்கை வம்சாவளி நடிகரால் அகதிகளுக்கு உதவி!

பிரித்தானிய தொலைக்காட்சி போட்டி நிகழ்வொன்றில் (The Traitors) பங்குபற்றி வெற்றி வாகை சூடிய பிரித்தானிய இலங்கை வம்சாவளி நகைச்சுவை நடிகர் ரொமேஷ் ரங்கநாதன் தனது வெற்றி பண பங்கான £41,500 ஐ அகதிகள் நல தொண்டு நிறுவனமான Refugees council charityக்கு அன்பளிப்பு செய்துள்ளார். இவரது தாயார் சாந்தி இவரையும் இவரது சகோதரரையும் கடின உழைப்பின் மூலம் வளர்த்து முன்னேறினார்.

கனடாவின் ஆறு கூட்டாட்சித் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள்

கனடாவின் ஆறு கூட்டாட்சித் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் வரும் டிசம்பர் 7, 2026 திங்கட்கிழமை நடைபெறும் என பிரதமர் அறிவித்துள்ளார். House of Commons சபையில் காலியாக உள்ள ஆறு நாடாளுமன்ற உறுப்பினர் இடங்களை நிரப்பு வதற்காக இந்தத் தேர்தல்கள் மூன்று மாகாணங்களில் நடத்தப் படவுள்ளன

ஆறு தொகுதிகளிலும் போட்டி யிடும் லிபரல் கட்சியின் வேட்பாளர் பட்டியலை முழமை யாக இறுதி செய்த சில மணி நேரங்களிலேயே இந்த இடைத் தேர்தல் அறிவிப்பை பிரதமர் வெளியிட்டார். முன்னாள் கேபினட் அமைச்சர் Steven Guilbeault கடந்த ஆகஸ்ட் மாதம் ராஜினாமா செய்ததால் காலியான Montreal தொகுதியில் Desjardins நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் தலைமை நிர்வாகியுமான Guy Cormier லிபரல் கட்சி சார்பில் களம் இறக்கப்பட்டுள்ளார்.

சமீபத்திய எம்.பி.க்களின் விலகல் களால் காலியான இடங்களைக் கைப்பற்ற அனைத்து முக்கியக் கட்சிகளும் தீவிரமாகப் போட்டி யிடுவதால், இந்த டிசம்பர் இடைத் தேர்தல் மார்க் கார் தலைமை யிலான அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய அரசியல் பரிசோதனை யாகப் பார்க்கப்படுகிறது.

வாழ்வாதாரச் சிக்கல்: தீவிரமடையும் ஐரோப்பிய இளம் சமூகத்தின் போராட்ட அலை!

வாழ்க்கைச் செலவு நெருக்கடி, தோல்வியடைந்த பொதுச் சேவைகள் மற்றும் மலிவு விலையில் வீடு கிடைக் காத நிலை ஆகிய வற்றால் இயக்கப்படும், இளைஞர்கள் மற்றும் ஜென் இசட் தலைமை யிலான ஒரு பிரம்மாண்டமான போராட்ட அலை ஐரோப்பா முழுவதும் பரவி வருகிறது. 2026 அக்டோபரில் மாணவர் ஆர்ப் பாட்டங்களால் தொடங்கப்பட்ட இந்தக் கலவரம், 12 க்கும் மேற் பட்ட நாடுகளைப் பாதிக்கும் பரந்த சமூக - பொருளாதார இயக்கமாக உருவெடுத்துள்ளது,

P- 25

தற்போதைய அரசாங்கம் நந்திக்கடலில் புலிகள் எதிர்கொண்ட இறுதிக் கட்ட நிலையிலேயே இப்போது நிற்கின்றது!



2009ஆம் ஆண்டு நந்திக்கடல் பகுதியில் விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட இறுதிக்கட்ட நிலைமையை ஒத்த அரசியல் நெருக்கடியான காலகட்டத்தையே தற்போதைய மக்கள் விடுதலை முன்னணி அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்கொள்கின்றது என சர்வஜன அதிகாரம் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள சர்வஜன அதிகாரம் கட்சியின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே கட்சியின் மத்துகம தொகுதி அமைப்பாளரும் சர்வஜன இளைஞர் முன்னணியின் தலைவருமான சட்டத்தரணி மதுஷான் சிறிவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், P- 06

பெண்கள் உரிமைகள் தொடர்பான ஐ.நா தீர்மானங்கள் வெளியீடு



“பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு” பற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களின் உத்தியோக பூர்வமற்ற சிங்கள மற்றும் தமிழ் மொழி பெயர்ப்புகள் வெளியிடும் நிகழ்வு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமை யில் பத்தரமுல்லையில் நடைபெற்றது.

ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி அன்று நினைவு கூரப்படும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1325 ஆம் இலக்கத் தீர்மானத்தின் 26 வது ஆண்டு நிறைவுக்குச் சமாந்தரமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

P- 06



கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யக் கோரி சத்தியாகிரகம் - நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக கம்மன்பில ரிட் மனு

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யக் கோரி கொழும்பு விகாரமாதேவி பூங்காவிற்கு முன்பாக நடத்தப்பட்ட சத்தியாகிரகத்திற்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை செல்லுபடியற்றதாக்கும் வகையில் எழுத்தாணையை பிறப்பிக்குமாறு கோரி ரிட் மனு ஒன்றை முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக கறுவா தோட்டம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், கொழும்பு பிரதான நீதவான் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர். நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கலகொடஅத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யக் கோரி பிக்குகள் குழுவொன்று கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் உள்ள புத்தர் சிலைக்கு அருகில் சத்தியகிரகப் போராட்டத்தை ஆரம்பித்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி கறுவா தோட்டம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 106 வது பிரிவின் பிரகாரம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, குறித்த சத்தியகிரகப் போராட்டத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கான உத்தரவு பெறப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டினார்.



கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் வழங்கிய குறித்த உத்தரவு முற்றிலும் சட்டத்திற்கு முரணானது எனச் சுட்டிக்காட்டிய மனுதாரரான உதய கம்மன்பில, மனித உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பம் அல்லது பொதுச் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய அவசர சந்தர்ப்பங்களில் மட்டுமே இத்தகைய உத்தரவை பிறப்பிக்க முடியும் என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள பூஜ்ய உலப்பனே சுமங்கல தேரர், பூஜ்ய பலங்கொடை கஸ்ஸப தேரர் உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து அது தொடர்பில் விடயங்களை வினவ முடியும் என்ற நிலையில், கொழும்பு பிரதான நீதவான் ஒருபக்க சார்பாக குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 09 வது பிரிவின் கீழ் பௌத்த மதத்தைப் பாதுகாத்துப் போஷிப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதுடன், இந்த உத்தரவின் மூலம் அந்த அரசியலமைப்பின் நிலைமை மீறப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதற்கமைய, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட குறித்த உத்தரவை செல்லுபடியற்றதாக்கும் எழுத்தாணையை பிறப்பிக்குமாறு கோருவதுடன், குறித்த உத்தரவிற்கமைய செயற்படுவதைத் தடுக்கும் உத்தரவை பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு வழங்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

இது தவிர, இந்த மனு விசாரணை நிறைவடையும் வரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்துவதற்கான இடைக்காலத் தடை உத்தரவொன்றை வழங்குமாறும் மனுதாரர் உதய கம்மன்பில மேலும் கோரியுள்ளார்.

ஆனந்தபுரத்தில் விட்டுச்செல்லப்பட்ட 300 க்கும் மேற்பட்ட போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்! - சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம்

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

இலங்கை இராணுவம் 2009 ஏப்ரல் மாதம் ஆனந்தபுரத்தைக் கைப்பற்றியபோது கடுமையாகக் காயமடைந்த நிலையில் ஒரே கட்டடத்துக்குள் விட்டுச்செல்லப்பட்ட 300 க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தின் புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் தப்பிப்பிழைத்தவர்கள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையில் சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டு, 'ஆனந்தபுர மோதல்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனந்தபுரத்தின் முற்றுகையிடப்பட்ட பகுதியின் கிழக்குப் புறமாக இருந்த கணினி மையப்பகுதியில் போரின் இறுதி நாட்களில் காயமடைந்த நூற்றுக்கணக்கான போராளிகள் கூடியதாகவும், 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதியன்று காயமடைந்தவர்கள் அங்கு விட்டுச்செல்லப்பட்டதாகவும், அதன்பின்னர் அவர்கள் யாரையும் காணவில்லை என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, 'ஆனந்தபுரம் படுகொலைகள் குறித்து சாட்சியமளிப்பதற்கு யாரும் தப்பவில்லை என்றே நாம் பல வருடங்களாக நம்பிக்கொண்டிருந்தோம். இருப்பினும் அங்கிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் இப்போது அவர்களது மௌனத்தைக் கலைத்துள்ளனர். இராணுவ வெற்றி என்பது காயமடைந்தவர்களைக் கொல்வதற்கான உரிமையை வழங்கிவிடாது....

இதுபற்றி அங்கிருந்து தப்பிப்பிழைத்த ஒருவர், 'நான் வெளியேறியபோது காயமடைந்தவர்கள் உயிருடன் இருந்தனர். அவர்களிடம் துப்பாக்கிகளோ, வெடிபொருட்களோ அல்லது சயனைட்டோ இருக்கவில்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அங்கு விட்டுச்செல்லப்பட்ட 30 க்கும் மேற்பட்டோருடன் பயிற்சி பெற்று, அவர்களது குடும்பத்தினரையும் நன்கறிந்த மற்றொருவர், 'அவர்கள் மீண்டும் திரும்பி வரவில்லை. அவர்கள் அனைவரையும் படுகொலை செய்துவிடுவார்கள் என நாங்கள் ஒருபோதும் நினைக்கவில்லை. அங்கு விட்டுச்செல்லப்பட்ட காயமடைந்தவர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டதாகப் பின்னர் அறிந்துகொண்டோம்' எனக் கூறியுள்ளார்.

BEHIND ME MEDIA

அங்கிருந்து தப்பிப்பிழைத்த ஒருவர், 'நான் வெளியேறியபோது காயமடைந்தவர்கள் உயிருடன் இருந்தனர். அவர்களிடம் துப்பாக்கிகளோ, வெடிபொருட்களோ அல்லது சயனைட்டோ இருக்கவில்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்.



இதுபற்றி அவ்வறிக்கையில் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, 'ஆனந்தபுரம் படுகொலைகள் குறித்து சாட்சியமளிப்பதற்கு யாரும் தப்பவில்லை என்றே நாம் பல வருடங்களாக நம்பிக்கொண்டிருந்தோம்.

இருப்பினும் அங்கிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் இப்போது அவர்களது மௌனத்தைக் கலைத்துள்ளனர். இராணுவ வெற்றி என்பது காயமடைந்தவர்களைக் கொல்வதற்கான உரிமையை வழங்கிவிடாது. கடந்த 17 வருடங்களாகத் தொடரும் தண்டனைகள் ஏதுமற்ற நிலைமை, குற்றவியல் பொறுப்பை அழித்துவிடாது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த காலங்களில் நிகழ்ந்தவற்றை இலங்கை வெளிப்படுத்துவதுடன், மீறல்களுடன் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.

சிறைச்சாலையில் உள்ள முன்னாள் அமைச்சரின் மகனின் சொகுசு கார்களும் முடக்கம்

தற்போது வெலிசர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல் காரரும் பாதாள குழு தலைவர் எனவும் அறியப்படும் நதுன் சிந்தக்க விக்ரமரத்ன எனும் ஹரக் கட்டாவின் மனைவியிடமிருந்து 12 கோடி ரூபா பணத்தை இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் மகன் ரகித்த ராஜபக்ஷவுக்குச் சொந்தமான 4 வங்கிச் கணக்குகளுக்கு மேலதிகமாக இரு சொகுசு கார்களையும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முடக்கியுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஹரக் கட்டாவை அங்கிருந்து விடுவித்து, பாதுகாப்பான சிறைச்சாலையொன்றிற்கு மாற்றுவதற்காக அவரது மனைவியிடமிருந்து 12 கோடி ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெறப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, ரகித்த ராஜபக்ஷ மற்றும் சரித் அபேசிங்க உள்ளிட்ட மூவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டபோதிலும், சந்தேகநபரால் பெறப்பட்டதாகக் கூறப்படும் 12 கோடி ரூபா இலஞ்சப் பணத்தைக் கண்டறிய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து, குற்றச்செயலின் மூலம் ஈட்டப்பட்ட சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் அவர்களின் சொத்துக்கள் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்தது.

இந்த விசாரணைகளின் அடிப்படையில், ரகித்த ராஜபக்ஷவுக்குச் சொந்தமான 4 வங்கிச் கணக்குகள் மற்றும் 2 அதிநவீன சொகுசு கார்களை அதிகாரிகள் முடக்கியுள்ளனர். முடக்கப்பட்ட வங்கிச் கணக்குகளில் சுமார் 4 கோடி ரூபா பணம் வைப்பிலிடப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

மேற்படி சொத்துகள் முடக்கப்பட்டமை தொடர்பான எழுத்து மூல அறிவிப்பை வழங்குவதற்காக புலனாய்வு அதிகாரிகள் இராஜகிரிய பகுதியில் அமைந்துள்ள ரகித்த ராஜபக்ஷவின் வீட்டிற்கு சென்றபோதிலும், அவர் வீட்டில் இல்லாத காரணத்தால், குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் அவரது மனைவியிடம் வழங்கப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.



தந்தை மற்றும் 2 மகள்கள் மீது துப்பாக்கி சூடு Toronto வில் சம்பவம்!



வியாழக்கிழமை அதிகாலை Toronto நகரின் உயர்தர குடியிருப்புப் பகுதியான Bridle Path பகுதியில் இடம்பெற்ற கொடூரமான வீட்டு ஊடுருவல் சம்பவத்தில், ஒரு தந்தையும் அவரது இரு மகள்களும் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ள தாக Toronto பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைத்துப்பாக்கிகள் மற்றும் சுத்தியலுடன் முகமூடி அணிந்த மூன்று சந்தேகநபர்கள், அதிகாலை 3:45 மணியளவில் வீட்டின் பின்புறக் கதவு வழியாக உள்ளே நுழைந்துள்ளனர்.

வீட்டிற்குள் நுழைந்த கொள்ளையர்கள் கணவன், மனைவி மற்றும் அவர்களின் இரு மகள்களை அச்சுறுத்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட மோதலில் தந்தையும் இரு மகள்களும் சுடப்பட்டுள்ளனர். அத்துடன், ஒருவர் சுத்தியலால் தாக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நால்வரும் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். முதல் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

பாதிக்கப்பட்ட இருவரின் காயங்கள் ஆரம்பத்தில் உயிருக்கு ஆபத்தானவை என பொலிஸார் தெரிவித்திருந்த போதிலும், தற்போது அவர்களின் காயங்கள் வாழ்நாள் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருவர் இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சந்தேகநபர்களின் விரிவான அடையாளங்களை பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை, எனினும் அவர்கள் SUV ரக வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய Toronto Police சேவையின் கொள்ளை தடுப்புப் பிரிவின் ஆய்வாளர்,

“இது ஒரு தீவிரமான விசாரணையில் உள்ள சம்பவமாகும். சந்தேகநபர்கள் பற்றிய விரிவான தகவல்கள் தற்போது எம்மிடம் இல்லை என்றாலும், அடையாளம் காணப்பட்ட மூன்று சந்தேகநபர்கள் குறித்து சாத்தியமான தகவல்களை வழங்க எம்மாலான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறோம்.

இத்தகைய சம்பவம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி, அப்பகுதி மக்கள் மற்றும் முழுச் சமூகத்திற்கும் எவ்வளவு அச்சத்தையும் அதிர்ச்சியையும் தரும் என்பதை நாங்கள் உணர்கிறோம். மக்கள் தங்கள் வீடுகளில் பாதுகாப்பாக உணர வேண்டும்.”

கொள்ளையர்கள் வீட்டின் பெறுமதியான பொருட்களைக் கேட்டு மிரட்டியுள்ளதாகக் குறிப்பிட்ட ஸ்மித், அவர்கள் எதையாவது திருடிச் சென்றார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றார்.

வாகனத் திருடர்கள் பெரும்பாலும் உயர்சொகுசு வாகனங்களைத் திருடுவதற்காக வீடுகளுக்குள் நுழைவது வழக்கம் என்றும், இந்த வீடு குறிப்பாக இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டதா என்பதை உறுதியாகக் கூற முடியாது என்றும், உயர்தரப் பகுதிய என்பதால் பெறுமதியான பொருட்கள் இருக்கும் என்ற நோக்கில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கனடாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான நெருக்கம் குறித்து ஆய்வு வேண்டும்!



கனடாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே மேலும் நெருக்கமான உறவை ஏற்படுத்த பிரதமர் Mark Carney முன்னெடுத்து வரும் முயற்சிகள், கனடாவின் தேசிய அடையாளம், கலாசாரம், இறையாண்மை மற்றும் குடிமக்களின் உரிமைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும் என Conservative கட்சி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றக் குழுவொன்றில் இந்த விடயத தை ஆய்வு செய்வதற்கான தீர்மானத்தை முன்வைத்ததாகவும், ஆனால் டுடிநசயட கட்சியினர் அது தொடர்பான விவாதத்தை நிறுத்தியதாகவும் conservative கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.


இந்தக் கேள்விகள் கனடாவின் எதிர்காலத் துடன் நேரடியாகத் தொடர்புடையவை என்றும், அவற்றை நாடாளுமன்றத்தில் தீவிரமாக ஆராய வேண்டுமே தவிர விவாதத்தைத் தவிர்க்கக்கூடாது என்றும் conservative கட்சி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடனான வர்த்தகப் பதற்றங்கள் நீடிக்கும் நிலையில், ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளை விரிவுபடுத்துவது கனடாவின் சுயாதீனத்தையும் பொருளாதார வலிமையையும் அதிகரிக்கும் என்பதே பிரதமர் Mark Carney யின் நிலைப்பாடாகும்.

வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம் மற்றும் முக்கிய கனிம வளங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்து வதற்குக் கனடாவும் ஐரோப்பிய ஒன்றியமும் முயற்சித்து வருகின்றன.

மேலும், கனடா ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுமையான உறுப்பினராக இணைவதற்கான திட்டம் இல்லை எனவும் கார்னி தெளிவு படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், புதிய கூட்டாண்மையின் இறுதி நிபந்தனைகள் இன்னும் முழுமையாகத் தீர்மானிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருக்க மான உறவு கனடாவுக்குப் புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கும் என லிபரல் அரசு வாதிடும் நிலையில், எந்தவொரு புதிய ஒப்பந்தமும் கனடியர்களின் இறையாண்மை, சட்டங்கள் மற்றும் உரிமைகளைப் பாதிக்கக் கூடாது எனக் கன்சர்வேட்டிவ் கட்சி வலியுறுத் துகிறது.



BEHIND ME MEDIA

கனடாவின் தேசிய பாதுகாப்பு: புதிய மூலோபாயத் திட்டம் பிரதமரால் வெளியீடு!



உலகளாவிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், இணையத் தாக்குதல்கள், வெளிநாட்டுத் தலையீடுகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மை அதிகரித்து வரும் நிலையில், கனடாவின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான புதிய மூலோபாயத் திட்டத்தை பிரதமர் ஆயசம ஊயசநெல வெளியிட்டுள்ளார்.

“The Plan for a Stronger Canada” – வலுவான கனடாவிற்கான திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மூலோபாயம், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் கனடா வெளியிட்டுள்ள முதலாவது விரிவான தேசிய பாதுகாப்புத் திட்டமாகும். கனடாவின் இறையாண்மை, பொருளாதாரப் பாதுகாப்பு, இராணுவ வலிமை, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் திறன்களை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

வேகமாக மாறிவரும், அதிக ஆபத்துகளும் பிளவுகளும் நிறைந்த உலகில், கனடா தனது இறையாண்மையைப் பாதுகாக்கும் திறனையும் புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வலிமையையும் தனது எதிர்காலத்தைத் தானே தீர்மானிக்கும் உறுதியையும் கொண்டிருக்க வேண்டும் எனப் பிரதமர் கார்னி தெரிவித்துள்ளார்.

புதிய தேசிய பாதுகாப்புத் திட்டத்தின் 5 முக்கிய முன்னுரிமைகள்!

1. பொருளாதாரப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்
2. வெளிநாட்டு உறவுகள் மற்றும் சர்வதேச கூட்டாண்மைகளை விரிவுபடுத்துதல்
3. கனடிய ஆயுதப்படைகளை நவீனமயப்படுத்துதல்
4. பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்

புதிய திட்டத்தின் கீழ் பின்வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன:

- வெளிநாட்டு அரசுகளின் தலையீடுகள் மற்றும் உளவு நடவடிக்கைகள்.
- வன்முறைத் தீவிரவாதம் மற்றும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள்.
- மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் மோசடிகள்.
- பணமோசடி மற்றும் நிதிக் குற்றங்கள்.
- சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருட்கள் மற்றும் மனிதக் கடத்தல்.
- இணையக் குற்றங்கள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள்.

5. கனடாவின் புலனாய்வுத் திறன்களை மேம்படுத்துதல்

2025ஆம் ஆண்டு மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 10.9 பில்லியன் டொலர் ஐந்தாண்டு முதலீடு, கனடிய தேசிய பாதுகாப்புத் துறை, ஆயுதப்படைகள் மற்றும் தகவல் தொடர்புப் பாதுகாப்பு நிறுவனத்தின் டிஜிட்டல் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் இணையத் தாக்குதல்களை எதிர்கொள்ளும் கனடாவின் திறனை அதிகரிப்பதே அரசின் நோக்கமாகும். இந்தத் தொகை இன்றைய அறிவிப்பில் புதிதாக ஒதுக்கப்பட்ட நிதியல்ல. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட முதலீடு என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும், ஆயுதப்படைகளை வலுப்படுத்துவதற்கும், தேசிய நலன்களை முன்னெடுப்பதற்கும் இந்தத் திட்டம் முக்கியமானது என தேசிய பாதுகாப்பு அமைச்சர் David McGuinty தெரிவித்துள்ளார். கனடாவின் ஜனநாயக அமைப்புகள், பொதுமக்கள் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான திறன்களையும் கூட்டாண்மைகளையும் வலுப்படுத்துவதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிடப்படும் இந்த விரிவான தேசிய பாதுகாப்பு மூலோபாயம், நாட்டின் பாதுகாப்பை இராணுவ நடவடிக்கைகளுடன் மட்டும் தொடர்புபடுத்தாமல், பொருளாதாரம், தொழில்நுட்பம், எரிசக்தி, வர்த்தகம், பொதுப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



சிறுவர் பாலியல் விசாரணை: Durham Police அதிகாரி மீது குற்றம்?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக விசாரணை காரணமாக டர்ஹாம் பிராந்திய பொலிஸ் சேவையின் பொலிஸ் அதிகாரி Tre-Jamal Hamad சம்பளம் இன்றி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

Northumberland County நடந்த சிறுவர் பாலியல் சுரண்டல் தொடர்பான விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, டர்ஹாம் பிராந்தியத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பளம் இன்றி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஒன்டாரியோ மாகாண பொலிஸின் Northumberland பொலிஸ் பிரிவினர், அக்டோபர் 21 அன்று சிறுவர் பாலியல் சுரண்டல் தொடர்பான முறைப்பாடு ஒன்றைப்பெற்றதாகத் தெரிவித்துள்ளனர்.

OPP இன் பிராந்திய ஆதரவு மற்றும் அவசரக்கால உதவிப் படைகளின் உதவியுடன் Peterborough County மற்றும் Haliburton Highlands ஆகிய பகுதிகளின் OPP குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து விசாரணை தொடங்கப்பட்டது.

இதன் விளைவாக, டர்ஹாம் பிராந்திய பொலிஸ் சேவையின் டிஜிட்டல் தடயவியல் பிரிவின் உதவியுடன், Whitby மற்றும் Ajax ஆகிய பகுதிகளில் சோதனைக் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன.

அஜாக்ஸைச் சேர்ந்த 31 வயதான Hamath ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு, தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக ஒன்டாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் பொருட்களை வைத்திருந்தமை, 18 வயதுக்குட்பட்ட ஒருவருக்குப் பாலியல் ரீதியான தெளிவான பொருட்களைக் கிடைக்கச் செய்தமை, தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் 18



வயதுக்குட்பட்ட ஒருவரைக் கவர முயன்றமை 16 வயதுக்குட்பட்ட ஒருவருக்கு அநாகரீகமாகத் தன் உடலைக் காட்டியமை மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகப் பொருட்களை வெளியிடும் நோக்கில் தயாரித்தல், அச்சிடுதல் அல்லது வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் தலா ஒன்று அடங்கும்.

மேலும், 16 வயதுக்குட்பட்ட ஒருவருக்குப் பாலியல் ரீதியான பொருட்களைக் கிடைக்கச் செய்தமை மற்றும் தொலைத்தொடர்பு மூலம் 16 வயதுக்குட்பட்ட ஒருவரைக் கவர முயன்றமை ஆகிய குற்றச்சாட்டுகள் தலா இரண்டு வீதமும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

பிரான்சில் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனதும் அவரோடு பலியான மாவீரர்களதும் நினைவு வணக்க நிகழ்வு

பிரிகேடியர் மாவீரர் சுப தமிழ்ச்செல்வன் அவர்களதும் மற்றும் அவரோடு சிங்கள அரச தாக்குதலில் பலியான மாவீர போராளிகளின் 17 ம் ஆண்டு வணக்க நிகழ்வு பிரான்சின் 93 ம் பிராந்தியம் La Courneuve மாநகராட்சி மன்றத்திற்கு அருகாமை உள்ள நினைவுச் சின்னத்தில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

இன்றய நாளில் நினைவுச் சின்னம் வைப்பதற்கு உழைத்தவர்களில் ஒருவரான தேசிய செயற்பாட்டாளர் தர்மதேவன் அவர்கள் தீபம் ஏற்றி ஆரம்பித்து தமிழ் செல்வன் அவர்களின் மகள் தந்தைக்கான சுடர் ஏற்றி மாலை அணிவித்ததோடு பாரீசில் படுகொலை செய்யப்பட்ட தேசிய செயற்பாட்டாளர் பருதி அவர்களின் தாயார் அவருக்கான சுடர் மற்றும் மாலை அணிவித்தமை குறிப்பிடத்தக்கது.



















பெண்கள் உரிமைகள் தொடர்பான ஐ.நா தீர்மானங்கள் வெளியீடு

தொடர்ச்சி

அமைதிக்கான பாதைகள் (Pathways to Peace) அமைப்பினால் இலங்கையிலுள்ள கனடாவின் உயர்ஸ்தானிகராலயம் தலைமையிலான கனடா அரசாங்கத்தின் அனுசரணையில் மேற்கொள்ளப் பட்ட இந்த மொழிபெயர்ப்புகளின் அச்சிடப்பட்ட பிரதிகளும் இதன்போது கையளிக்கப்பட்டன.

பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சி நிரல் (Women, Peace and Security Agenda) என்பது ஆயுதமேந்திய மோதல்கள் மற்றும் யுத்த சூழ்நிலைகளில் பெண்களும் பெண் பிள்ளை களும் எதிர்கொள்ளும் விசேட சவால்களை அடையாளம் கண்டு, அமைதியை ஏற்படுத்துதல், மோதல்களைத் தடுத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயல்பாடுகளில் பெண்களின் சமமான மற்றும் தீவிர பங்கேற்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட சர்வதேசக் கொள்கைக் கட்டமைப்பாகும். 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1325 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் மோதல்களைத் தடுத்தல், மோதல்களைத் தீர்த்தல், அமைதிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் அமைதியைக் கட்டியெழுப்பும் செயல்பாடுகளில் பெண்களின் பங்கு மற்றும் பங்கேற்பு வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் ஆயுத மோதல்களின் போது பெண்களையும் பெண் பிள்ளைகளையும் பாதுகாத்தல், பாலியல் மற்றும் பாலின அடிப்படை யிலான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் நிவாரண மற்றும் மறுசீரமைப்புப் பணிகளில் பெண்களின் தேவைகளைக் கவனத்தில் கொள்வதும் இந்த நிகழ்ச்சி நிரலின் முக்கிய நோக்கங்களில் அடங்கும்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், சர்வதேசக் கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் பற்றிய அறிவை மொழி தடங்கலின்றி அனைவரும் பெறக் கூடியதாக இருப்பது, பெண்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை விரிவுபடுத்தவும், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான முடிவெடுக்கும் செயல்பாடுகளில் பெண்களின் தீவிர பங்களிப்பை உயர்த்தவும் ஒரு முக்கிய படியாகும் எனத் தெரிவித்தார். மேலும், மொழி அறிவுக்குத் தடையாக இருக்கக்கூடாது என்றும், விழிப்பு ணர்வு, சமத்துவம் மற்றும் பங்கேற்பு ஆகியவற்றின் மூலம் அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவது நம் அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் அமைச்சர் அங்கு மேலும் வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் நந்திக்கடலில் புலிகள் எதிர்கொண்ட இறுதிக்கட்ட நிலையிலேயே இப்போது நிற்கின்றது!

தொடர்ச்சி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகத் தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி தனது கொள்கைப் பிரகடனத்திலும் அரசியல் மேடைகளிலும் உறுதியளித்தது. ஆனால், தற்போது அதைவிடவும் கடுமையான பயங்கர வாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினதும் அரசாங்கத் தினதும் மக்கள் ஆதரவு வேகமாகக் குறைந்து வருகின்றது. ஜனாதிபதி சமூக ஊடகங்களில் பதிவிடும் கருத்துகளுக்குப் பெருமளவில் எதிர்மறையான எதிர்வினைகள் கிடைக்கின்றன. உரம் உள்ளிட்ட பிரச்சினைகளால் விவசாயிகள் உட்பட பல்வேறு மக்கள் குழுக்கள் கிராமங்களில் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதனால் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள அடக்குமுறைச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவருகின்றது.

ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னர் நிலக்கரி கொள்வனவு விவகாரம், 323 கொள்கலன்கள் விவகாரம் உள்ளிட்டவற்றில் தொடர்புடைய அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படலாம். அமைச்சர் லால் காந்தவின் மூன்று மாடி வீடு மற்றும் சொத்துக்கள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறலாம். இதனால் தேர்தல் நடவடிக்கைகளை ஒத்திவைத்தாவது அதிகாரத்தைத் தக்கவைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களான சுனில் ஹந்துன்நெத்தி, லால் காந்த உள்ளிட்டோர் தமது கூட்டங்களில் எதிர்காலத்தில் வேறு அரசாங்கம் உருவாகாது எனக் கூறுகின்றனர். எனினும், தற்போதைய மக்கள் விடுதலை முன்னணி அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்கொள்ளும் நிலைமை, 2009ஆம் ஆண்டு நந்திக்கடல் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட இறுதிக்கட்ட நிலைமையை ஒத்ததாகும். இன்னும் சில காலத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு தளர்ந்து, அதற்கு எதிரான சமூக நிலைப்பாடு உருவாகும். சட்டமூலத்தின் மூன்றாவது பிரிவில் அரசியல் நோக்கத்துக்காக அரசாங்கத்தைச் செயற்பட வற்புறுத்துவதும், ஒரு செயலைச் செய்யாமல் தடுக்க வற்புறுத்துவதும் பயங்கரவாதமாக வரையறுக்கப்படுகின்றன. இதனால் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி நடத்தும் அமைதிப் போராட்டங்கள், தோட்டத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்க நடவடிக் கைகள்கூட பயங்கரவாதமாகப் பொருள்கொள்ளப்படலாம்.

அதேவேளை, சமஷ்டி ஆட்சிமுறையைக் கோருவது பயங்கரவாதச் செயற்பாடல்ல என நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்திருந்தார். ஆனால், இலங்கை 30 வருடங்கள் விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டதற்கு, அவர்கள் ஒற்றையாட்சிக்குப் பதிலாக சமஷ்டி ஆட்சிமுறையைக் கோரியதும் ஒரு காரணமாக இருந்தது. சமஷ்டி ஆட்சியைக் கோருவது பயங்கரவாதமல்ல எனக் கூறும் அரசாங்கம், அமைதியான தொழிலாளர் போராட்டங் களைக்கூட இச்சட்டமூலத்தின் கீழ் பயங்கரவாதமாகக் கருதக்கூடிய நிலைமையை உருவாக்குகின்றது.

மேலும், 9, 10, 11ஆம் பிரிவுகள் பயங்கரவாதம் தொடர்பான கருத்துகள் மற்றும் வெளியீடுகளைக் கட்டுப்படுத்தக் கூடியவை. சமூக ஊடகப் பதிவுகள், யூடியூப் கலந்துரை யாடல்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றுக்கும் இச்சட்டம் பயன்படுத்தப்படலாம். இதனால் சுதந்திரமான ஊடகவிய லாளர்கள், புலனாய்வு ஊடகவியலாளர்கள், அரசியல் விமர்சகர்கள் பாதிக்கப்படுவர்.

19, 20, 23, 24 ஆம் பிரிவுகள் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் அதிகாரங்களை வழங்குகின்றன. இராணுவத்தினர் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள் சிவில் சமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான பயிற்சி பொலிஸா ருக்கே உள்ளது. 1988-1989 காலப்பகுதியில் இராணுவத்தின ருக்கும் ஆயுதப்படையினருக்கும் வழங்கப்பட்ட அதிகாரங் களின் விளைவுகளை மக்கள் விடுதலை முன்னணியின் தற்போதைய முக்கியஸ்தர்களும் அனுபவித்துள்ளனர்.

இச்சட்டமூலத்தை எதிர்க்கட்சிகளிடமிருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டமூலம் என்றே அழைக்க வேண்டும். மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்வைத்த ஒன்பது பரிந்துரைகளைக்கூட அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை. சட்டமூலத்தின் கீழ் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் 20 மில்லியன் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படலாம். இச்சட்டமூலத்தைக் கொண்டுவந்தால் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது கப்பலில் இருந்து எரிபொருளை இறக்கி மக்களுக்கு வழங்கவும் முடியாது. எனவே, சட்டமூலத்தை அவசியம் கொண்டுவர வேண்டுமென அரசாங்கம் கருதினால், சர்வதேசப் பரிந்துரைகளையும் சட்ட நிபுணர்களின் கருத்துகளையும் ஆராய்ந்து உரிய திருத்தங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்றார்.

கனேடிய நாடாளுமன்ற வளாகத்தில் தீபாவளித் திருநாள்!

கனடாவின் Ottawa வில் அமைந்துள்ள நாடாளுமன்ற வளாகத்தில் தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.



கனடிய மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெரி ஆனந்தசங்கரி மற்றும் அவரது சக அமைச்சரான அனிதா ஆனந்த் ஆகியோர் இணைந்து இந்த சிறப்பு விழாவை முன்னின்று நடத்தினார்கள்.



விழா குறித்து அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி தனது செய்தியில் குறிப்பிட்டதாவது:

”இருளை நீக்கி ஒளியைத் தரும் நன்னாளாகத் தீபாவளித் திருநாள் அமைகிறது. நாடு முழுவதிலும் இருந்து வருகை தந்த நாடாளுமன்ற சக உறுப்பினர்கள், சமுதாயத் தலைவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து இந்த ஒளியின் திருவிழாவைக் கொண்டாடியது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது,” என்று தெரிவித்தார்.



இந்தச் சிறப்பு நிகழ்வை வெற்றிகரமாக நடத்த உதவிகரமாக இருந்த கலைஞர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கலந்து கொண்ட விருந்தினர்கள் அனைவருக்கும் அவர் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தனது வாழ்த்துச் செய்தியின் நிறைவில், ஆங்கிலம் மற்றும் தமிழில்:

“இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்! (Happy Diwali, Iniya Deepavali Nalvaazhthukka)"

என்று அவர் தனது தீபாவளி வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார்.





46 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்தது குறித்து Gord Krantz

46 ஆண்டுகளுக்குப் பிறகு, Milton நகருக்கு ஒரு புதிய மேயர் கிடைக்கவுள்ளார்.

Ontarioவின் Miton நகரின் மேயராக 46 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, கனடாவின் மிக நீண்ட காலம் பணியாற்றிய மேயர் என்ற Gord Krantz அவர்களின் சாதனைப் பயணம் முடிவுக்கு வந்துள்ளது.

89 வயதான அவர் திங்கள்கிழமை நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தோல்வியடைந்தார். 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு Miton நகருக்கு ஒரு புதிய மேயர் வரவிருப்பது இதுவே முதல் முறையாகும். பதவியிலிருந்து விலகத் தயாராகும் நிலையில், கிராண்ட்ஸ் தனது 60 ஆண்டுகளுக்கும் மேலான நகராட்சி அரசியல் வாழ்க்கையையும், தனது தொழில்முறைப் பயணத்தின் முழுவதும் தனது இல்லமாக இருந்த சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் நினைவுகூருகிறார்.

”இது குறுகிய காலத்திற்கு நிச்சயமாக என் இதயத்தைத் தொட்டுச் சற்றே உருக்கும் என்று நினைக்கிறேன்,” என்று Krantz CTV நியூஸிடம் தெரிவித்தார்.

Krantz மேயராக தொடர்ந்து 15 - வது பதவிக் காலத்தைத் தொடரப் போட்டியிட்டார். 1980-இல் உயரிய பதவியைப் பெறுவதற்கு முன்பு அவர் 15 ஆண்டுகள் நகர மன்ற உறுப்பினராக இருந்தார். இதன் மூலம் நகராட்சி அரசியலில் அவரது மொத்த அனுபவம் 61 ஆண்டுகளாக இருந்தது.

அந்தக் காலத்தில் Miton நகரம் கணிசமாக வளர்ந்தது பல்லாயிரக்கணக்கான புதிய குடியிருப்பாளர்களை வரவேற்றதுடன் வீடுகள், பள்ளிகள் மற்றும் பொது வசதிகளைப் பெருக்கியது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக நகரத்தை வடிவமைக்க உதவிய Krantz, அந்த வளர்ச்சியின் பெரும்பாலான கட்டங்களில் ஒரு நிலையான சக்தியாக இருந்துள்ளார்.

Milton நகருக்கு உயர்கல்வியைக் கொண்டு வந்ததை தனது பெருமைக்குரிய சாதனைகளில் ஒன்றாக அவர் கருதுகிறார். Milton ல் தனது கிளையை அமைக்க Wilfrid Laurier University முதலில் ஆர்வம் காட்டியதாகவும், அதன் பின்னர் onestoga College) அங்குள்ள வாய்ப்புகளைப் பின்தொடர்ந்ததாகவும் Krantz கூறினார். இந்த இரு நிறுவனங்களும் தற்போது மில்டனில் துணை வளாகங்களைக் கொண்டுள்ளன. இது எதிர்வரும் ஆண்டுகளில் நகரத்திற்குப் பயனளிக்கும் என்று அவர் நம்புகிறார்.

”நன்றாகக் கல்வி கற்ற சமூகம் என்பது மிகவும் வளமான சமூகம்,” என்று அவர் கூறினார்.



தனது மறைந்த நண்பரும் Mississauga வின் நீண்டகால மேயருமான Hazel McCallionid பின்னுக்குத் தள்ளி நாட்டின் மிக நீண்ட காலம் பணியாற்றிய மேயர் என்ற சாதனையைப் படைத்தபோது கனடிய நகராட்சி வரலாற்றில் Krantz இன் இடம் உறுதியானது.

இந்த மைல்கல்லைப் பற்றிப் பேசிய முசயவெண, ஆஉஊயடழைனின் பாரம்பரியத்தைத் தொடர்வதில் பெருமையடைவதாகக் கூறினார். ”நான் நீண்ட காலமாக அவரது கிரீடத்தை அணிந்து வருகிறேன், எனவே நம்பிக்கையுடன் அவரது கிரீடத்தை நான் பெருமையுடன் அணிந்திருக்கிறேன்,” என்று அவர் கூறினார்.

நகரத்தின் பல தசாப்த கால மாற்றங்களின் ஊடாக வழிநடத்திய தனது நீண்டகால அனுபவம் இருந்தபோதிலும், புதிய மேயரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களின் முடிவில் தனது வயது ஒரு காரணியாக இருந்திருக்கலாம் என்று கிராண்ட்ஸ் நம்புகிறார். கருமையான முடியுடன் இருக்கும் தனது பழைய பிரசார சுவரொட்டியைப் பார்த்த Krantz, அரசியல் வாழ்க்கை ஒருவருக்கு ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றி நகைச்சுவையாக ”அரசியல் உங்களுக்கு என்ன செய்யும் என்று பாருங்கள். அது உங்கள் முடியை நரைக்க வைத்துவிடும்” என்று கூறினார்.

மேலும், வரவிருக்கும் ஆண்டுகளில் நகரத்தை யார் வழிநடத்துவார்கள் என்பதைப் பற்றி சில வாக்காளர்கள் யோசித்திருக்கலாம் என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

அவரது தோல்வி மில்டனுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது, அங்கு கிராண்ட்ஸின் நீண்டகாலப் பணி அவரை உள்ளூர் அரசியலில் மிகவும் அறிமுகமான ஒரு நபராக மாற்றியிருந்தது. நீண்டகாலமாக மேயராக இருந்தவரை எதிர்த்துப் போட்டியிட்ட எவருக்கும் இது எவ்வளவு சவாலானது என்பதை அவரது பின்வந்தவரே ஒப்புக்கொண்டார்.

“நீங்கள் Krantz டை எதிர்த்துப் போட்டியிட்டால் அது ஒரு நம்பிக்கையற்ற விஷயம் அப்படித்தான் எப்போதும் பார்க்கப்பட்டது,” என்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் George Minakakis கூறினார்.

Krantz தனது பல தசாப்த கால சேவைக்காகவும், சமூகத்துடன் அவர் உருவாக்கிய பிணைப்பிற்காகவும் அங்கீகாரத்திற்குத் தகுதியானவர் என்று ஆயெபய கூறினார்.

”இந்த மனிதர் மிகுந்த மரியாதைக்குரியவர். இந்தச் சமூகத்தில் 60 பிளஸ் ஆண்டுகள் சேவை செய்துள்ள அவர், இந்தச் சமூகத்தால் எப்போதும் நேசிக்கப்படுவார், எப்போதும் மதிக்கப்படுவார்,” என்று அவர் கூறினார்.

குடியிருப்பாளர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள முயற்சி செய்ததே தனது வெற்றிக்கு மிக முக்கியக் காரணம் என்று தான் நம்புவதாகக் முசயவெண கூறினார். அவர் மக்களை நினைவில் வைத்துக்கொள்ளவும், உரையாடல்களுக்கு நேரம் ஒதுக்கவும், தொகுதி மக்கள் தங்களை மதிக்கப்படுவதாக உணர்வதை உறுதி செய்யவும் முயன்றார்.

பதவியிலிருந்து விலகத் தயாராகும் நிலையில், Krantz தனது வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவழித்த இடத்தைப் பார்க்க வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. நகர மண்டபம் அவரது வீட்டிலிருந்து சில அடிகளிலேயே உள்ளதுடன், அவரது வரவேற்பறை ஜன்னல் வழியாகவே தெளிவாகத் தெரிகிறது.

”நகர மண்டபம் என் முன் முற்றத்திலேயே உள்ளது,” என்று அவர் கூறினார்.

மில்டனுக்காக பல தசாப்தங்களாகப் பெரிய முடிவுகளை எடுத்த பிறகு, இந்த முறை அதன் மக்கள் தனக்காக ஒரு பெரிய முடிவை எடுத்துள்ளனர் என்பதை Krantz ஒப்புக்கொண்டார்.

”பொதுமக்கள், “Krantz, நீங்கள் ஒருவேளை நல்ல வேலை செய்திருக்கலாம். ஆனால் நீங்கள் ஓய்வு பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்“ என்று கூறியுள்ளனர். எனவே நான் ஓய்வு பெறுவதற்குப் பதிலாக, அவர்களே என்னை ஓய்வு பெற வைத்துவிட்டார்கள்,” என்று அவர் கூறினார்.

மேயர் நாற்காலியைக் கையளித்தாலும், தான் இன்னும் சாய்வு நாற்காலியில் அமரத் தயாராக இல்லை என்பதால், பொதுமக்கள் தன்னைத் தொடர்ந்து வெளியே காண்பார்கள் என்று Krantz கூறுகிறார்.

இலங்கையின் சமூக ஊடகங்களில் குழந்தைகள் சுரண்டப்படுவதைத் தடுக்க புதிய வழிகாட்டுதல்கள்!



சமூக ஊடகங்கள் மூலம் வணிக ரீதியான லாபம் மற்றும் இணையப் பிரபலத்தைப் பெறுவதற்காகக் குழந்தைகள் பயன்படுத்தப்படும் Kidfluencing என்ற நடைமுறையைத் தடுக்கும் வகையில், இலங்கை புதிய வழிகாட்டுதல்களை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

குழந்தைகளுக்கு உகந்த ஊடக கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகார சபையுடன் (NCPA) இணைந்து மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு இந்த வழிகாட்டுதல்களை இறுதிக்கட்டத்திற்கு கொண்டு வந்துள்ளதாக அமைச் சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

நிபுணர்கள் குழுவினால் வரைவு செய்யப்பட்டுள்ள இந்த வழிகாட்டுதல்கள், மிக விரைவில் அமல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இணையத்தில் கவனம் ஈர்ப்பதற்காகவும் வருமானம் ஈட்டுவதற்காகவும், பெற்றோர்கள் மற்றும் பெரியவர்கள் ஆபத்தான நடவடிக்கைகள், ஆபாசமான விஷயங்கள் மற்றும் பெரியவர்களுக்கான உள்ளடக்கங்களில் குழந்தைகளை ஈடுபடுத்துவது குறித்த கவலைகளுக்கு மத்தியிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





புகழ் அல்லது நிதிப் பலன்களைப் பெறுவதற்காகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இதுபோன்ற ஆபத்துகளுக்கு உள்ளாக்க உரிமை இல்லை என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், குழந்தைகளின் தனியுரிமை மற்றும் நலன் கண்டிப்பாகப் பாதுகாப்பபட வேண்டும் என்று வலியுறுத்தினார். பொறுப்பற்ற சமூக ஊடக நடைமுறைகள் மூலம் கடுமையான ஆபத்தில் தள்ளப்படும் குழந்தைகள், பாதுகாப்பற்றவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு தலையீடுகள் தேவைப்படலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

சர்வதேச அளவில், சமூக ஊடகங்களில் குழந்தைகள் வணிக ரீதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கப் பல்வேறு நாடுகள் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி வருகின்றன. பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் போன்றவை, இணைய உள்ளடக்கங்களில் குழந்தைகளின் பங்களிப்பு மற்றும் அத்தகைய செயல்பாடுகள் மூலம் ஈட்டப்படும் வருமானத்தைக் கையாள்வது தொடர்பாகச் சட்டப் பாதுகாப்புகளைப் பின்பற்றி வருகின்றன.



குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக அவர்களின் வருமானத்தைப் பாதுகாப்பதற்கானத் தேவைகள் மற்றும் உள்ளடக்க தயாரிப்பில் அவர்களின் பங்களிப்புக்கான கட்டுப்பாடுகள் ஆகியவை இத்தகைய சில நடவடிக்கைகளில் அடங்கும். இலங்கையும் இளஞ்சிறார்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் மற்றும் குழந்தைகள் தொடர்பான சமூக ஊடக நடைமுறைகளில் அதிகப் பொறுப்புணர்வைக் கொண்டுவரும் ஒரு சட்டக் கட்டமைப்பை ஏற்படுத்த இலக்கு வைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இனப்படுகொலையின் வடுக்கள் இன்னமும் ஆறவில்லை என கனடா நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

இலங்கை தமிழர்களின் நீதிக்கான குரல் செவிசாய்க்கப்படாமல் போய்விடக்கூடாது என கனடாவின் கொன்சவேர்ட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுவ் மஜும்தார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இலங்கையின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சிவஞானத்தினை வரவேற்பதில் எனது சக நாடாளுமன்ற உறுப்பினர் கொஸ்டாஸ் மெனெகாக்கிசுடன் இணைந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

போர் முடிவடைந்து 17 ஆண்டுகளாகியுள்ள போதிலும் இனப்படுகொலையின் வடுக்கள் இன்னமும் மாறாமல் உள்ளன. குடும்பங்கள் இன்னமும் காணாமலாக்கப்பட்டவர்களை தேடி வருகின்றன. காணிகளும் வாழ்வாதாரங்களும் இன்னமும் மீள கையளிக்கப்படவில்லை. பொறுப்புக்கூறல் என்பது இன்னமும் எட்டப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இலங்கைக்கு வெளியே மிகப்பெரிய தமிழ் சமூகங்கள் வாழுமிடமாக கனடா காணப்படுகின்றது, பல கனடியர்களுக்கு இந்த வாழ்வு ஒருதனிப்பட்ட அனுபவமாகும்.

தமிழ்மக்கள் நீதி பொறுப்புக்கூறல் மற்றும் கண்ணியத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட எதிர்காலம் ஆகியவற்றுக்கு தகுதியானவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கனடா வலியுறுத்தவேண்டிய குரல்கொடுக்கவேண்டிய விடயங்கள் இவை, தமிழ்மக்களின் நீதிக்கான குரல் செவிசாய்க்கப்படாமல் போய்விடக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.



முதன்மை வட்டி விகிதத்தை உயர்த்தியது Bank of Canada: மற்றொரு உயர்வுக்கும் வாய்ப்பு?



Bank of Canada புதன்கிழமை அன்று, மூன்று ஆண்டுகளுக்கு மேலான காலத்தில் முதன் முறையாக தனது முக்கிய கொள்கை வட்டி விகிதத்தை உயர்த்தியது. மேலும், உயர்ந்து வரும் எரிபொருள் செலவுகள் பரவலான பணவீக்கத்தைத் தூண்டுவதைத் தடுக்க மேலும் வட்டி விகித அதிகரிப்புகள் தேவைப்படலாம் என்றும் கூறியுள்ளது.

வங்கி, பரவலாக எதிர்பார்க்கப் பட்டபடியே, வட்டி விகிதத்தை 25 Basis points உயர்த்தி 2.5 சதவீதமாக ஆக்கியுள்ளது.

மேலும் 2027 ஆம் ஆண்டிற்கான தனது பணவீக்கக் கணிப்பை, ஜூலை மாதத்தில் கணித்த 2.0 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி ஜூலையில் எதிர்பார்க்கப்பட்ட 0.7 சதவீதத்தை விட அதிகமாக 1.0 சதவீதமாக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. "பணவீக்கத்தின் தொலை நோக்கு கணிப்பு கணிசமாக அதிகமாக இருப்பதாலும், பொருளாதாரம் மீள்தன்மையைக் காட்டுவதாலும், உயர்ந்த எரிபொருள் விலைகள் பிற துறைகளுக்கும் பரவி பொதுவான பணவீக்கமாக மாறுவதைக் குறைக்க கொள்கை விகிதத்தை உயர்த்துவது அவசியமாகிறது," என்று செய்தியாளர்களிடம் பேசிய தொடக்க உரையில் ஆளுநர் Tiff Macklem கூறினார்.

"கொள்கை விகிதத்தை இன்னும் உயர்த்த வேண்டிய தேவை இருக்கலாம், ஆனால் நிச்சயமற்ற சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நாங்கள் கவனமாகச் செயல்படுவோம்."

ஆண்டு பணவீக்க விகிதம் செப்டம்பரில் 3.2 சதவீதத்தை எட்டியது. இது வங்கியின் 1-3 சதவீத இலக்கு வரம்பிற்கு மேல் உள்ளது. இதற்கு முக்கியமாக உயர் எரிபொருள் செலவுகள் மற்றும் எரிபொருள் சார்ந்த போக்குவரத்துச் செலவுகளே காரணமாகும்.

வுகைக Macklem கூறுகையில், பணவீக்கம் ஆண்டின் இறுதியில் 3.5 சதவீதத்தை எட்டும் என்றும், அடுத்த ஆண்டின் பெரும்பகுதிக்கு மூன்று சதவீதத்தை ஒட்டி இருக்கும் என்றும், 2028 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் இரண்டு சதவீத இலக்கை அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்றார். "பணவீக்கத்திற்கான அபாயங்கள் அதிகரித்துள்ளன என்றும், பணவியல் தளர்வுக்கான வாய்ப்புகள் குறைந்துள்ளன என்றும் ஆளநர் குழு ஒப்புக் கொண்டது," என்று Tiff Macklem கூறினார்.



இந்த வட்டி விகித உயர்வு ஜூலை 2023 க்குப் பிறகு முதன்முறையாகவும், கடந்த ஒரு வருடத்தில் நிகழ்ந்த முதல் மாற்றமாகவும் உள்ளது. இந்த உயர்வு இருந்தபோதிலும், வட்டி விகிதமானது நடுநிலை விகிதத்தை விடக் குறைவாகவே உள்ளது. நடுநிலை விகிதம் என்பது பணவியல் கொள்கையில் கட்டுப்பாடானதாகவோ அல்லது தளர்வானதாகவோ கருதப்படாத ஒரு நிலையாகும். கடந்த கால அனுபவங்களும் பாங்க் ஆ.்.ப் கனடாவின் ஆய்வுகளும், செலவுப் பகிர்வு (cost pass-through) அடுத்த ஆண்டில் அதிகரிக்கும் என்றும், இது ஒட்டுமொத்த பணவீக்கத்தை உயர்த்தும் என்றும் காட்டுவதாக மேக்லெம் கூறினார்.

"அதிகரித்த எரிபொருள் விலைகள் மற்றும் செலவுப் பகிர்வு ஆகியவற்றின் சேர்க்கை பணவீக்கத்தின் நீடித்த தன்மையை அதிகரிக்கிறது," என்று அவர் கூறினார். இருப்பினும் அமெரிக்காவுடனான வர்த்தக மோதல் மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் மோதலுக்கு விரைவான தீர்வு காணப்படுவது போன்ற தணிவடையாத நிச்சயமற்ற தன்மைகளும் உள்ளன என்று அவர் மேலும் சேர்த்துக் கொண்டார். வட்டி விகித உயர்வை எதிர்த்த பொருளாதார நிபுணர்கள் மாறுபடும் விலைகளைக் கொண்ட பொருட்களைத் தவிர்த்து கணக்கிடப்படும் மையப் பணவீக்கம் இன்னும் இரண்டு சதவீதத்தைச் சுற்றியே உள்ளது என்று கூறினர். மேலும், அமெரிக்க வர்த்தக பதற்றங்கள் மற்றும் பலவீனமான வேலைவாய்ப்பு சந்தையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்த வட்டி விகித உயர்வு மிதமான பொருளாதார மீட்சியையும் பாதிக்கலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

புதிய அமெரிக்க வரிக் கொள்கைகள் நான்காவது காலாண்டில் பொருளாதாரத்தை மந்தப்படுத்தும் என்று Tiff Macklem கூறினார் ஆனால் நுகர்வோர் செலவு தொடர்வதாலும் ஏற்றுமதிகள் அதிகரிப்பதாலும், வணிக முதலீடுகள் வலுப்பெறுவதாலும் 2027 இல் வளர்ச்சி மீண்டும் வேகம் பிடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இரண்டாவது காலாண்டில் 3.3 சதவீத வலுவான வருடாந்திர வளர்ச்சிக்குப் பிறகு பொருளாதாரம் மூன்றாவது காலாண்டில் இரண்டு சதவீதமாகவும் நான்காவது காலாண்டில் 0.8 சதவீதமாகவும் குறையக்கூடும் என்று பாங்க் ஆ.்.ப் கனடாவின் புதிய பணவியல் கொள்கை அறிக்கை கணித்துள்ளது.

இருப்பினும் இந்த அறிக்கை ஜூலையில் 2027 மற்றும் 2028 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் கணித்த 1.8 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை 2 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இந்த கூடுதல் வளர்ச்சி, பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் வளங்களை.்திறன்களை உறிஞ்ச உதவும் என்று Tiff Macklem கூறினார்.

BEHIND ME MEDIA

Bank of Canada வட்டி விகித உயர்வை கடுமையாக விமர்சித்தார் முதல்வர் Doug Ford!



பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக Bank of Canada புதன்கிழமை அன்று, ஜூலை 2023க்குப் பிறகு முதன்முறையாகத் தனது முக்கிய வட்டி விகிதத்தை உயர்த்தியது. இந்த உயர்வை ழுவெயசழை முதல்வர் Doug Ford "ஒரு மாபெரும் தவறு" என விமர்சித்துள்ளார்.

"உயர் வட்டி விகிதங்கள் ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக எண்ணெயைக் கொண்டு செல்லப்போவதில்லை அல்லது கனடிய வணிகங்கள் மீதான வரிகளைக் குறைக்கப்போவதில்லை. அவை கனடியக் குடும்பங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வாழ்க்கையை மேலும் செலவுமிக்கதாக ஆக்கி, அவர்களின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு விஷயத்திற்காக அவர்களைத் தண்டிக்கும்," என்று இன்று காலை இந்த அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் .்.போர்டு தனது ஓ (ட்விட்டர்) பதிவில் எழுதியிருந்தார்.

வங்கி தனது முக்கிய கொள்கை விகிதத்தை 25 அடிப்படை புள்ளிகள் உயர்த்தி 2.5 சதவீதமாக ஆக்கியுள்ளது. ஈரானில் நடக்கும் போர் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் வர்த்தகப் போர் ஆகியவற்றால் ஓரளவு உருவான அதிக எண்ணெய் விலைகள் மற்றும் உயரும் பணவீக்கம் ஆகியவற்றின் பின்னணியில் இந்த நடவடிக்கை பரவலாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும்.

2027 ஆம் ஆண்டிற்கான அதன் பணவீக்கக் கணிப்பும் ஜூலையில் கணித்த இரண்டு சதவீதத்திலிருந்து 3.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், கனடிய பொருளாதாரம் 2026 இல் ஒரு சதவீதமும் 2027 இல் இரண்டு சதவீதமும் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கோடையில் கணிக்கப்பட்டதை விட "சிறிது" வலுவான ஒட்டுமொத்த வளர்ச்சி முன்னறிவிப்பாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, எதிர்காலத்தில் மீண்டும் வட்டி விகிதத்தை உயர்த்த வேண்டி வரலாம் என்றும் வங்கி கூறியுள்ளது.

"இந்த பின்னணியில், தொடர்ந்து உயர்ந்து வரும் எரிபொருள் விலைகள் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளுக்கும் பரவலாகப் பரவும் அபாயத்தைக் குறைப்பதற்காகக் கொள்கை விகிதத்தை உயர்த்த ஆளுநர் குழு முடிவு செய்தது. கொள்கை விகிதத்தை இன்னும் உயர்த்த வேண்டிய தேவை இருக்கலாம், ஆனால் நிச்சயமற்ற சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, கவனமாகச் செயல்பட ஆளுநர் குழு ஒப்புக்கொண்டது" என்று அதிகாரிகள் ஒரு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை மாகாணத்தின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ள ஒன்டாரியோ நிதிமைச்சர் Peter Bethlenfalvy, எதிர்பார்க்கப்படும் வட்டி விகித உயர்வுக்கு மிதமான எதிர்வினையையே வெளிப்படுத்தினார், ஆனால் .்.போர்டின் பார்வையைத் தான் புரிந்துகொள்வதாகக் கூறினார்.

"உயர் வட்டி விகிதங்களின் தாக்கங்களை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், குறைந்த வட்டி விகிதங்களுக்காக யார் தான் குரல் கொடுக்க மாட்டார்கள்? ஆனால் இறுதியில், Bank of Canada என்பது அனைத்து உண்மைகளையும் தன்வசம் வைத்துள்ள ஒரு சுயாதீனமான அமைப்பாகும், மேலும் பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் முக்கியமானது," என்று வட்டி விகித உயர்வு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் நடந்த தொடர்பில்லாத செய்தியாளர் சந்திப்பில் அவர் சிடிவி நியூஸிடம் கூறினார்.

எளிய சொற்களில் கூறுவதானால், பொருளாதாரம் மிக வேகமாக வளர்ந்தால், அது பணவீக்கம் உயர வழிவகுக்கும் என்று பாங்க் ஆ.்.ப் கனடா விளக்குகிறது. விகிதத்தை உயர்த்துவது, மக்களும் வணிகங்களும் கடன் மற்றும் அடமானங்களுக்கு அதிக வட்டியைச் செலுத்துவதற்கு வழிவகுக்கிறது, மேலும் அவர்கள் கடன் வாங்குவதைத் தடுக்கிறது, அவர்களின் செலவினங்களைக் குறைக்கிறது மற்றும் பணவீக்கத்திற்குக் தடை போடுகிறது என்றார்.



வேண்டிய வரங்கள் யாவும் தரும் கந்த சஷ்டி விரதம்!

ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கந்த சஷ்டி விரதத்தை மிகச்சிரத்தையோடு அனுஷ்டித்து வருகின்றனர்.

முரகன் பக்தர்கள் நெஞ்சார எதிர்பார்த்துக் காத்திருக்கும் அதிஅற்புதமான விரதம் மகா கந்தசஷ்டி விரதம். கந்தசஷ்டி நாளில் விரதமிருந்து கந்தக்கடவுளை மனமுருகி வழிபட்டால், தீராத வினைகளெல்லாம் தீர்ந்து, வேண்டிய வரங்கள் யாவும் கிடைக்கும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இப்புனித விரதத்தை மிகச்சிரத்தையோடு அனுஷ்டித்து வருகின்றனர்.

“சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்” (சஷ்டியில் இருந்தால் அகப்பையாகிய கருப்பையில் குழந்தை வளரும்) என்ற ஆன்மீகப் பழமொழிக்கு ஏற்ப, கந்தசஷ்டி விரதமிருந்து எண்ணற்ற தம்பதியர் குழந்தை பாக்கியம் பெற்றுள்ளனர். அதனால் தான், குழந்தை பாக்கியத்திற்காகக் காத்திருக்கும் தம்பதியர் பலரும் இச்சஷ்டி விரதத்தை தவறாமல் கடைபிடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

பொதுவாக முருகப்பெருமானுக்கு கிருத்திகை, மாதந்தோறும் வரும் சஷ்டி, தைப்பூசம், வைகாசி விசாகம், செவ்வாய் கிழமைகள் உகந்த நாட்களாகும். மாதந்தோறும் வளர்பிறை, தேய்பிறை என இரண்டு முறை சஷ்டி திதி வந்தாலும் ஐப்பசி மாத அமாவாசைக்கு அடுத்த நாள் (பிரதமை) தொடங்கி, ஆறாவது நாளை மகா கந்தசஷ்டி விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம்.

அதன்படி, ஐப்பசி மாதத்தில் மட்டும் சஷ்டி முந்தைய ஆறு நாட்களும் பக்தர்கள் மிக கடுமையாக விரதம் இருந்து, முருகனை மனமுருக வேண்டிக்கொண்டு, சூரசம்ஹாரம் நிறைவடைந்து, மறுநாள் முருகன்- தேவயாணை திருக்கல்யாணம் நிறைவடைந்த பிறகு பக்தர்கள் தங்களின் விரதத்தை நிறைவு செய்வது வழக்கம். இந்த வகையில் இந்த ஆண்டுக்கான மகா கந்தசஷ்டி விரதம் வரும் நவம்பர் 10-ம்தேதி செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது.

முக்கிய தேதிகள் : விரதம் தொடக்கம் (6 நாட்கள்): நவம்பர் 10-ம்தேதி (செவ்வாய்க்கிழமை), சூரசம்ஹாரம்: நவம்பர் 15-ம்தேதி (ஞாயிற்றுக் கிழமை), திருக்கல்யாணம்: நவம்பர் 16-ம்தேதி (திங்கட்கிழமை)

பல்வேறு விரத நாட்கள் : கந்த சஷ்டி விரதத்தை பக்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணிக்கையில் அனுஷ்டிப்பார்கள். அந்த வகையில்,

48 நாட்கள் (மண்டல விரதம்): செப்டம்பர் 29-ம்தேதி (செவ்வாய்) தொடங்குகிறது.
21 நாட்கள் விரதம்: அக்டோபர் 26-ம்தேதி (திங்கள்) தொடங்குகிறது.
11 நாட்கள் விரதம்: நவம்பர் 5-ம்தேதி (வியாழன்) தொடங்குகிறது.
6 நாட்கள் விரதம்: நவம்பர் 10-ம்தேதி (செவ்வாய்) தொடங்குகிறது.
1 நாள் விரதம் (சூரசம்ஹார நாள் மட்டும்): நவம்பர் 15-ம்தேதி (ஞாயிறு).

கந்த சஷ்டி விரதத்தின் சிறப்புகள்: மகா சங்கல்பம்: ஆறு நாட்கள் தொடர்ந்து உபவாசமிருந்து, மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தி முருகனை வழிபடும் தீவிரமான விரத முறை இதுவாகும். சூரசம்ஹாரம்: தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டிய முருகப்பெருமானின் வீர வரலாற்றைக் கொண்டாடும் நாளாகும்.

கந்த சஷ்டி 6 நாள் விரத முறை: பொதுவாக கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிப்பவர்கள் விரதம் அனுஷ்டிக்கும் ஆறு நாட்களும் அதிகாலையில் நீராடி, கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்து, பகலில் உணவின்றி அல்லது பால்-பழம் மட்டும் உண்டு விரதமிருக்க வேண்டும். ஆறாம் நாள் சூரசம்ஹாரத்திற்கு பிறகு ஒரு டம்ளர் பால் அருந்தி விரதம் முடிக்கலாம், அல்லது ஏழாம் நாள் திருக்கல்யாணத்தன்று பாரணை செய்யலாம்.

விரதம் தொடங்கும் நாள் (நவம்பர் 10) : விரதம் அனுஷ்டிக்கும் 6 நாட்களும் அதிகாலையில் (6:00 மணிக்குள்) குளித்து, காப்பு கட்டி, கலசம் வைத்து முருகனுக்கு பிடித்த அரளி பூ சாற்றி, வைவேத்தியம் படைத்து வழிபட வேண்டும்.

முழு விரதம்: 6 அல்லது 7 நாட்களும் உணவு எதுவும் உட்கொள்ளாமல், வெறும் நீர் மட்டும் அருந்தி விரதம் இருப்பது (உடல் வலிமை உள்ளவர்கள் மட்டும்).
பால் மற்றும் பழ விரதம்: காலை மற்றும் மாலையில் பால், பழங்கள் மட்டும் சாப்பிடுவது அல்லது நாள் முழுவதும் பால் அருந்தி விரதம் இருப்பது.
ஒரு வேளை உணவு: பகல் அல்லது மதிய வேளையில் மட்டும் எளிய சைவ உணவு (பச்சரிசி சாதம், தயிர் சாதம் அல்லது காய்கறிகள்) உட்கொள்வது.
திரவ மற்றும் சிறப்பு விரதங்கள்: இளநீர், துளசி நீர் அருந்துவது அல்லது முதல் நாள் 1 மிளகு என தொடங்கி 7 நாளில் 7 மிளகு மட்டும் உட்கொள்ளும் மிளகு விரதம். உடல் நலப்பிரச்சனை உள்ளவர்கள்: நீண்ட காலம் மருந்து சாப்பிடுபவர்கள் அல்லது உடல் நலம் சரியில்லாதவர்கள் முழு பட்டினி இருக்காமல், ஒரு வேளை உணவு அல்லது பால்-பழம் விரதம் இருப்பது நல்லது.

ஒரே முறை: கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் பக்தர்கள் 7 நாட்களும் ஒரே விதமான விரத முறையத் தொடர்ந்து பின்பற்றுவது சிறப்பு.

வழிபாடு: காலை மற்றும் மாலை வேளைகளில் கந்த சஷ்டி கவசம், சுப்பிரமணிய புஜங்கம், முருகனுக்கு உகந்த ஸ்லோகங்களை பாராயணம் செய்து தீபாராதனை காட்ட வேண்டும். தினமும் காலை, மாலையில் முருகன் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்யவேண்டும். பாரணை நேரம் (விரதம் முடித்தல்) : சூரசம்ஹார நாள் : கந்த சஷ்டி ஆறாம் நாள் சூரசம்ஹாரம் முடிந்த பிறகு குளித்துவிட்டு, முருகனுக்கு நைவேத்தியம் செய்துவிட்டு 1 டம்ளர் பால் அல்லது பழங்கள் அருந்தி விரதத்தை நிறைவு செய்யலாம். (6 நாட்கள் விரதம் இருப்பவர்கள்) திருக்கல்யாண நாள் : 7 நாட்கள் முழுமையான விரதம் இருப்பவர்கள், கந்த சஷ்டி விரதத்தின் 7-ம் நாள் காலை முருகப்பெருமான் திருக்கல்யாண தரிசனம் முடித்த பிறகு பிரசாதம் அல்லது முறையான உணவருந்தி (அன்னதானம்) பாரணை செய்வர்.

அனைத்துலகத் தமிழர் பேரவையின் உலகளாவிய தமிழர் பொருளாதார மற்றும் சமூக வலையமைப்பு அறிமுகம்

அனைத்துலகத் தமிழர் பேரவை உலகத் தமிழர்களின் அறிவு, ஆற்றல், தொழில்சார் அனுபவம் மற்றும் பொருளாதார வளங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில், உலகளாவிய தமிழர் பொருளாதார மற்றும் சமூக வலையமைப்பையும் (Global Tamil Economic and Social Network), அதன் ஒருங்கிணைப்புக் குழுவையும் அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது.

உலகெங்கிலும் வாழும் தமிழ்ப் பேராசிரியர்கள், பொருளாதார நிபுணர்கள், தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், தொழில்சார் வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களை ஒன்றிணைத்து, பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், தொழில்முனைவையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குதல், சமூக மேம்பாட்டை முன்னெடுத்தல் ஆகியவை இவ்வலையமைப்பின் முக்கிய நோக்கங்களாகும்.

குறிப்பாக, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கும், உலகளாவிய ரீதியில் பொருளாதார மற்றும் சமூக ரீதியாகப் பின்தங்கியுள்ள தமிழ்ச் சமூகங்களின் மேம்பாட்டிற்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஆரம்பகட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் அறிமுகப்படுத்தப்படுகின்றனர்:

முனைவர் இரா. சீனிவாசன் – பொருளாதார மற்றும் பொதுக் கொள்கை நிபுணர், தமிழ்நாடு, இந்தியா.

சிவராஜா இராமநாதன் – தொழில்முனைவோர், ளுவயசவரிவுமே முன்னாள் தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு, இந்தியா.

பேராசிரியர் க. அமிர்தலிங்கம் – கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை.

பேராசிரியர் இ. ஆ. செல்வநாதன் – கிரி.்பித் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா.

பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் – வவுனியா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், இலங்கை.

பேராசிரியர் ஜெயப்பிரபா சுரேஷ் – கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

திரு. உமேஷ் வல்லிபுரம், CPA, CA – நிதி மற்றும் நிறுவன அபிவிருத்தி நிபுணர், கனடா.

இவ்வாரம்பக் குழுவினர் இணைந்து வலையமைப்பின் செயற்பாட்டுத் திட்டங்களையும் முன்னுரிமைகளையும் வகுப்பதுடன், பல்வேறு நாடுகளிலிருந்து மேலும் துறைசார் நிபுணர்களையும் தொழில்சார் வல்லுநர்களையும் இணைத்து, ஒருங்கிணைப்புக் குழுவை விரிவுபடுத்தவுள்ளனர்.

இம்முயற்சி தொடர்பாக அனைத்துலகத் தமிழர் பேரவையின் தலைவர் நிமல் விநாயகமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்,

“உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழர்களின் அறிவு, அனுபவம், திறமை மற்றும் பொருளாதார வளங்களை ஒன்றிணைத்து, அவற்றை நடைமுறைச் செயற்பாடுகளாக மாற்றுவதே எமது நோக்கமாகும்.



உலகளாவிய தமிழர் புலம்பெயர் சமூகமாகிய எமது உள்ளங்களில், இலங்கையின் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழர்களுக்கும், உலகின் பல்வேறு பகுதிகளில் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளையும் இன்னல்களையும் எதிர்கொள்ளும் தமிழர்களுக்கும் தனித்துவமான இடமுண்டு.

அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும், பொருளாதாரத் தற்சார்பையும் சமூக வலுவூட்டலையும் உறுதிப்படுத்துவதும் எமது முக்கிய முன்னுரிமைகளாகும்.

வெறுமனே தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் நின்றுவிடாமல், முதலீடுகள், தொழில்முனைவு, வேலைவாய்ப்புகள் மற்றும் சமூக மேம்பாட்டின் ஊடாகத் தமிழ்ச் சமூகங்களின் பொருளாதார வலுவூட்டலை முன்னெடுக்க விரும்புகிறோம்.”

எனத் தெரிவித்தார்.



உலகளாவிய தமிழர் சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து செயற்பட விரும்பும் அனைத்து நிபுணர்கள், தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளையும் இவ்வலையமைப்பில் இணைந்துகொள்ளுமாறு அனைத்துலகத் தமிழர் பேரவை அழைப்பு விடுக்கிறது.







3-11-2026

நவமி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 12 தியாஜ் என குறிப்பிடும் வேளையில் இருந்து மூன்றே முக்கால் நாழிகை சுப காரியம் தவிர்க்கவும். நவமி மா.03.23 வரை, பின்பு தசமி - ஆயில்யம் கா.07.49 வரை, பின்பு மகம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 17 | NOV - TUE செவ்வாய் | ஜமாஅத்துல் அவ்வல் 22 | தேய்பிறை 307 / 058

தேய். நவமி 23.17 (மா. 03.23) ஆயில்யம் 04.23 (கா. 07.49) தியாஜ் 33.10 சித்த யோகம். பத்தமடை ஸ்ரீமீனாட்சி அம்மன், சங்கரன்கோவில் ஸ்ரீகோமதி அம்மன் புறப்பாடு கண்டருளல். திருநெல்வேலி ஸ்ரீகாந்திமதி ரதோத்ஸவம். உத்திரமாயூரம் வள்ளலார் சன்னதியில் ஸ்ரீசந்திரசேகரர் புறப்பாடு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	03.00	12.00	09.00
மாலை: 4.45-5.45	7.30-8.30	04.30	01.30	10.30

சூலம் : வடக்கு
பரிகாரம் : பால்

துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 20

சந்திராஷ்டமம் உத்திராடம்

கரணம்: 7.30-9 சூரிய உதயம் : 6.04

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | கீழ் | திதி நவமி

எல்லோருக்கும் நண்பன் யாருக்கும் நண்பன் அல்ல

இராசிபலன்

மேஷம் - வெற்றி
ரிஷபம் - தனம்
மிதுனம் - ஒய்வு
கடகம் - மறதி
சிம்மம் - சினம்
கன்னி - உற்சாகம்
துலாம் - நிறைவு
விருச்சி - செலவு
தனுசு - எதிர்ப்பு
மகரம் - நன்மை
கும்பம் - பொறுமை
மீனம் - லாபம்

4-11-2026

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 13 விநாயகரை வழிபட்டு சுபகாரியம் துவங்கவும், தடைகள் நீங்கவும் உகந்த புதன் கிழமை இன்று. தசமி மா.01.51 வரை, பின்பு ஏகாதசி - மகம் கா.06.51 வரை, பின்பு பூரம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 18 | NOV - WED புதன் | ஜமாஅத்துல் அவ்வல் 23 | தேய்பிறை 308 / 057

தேய். தசமி 19.24 (மா. 01.51) மகம் 01.56 (கா. 06.51) தியாஜ் 21.25 சித்த 01.56 மேல் அமிர்த யோகம். வீரவநல்லூர் மரகதாம்பிகை, கோவில்பட்டி செண்பகவல்லி அம்மன் பவனி. நெல்லை காந்திமதியம்மன் தீர்த்தம். தங்கச் சப்பரத்தில் தபசுக் காட்சி. நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 9.15-10.15	10.45-11.45	12.00	10.30	07.30
மாலை: 4.45-5.45	6.30-7.30	01.30	12.00	09.00

சூலம் : வடக்கு
பரிகாரம் : பால்

துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 10

சந்திராஷ்டமம் திருவோணம்

கரணம்: 6-7.30 சூரிய உதயம் : 6.05

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | கீழ் | திதி திதித்துவயம்

முதுமை ஆராயும் இளமை துணியும்

இராசிபலன்

மேஷம் - திடம்
ரிஷபம் - மறதி
மிதுனம் - எதிர்ப்பு
கடகம் - நலம்
சிம்மம் - வெற்றி
கன்னி - தடங்கல்
துலாம் - ஆசை
விருச்சி - நட்பு
தனுசு - ஈகை
மகரம் - சுகம்
கும்பம் - வரவு
மீனம் - பரிசு

5-11-26

சர்வ ஏகாதசி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 14 ஆன்மிக முன்னேற்றம், மணத்தூய்மை பெற - அனைவருக்கும் ஏற்ற, பெருமாளுக்கு உகந்த ஏகாதசி விரதம். ஏகாதசி மா.12.41 வரை, பின்பு துவாதசி - பூரம் கா.06.17 வரை, பின்பு உத்திரம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 19 | NOV - THU வியாழன் | ஜமாஅத்துல் அவ்வல் 24 | தேய்பிறை 309 / 056

தேய். ஏகாதசி 16.27 (மா. 12.41) பூரம் 00.27 (கா. 06.17) உத்திரம் 59.02 (கா. 05.43) தியாஜ் 18.10 சித்த 00.27 மேல் மரண 59.02 மேல் அமிர்த. **சர்வ ஏகாதசி**. திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் விருஷபஸேவை. கம்பை ஆற்றில் கதிர் குளித்தல். ஆயிரங்கால் மண்டபத்தில் திருக்கல்யாணம்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 10.45-11.45	----------	01.30	09.00	06.00
மாலை: 12.00-1.00	6.30-7.30	03.00	10.30	07.30

சூலம் : தெற்கு
பரிகாரம் : தைலம்

துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 00

சந்திராஷ்டமம் அவிட்டம்

கரணம்: 3-4.30 சூரிய உதயம் : 6.06

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | மேல் | திதி துவாதசி

எல்லா முட்டையிலும் குஞ்சு வருவதில்லை

இராசிபலன்

மேஷம் - மறதி
ரிஷபம் - நலம்
மிதுனம் - வரவு
கடகம் - வெற்றி
சிம்மம் - பெருமை
கன்னி - கோபம்
துலாம் - லாபம்
விருச்சி - அன்பு
தனுசு - உயர்வு
மகரம் - எதிர்ப்பு
கும்பம் - தடங்கல்
மீனம் - தீரம்

6-11-26

கரிநாள்



பிரதோஷம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 15 கடன் நீங்க, ஆரோக்கியம் மேம்பட, பாவங்கள் விலக, மோட்சம் அடைய உதவும் பிரதோஷ விரதம் இன்று. துவாதசி கா.11.58 வரை, பின்பு திரயோதசி - உத்திரம் கா.05.43 வரை, பின்பு ஹஸ்தம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 20 | NOV - FRI வெள்ளி | ஜமாஅத்துல் அவ்வல் 25 | தேய்பிறை 310 / 055

தேய். துவாதசி 14.38 (கா. 11.58) ஹஸ்தம் 60.00 (முழுவதும்) தியாஜ் 21.00 அமிர்த யோகம். **பிரதோஷம். கரிநாள்**. வீரவநல்லூர் ஸ்ரீமரகதாம்பிகை ஊஞ்சலில் காட்சி. இராமேஸ்வரம் ஸ்ரீபர்வதவர்த்தினியம்மன் நவசக்தி மண்டபம் எழுந்தருளி தங்கப் பல்லக்கில் புறப்பாடு. சிறிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 9.15-10.15	12.15-1.15	10.30	07.30	03.00
மாலை: 4.45-5.45	6.30-7.30	12.00	09.00	04.30

சூலம் : மேற்கு
பரிகாரம் : வெல்லம்

துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 50

சந்திராஷ்டமம் சதயம்

கரணம்: 1.30-3 சூரிய உதயம் : 6.07

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | சம | திதி திரயோதசி

தங்கக் கடிவாளம் பூட்டினாலும் கழுதை குதிரையாகாது

இராசிபலன்

மேஷம் - தடங்கல்
ரிஷபம் - வெற்றி
மிதுனம் - தீரம்
கடகம் - வரவு
சிம்மம் - மறதி
கன்னி - அமைதி
துலாம் - சிரமம்
விருச்சி - எதிர்ப்பு
தனுசு - ஆசை
மகரம் - நலம்
கும்பம் - லாபம்
மீனம் - பரிவு

7-11-26



மாத சிவராத்திரி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 16 தேய்பிறை சதுர்த்தசி திதியில் வரும், மனதையும் ஆன்மாவையும் தூய்மைப்படுத்தும் சிவராத்திரி விரதம் இன்று. திரயோதசி கா.11.44 வரை, பின்பு சதுர்த்தசி - ஹஸ்தம் கா.06.19 வரை, பின்பு சித்திரை.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 21 | NOV - SAT சனி | ஜமாஅத்துல் அவ்வல் 26 | தேய்பிறை 311 / 054

தேய். திரயோதசி 13.59 (கா. 11.44) ஹஸ்தம் 00.28 (கா. 06.19) தியாஜ் 21.06 மரண யோகம். **மாத சிவராத்திரி**. நரக சதுர்த்தசி ஸ்நானம். திருநெல்வேலி நெல்லையப்பர் அன்னை காந்திமதி அம்மன் ஊஞ்சலில் காட்சி. மாயவரம் கௌரீ மாயூரநாதர் விழா தொடக்கம்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	09.00	06.00	01.30
மாலை: 4.45-4.45	9.30-10.30	10.30	07.30	03.00

சூலம் : கிழக்கு
பரிகாரம் : தயிர்

துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 40

சந்திராஷ்டமம் பூரட்டாதி

கரணம்: 12-1.30 சூரிய உதயம் : 6.08

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | சம | திதி சதுர்த்தசி

முன்கோபம் விண்பழியில் கொண்டு நிறுத்தும்

இராசிபலன்

மேஷம் - திறமை
ரிஷபம் - மறதி
மிதுனம் - எதிர்ப்பு
கடகம் - நலம்
சிம்மம் - வெற்றி
கன்னி - தடங்கல்
துலாம் - ஆசை
விருச்சி - நட்பு
தனுசு - ஈகை
மகரம் - சிரமம்
கும்பம் - வரவு
மீனம் - பரிசு

8-11-2026

அமாவாசை



சர்வ அமாவாசை





இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 17 தீபாவளி வாழ்த்துக்கள் - தீமை இருள் நீங்கி, நன்மை ஒளி பெருகும் நன்னாள், தீபாவளி திருநாள் இன்று. சதுர்த்தசி கா.11.59 வரை, பின்பு அமாவாசை - சித்திரை கா.07.05 வரை, பின்பு சுவாதி.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 22 | NOV - SUN ஞாயிறு | ஜமாஅத்துல் அவ்வல் 27 | அமாவாசை 312 / 053

தேய். சதுர்த்தசி 14.36 (கா. 11.59) சித்திரை 02.19 (கா. 07.05) தியாஜ் 17.05 **தீபாவளிப் பண்டிகை. சர்வ அமாவாசை. அரசு விடுமுறை**. சித்த யோகம். கேதார கௌரீ விரதம். திருஇந்துளூர் ஸ்ரீபரிமள ரெங்கராஜர், வள்ளியூர் ஸ்ரீமுருகப் பெருமான் விழா தொடக்கம்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	04.30	03.00	12.00
மாலை: 3.15-4.15	1.30-2.30	06.00	04.30	01.30

சூலம் : மேற்கு
பரிகாரம் : வெல்லம்

துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 30

சந்திராஷ்டமம் உத்திரட்டாதி

கரணம்: 10.30-12 சூரிய உதயம் : 6.09

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | சம | திதி அமாவாஸ்யை

மேற்கே மழை பெய்தால் கிழக்கே வெள்ளம் வரும்

இராசிபலன்

மேஷம் - இன்பம்
ரிஷபம் - செலவு
மிதுனம் - சுகம்
கடகம் - ஆதரவு
சிம்மம் - அன்பு
கன்னி - சிக்கல்
துலாம் - அமைதி
விருச்சி - நன்மை
தனுசு - ஆசை
மகரம் - பயம்
கும்பம் - பொறுமை
மீனம் - வரவு

9-11-2026

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். சுக்ல பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 18 சந்திரனுக்கு சோமவாரவிரதம் ஏற்க, சிவ வழிபாடு செய்து, மன அமைதியை பெற ஏற்ற திங்கள் இன்று. அமாவாசை மா.12.46 வரை, பின்பு பிரதமை - சுவாதி கா.08.20 வரை, பின்பு விசாகம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 23 | NOV - MON திங்கள் | ஜமாஅத்துல் அவ்வல் 28 | வளர்பிறை 313 / 052

அமாவாசை 16.31 (மா.12.46) சுவாதி 05.24 (கா.08.20) தியாஜ் 20.26 அமிர்த 05.24 மேல் மரண யோகம். அலப்பியம். வள்ளியூர் ஸ்ரீமுருகப் பெருமான் கலைமான் கிடா வாகனத்தில் பவனி. வீரவநல்லூர் ஸ்ரீமரகதாம்பிகை தீர்த்தம். விருஷப ஸேவை. கொடிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 6.15-7.15	9.15-10.15	07.30	01.30	10.30
மாலை: 4.45-5.45	7.30-8.30	09.00	03.00	12.00

சூலம் : கிழக்கு
பரிகாரம் : தயிர்

துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 20

சந்திராஷ்டமம் ரேவதி

கரணம்: 9-10.30 சூரிய உதயம் : 6.10

சனி | ரா | 3 சிம்-வியா 27 மக-ரா 27 கட-கே | செ | வி கே | பூ சூ | கீழ் | திதி பிரதமை

நேரான மரத்திற்கும் வளைந்த வேர்கள் உண்டு

இராசிபலன்

மேஷம் - வரவு
ரிஷபம் - தாமதம்
மிதுனம் - அச்சம்
கடகம் - பயம்
சிம்மம் - செலவு
கன்னி - நலம்
துலாம் - நன்மை
விருச்சி - எதிர்ப்பு
தனுசு - அன்பு
மகரம் - லாபம்
கும்பம் - கவலை
மீனம் - சிரமம்

ஐரோப்பிய யூனியனின் 1-வது இணை உறுப்பினராகிறதா கனடா?

இந்த வாரம் Montreal இல் ஐரோப்பிய யூனியன் தலைவர்களை உபசரித்த பிறகு, கனடா ஐரோப்பிய யூனியனின் முதல் "இணை உறுப்பினராக" மாறுவதற்குப் பணியாற்றி வருவதாகப் பிரதமர் Mark Carney தெரிவித் துள்ளார். இதுவே இந்த விவகாரத்தில் அவரது மிகவும் தெளிவான அறிக்கையாகும்.

இருப்பினும், இந்த உறுப்பினர் அந்தஸ்து எவ்வாறு இருக்கும் மற்றும் அதற்கு என்ன செலவாகும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இந்த ஆண்டின் கனடா - ஐரோப்பிய யூனியன் உச்சிமாநாட்டைக் குறிக்கோளா கக் கொண்டு, Ottawa மற்றும் 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட இந்த கூட்டமைப்பு ஆழமான கூட்டணி அமைப்பதற்கான பல பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து புதிய அறிவிப்புகளை வெளியிட்டது. ஆனால், கூட்டமைப்பில் உள்ள சில உறுப்பினர்கள் இந்த முன்மொழிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதால், இந்த ஆழமான கூட்டணியை என்னவென்று அழைப்பது என்ற விவாதம் பிற பணிகளைச் சற்றே நிழலாடச் செய்துள்ளது.

"எங்களின் புவியியல் அமைப்பால் முழு உறுப்பினர் அந்தஸ்து பெற முடியாது என்பதால், அதற்கு அடுத்தபடியாகக் கனடாவை ஐரோப்பிய யூனியனின் முதல் இணை உறுப்பினராக மாற்றி, மிக ஆழமான கூட்டாண்மையை உருவாக்க உழைத்து வருகிறோம்," என்று Carney தனது நிறைவுரையில் கூறினார்.

"வரும் மாதங்களில், இந்த உறுப்பினர் அந்தஸ்தின் தன்மைகள், அளவு மற்றும் வரம்புகளை நாங்கள் தீர்மானிப்போம்."

ஐரோப்பிய யூனியனில் தற்போது இல்லாத "இணை உறுப்பினர்" அந்தஸ்தைக் கனடாவிற்கு வழங்குவதற்கான வாய்ப்பை Layan கடந்த மாதம் முதன்முறையாகத் தனது உரையில் குறிப்பிட்டார். சில உறுப்பினர்களின், குறிப்பாக ஜெர்மனி யின் எதிர்ப்பையும் மீறி அவர் இந்த முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

"இது ஒரு தத்துவார்த்த கருத்து" என்று கூறிய அந்த அதிகாரி, இணை உறுப்பின ராவதற்கு எந்தவொரு அதிகாரப்பூர்வ நடைமுறையும் தற்போது நடைமுறையில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

இணை உறுப்பினராவதற்கான செலவு என்னவாக இருக்கும் என்று கேட்கப் பட்டதற்கு Carney "நாங்கள் இதை எதற்கோ பணம் செலுத்துவதாகப் பார்க்கவில்லை, இணைந்து செயல்படுவ தாகவே பார்க்கிறோம்" என்றார்.

Ursula von der Leyen, António Costa மற்றும் Carney ஆகியோர் இந்த பட்டத்தை ஆதரித்தாலும் இது இன்னும் உறுதியான ஒப்பந்தமாகவில்லை. ஐரோப்பிய யூனியன் உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் மேலும் ஐரோப்பிய யூனியனுடனான இந்தப் புதிய கூட்டாண்மை கனடா நாடாளு மன்றத்தில் விவாதத்திற்கும் வாக்களிப்பிற்கும் உட்படுத்தப்படும் என்று Carney கூறியுள்ளார்.

கூட்டாண்மையை எவ்வாறு அழைப்பது என்பதில் உள்ள பிளவு, உச்சிமாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை யிலும் வெளிப்படையாகத் தெரிந்தது.

சில உறுப்பினர்களின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு, வரைவு அறிக்கையிலிருந்து "இணை உறுப்பினர்" என்ற சொல் நீக்கப்பட்டதாக விபரமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஜெர்மனி இதை ஒரு "சிவப்புக்கோடு" (ஏற்க முடியாத ஒன்று) எனக் குறிப்பிட்டதாக ஒரு வட்டாரத் தகவல் கூறுகிறது. அதற்குப் பதிலாக, இறுதி ஆவணம் "முழு உறுப் பினர் அந்தஸ்தைத் தவிர்த்து, கனடாவிற்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான மிக நெருங்கிய தொடர்பு" என்று குறிப்பிடுகிறது.

தலைப்பைத் தவிர்த்து, Ottawa வும் Brussels உம் "எதிர்காலத்திற்கான கூட்டணி" என்று அழைக்கப் படும் இந்த முயற்சியில் முன்னோக்கிச் செல்ல பல விஷயங்களில் உடன்பட்டுள்ளன என்பதை இந்த ஆவணம் தெளிவுபடுத்துகிறது.

கனடா வளங்கள் (குறிப்பாக முக்கிய மூலப்பொருட்கள்) மீதான முதலீட்டை ஆதரிப் பதற்காகக் கனடாவுக்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முடிந்ததாக இரு தரப்பும் அறிவித்தன. மேலும் போட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளை எதிர் கொள்வதற்கான மற்றொரு ஒப்பந்தமும் முடிவுக்கு வந்தது.

கனடா மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கு இடையேயான டிஜிட்டல் வர்த்தக ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தைகளையும் அவர்கள் நிறைவு செய்தனர். இது சட்டப்பூர்வ நிச்சயத்தன்மையை மேம்படுத்தவும், எல்லை தாண்டிய தரவுப் பரிமாற்றத்தை எளிதாக்கவும் உதவும். மேலும் கனடிய ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வணிகங் களுக்கு ஐரோப்பிய சூப்பர் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துவதற்கான அணுகலை வழங்கும் ஒப்பந்தமும் இறுதி செய்யப்பட்டது.

உக்ரைனுக்கான உதவித் திட்டமான "உக்ரைன் ஆதரவுக் கடன்" திட்டத்திலும் கனடா இணையவுள்ளது.

அடுத்த கட்டங்களைப் பொறுத்தவரை, கனடியர்களும் ஐரோப்பியர்களும் கல்வி கற்க, பணியாற்ற மற்றும் ஆராய்ச்சி செய்ய கூடுதல் வாய்ப்புகளை விரிவாக்க இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன. புதிய கடலடி கேபிள் உள்கட்டமைப்பு மூலம் கனடா, ஐரோப்பா மற்றும் ஆசியா இடையே சர்வதேச இணைப்பை உறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆர்க்டிக் பிராந்தியம், வெளிநாட்டுத் தகவல் கையாளுதல் மற்றும் தலையீடுகள், மற்றும் செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல பகுதிகள் குறித்து இந்த ஆவணத்தில் உறுதி மொழிகள் இடம் பெற்றுள்ளன.

உலக வர்த்தக அமைப்பை மாற்றுவதற்குப் பதிலாக அதைச் சீர்திருத்துவது எல்லைப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதில் கூடுதல் கவனம் செலுத்துவது ஆகியவையும் இதில் அடங்கும்.

ஆனால் இந்த புதிய திட்டங்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பதும் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

நிதியமைச்சர் François - Philippe Champagne வியாழக்கிழமை கேள்விகளைத் தவிர்த்து, கனடியர்கள் இதில் "வாய்ப்புகளை" மட்டுமே பார்க்க வேண்டும் என்று கூறினார்.

கனடாவின் எதிர்க்கட்சித் தலைவர் Pierre Poilievre, இந்த உச்சிமாநாட்டில் "பெரிய பேச்சுகள்" மட்டுமே இருந்தன என்றும் உறுதியான முடிவுகள் இல்லை என்றும் விமர்சித்தார்.



"ஐரோப்பாவின் சில பகுதிகளை திவாலாக்கி சீரழியச் செய்த கடுமையான ஐரோப்பிய வரிகள், கடன், குடியேற்றம் மற்றும் எண்ணெய்-எரிவாயு எதிர்ப்பு கொள்கைகளுடன் கனடாவை இணைப்பது குறித்து உச்சிமாநாட்டில் நிறைய பேசப்பட்டது," என்று அவர் வெள்ளிக்கிழமை சமூக ஊடகங்களில் பதிவிட்டார்.

பிரான்சில், தீவிர வலதுசாரித் தலைவரான Marine Le Pen, 2027 வசந்த காலத்தில் நடக்கவுள்ள தேர்தலுக்கு முன்னதாகக் கருத்துக்கணிப்புகளில் முன்னணியில் உள்ளார். கடுமையான குடியேற்றக் கட்டுப்பாடுகளை ஆதரிக்கும் Lee Ben, ஐரோப்பிய யூனியன்-கனடா வர்த்தக ஒப்பந்தத்தை விமர்சித்துள்ளார்.

வேறுபட்ட அரசியல் சூழலைக் கொண்ட தலைவர்களுடன் செயல்படுவது குறித்துக் கவலை உள்ளதா என்று வியாழக்கிழமையன்று கேட்கப்பட்டதற்கு, ஜனநாயக மதிப்புகளுக்கு ஐரோப்பிய யூனியன் அளிக்கும் முக்கியத்துவத்தைக் ஊயசநெல பாராட்டினார்.

"ஐரோப்பாவின் பலங்களில் ஒன்று ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் மீதான அடிப்படை நம்பிக்கை. ஐரோப்பாவில் எப்போதும் வெவ்வேறு அரசாங்கங்கள், வெவ்வேறு சித்தாந்தங்களைக் கொண்ட அரசாங்கங்கள் இருக்கும்," என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

"பல தசாப்தங்களாக, ஐரோப்பிய யூனியன் தொடர்ந்து வளர்ந்து வருகிறது, மேலும் அந்த நாடுகளின் தேசிய ஜனநாயக செயல்முறைகளால் பலப்படுத்தப்பட்டு வளப்படுத்தப்பட்டுள்ளது."

பிரெஞ்சு தேர்தலுக்கு முன்பாக ஐரோப்பிய யூனியனுடன் ஒப்பந்தங்களைப் பெற விரும்புவதாகக் கூறப்படும் கருத்தையும் கார்னி மறுத்தார். "நாங்கள் இதை எந்தவொரு அரசியல் சுழற்சியோடும் இணைக்கவில்லை, மாறாக கனடியர்களுக்கு அவர்கள் வழங்குவதன் அடிப்படையிலேயே அணுகுகிறோம்," என்று அவர் கூறினார்.

டிரம்ப் அல்லது ஐரோப்பாவின் வலதுசாரி தலைவர்களிடமிருந்து இந்த உச்சிமாநாடு பழிவாங்கும் நடவடிக்கைகளை ஈர்க்குமா என்று இந்த வார தொடக்கத்தில் கேட்கப்பட்டதற்கு, கனடா அரசின் மூத்த அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, இந்த சந்திப்பு யாருக்கும் எதிரானது அல்ல என்றும், கனடா மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கு இடையிலான ஆழமான நலன்களை மட்டுமே பிரதிபலிக்கிறது என்றும் கூறினார்.





மீன்பிடித்துறை அதிகாரிகளுக்கு மின்சார மோட்டார் சைக்கிள்கள்

இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம்!

இலங்கையின் மீன்பிடித்துறை கள உத்தியோகத் தர்களுக்கு 430 மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் மீன்பிடி, நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் டாக்டர் பி.கே. கொலித கமல் ஜினதாச ஆகியோருக்கு இடையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் மீன்பிடி, நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து சிறப்பித்தார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, மின்சார மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்காக இந்திய அரசாங்கம் 265 மில்லியன் இலங்கை ரூபா நிதியுதவியை வழங்கவுள்ளது.

மீன்பிடி மற்றும் நீர்வளத் திணைக்களம், இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ச்சி அதிகார சபை (NAQDA), தேசிய நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம் (NARA) உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் கள உத்தியோகத்தர்களுக்கு இந்த மின்சார மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த மின்சார மோட்டார் சைக்கிள்களின் பயன்பாடு மீன்பிடித்துறை அதிகாரிகளின் செயற்பாட்டுத் திறன், பணித்திறன் மற்றும் கள மட்டத்திலான சேவைப் பிரசன்னம் ஆகியவற்றை மேம்படுத்தும்.

இதன் மூலம் விரைவான சேவைகளை வழங்குவதற்கும், மீனவ சமூகங்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணுவதற்கும் வாய்ப்புகள் ஏற்படும். அத்துடன், இலங்கை முழுவதும் பொதுச் சேவை வழங்கலை மேலும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.



மேலும், இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் முன்மொழியப்பட்டுள்ள "தூய்மையான இலங்கை" வேலைத்திட்டத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை தொடர்பான இலக்குகளை அடைவதற்கும் இந்த முயற்சி பங்களிப்புச் செய்யும்.

இலங்கை மக்களின் தேவைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியா முன்னெடுத்து வரும் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டங்கள், நாட்டின் 25 மாவட்டங்களிலும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

வீடமைப்பு, சுகாதாரம், கல்வி, மீன்பிடித்துறை, போக்குவரத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாழ்வாதார மேம்பாடு, விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவின் இந்த அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



BEHIND ME MEDIA















5,000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் பறக்கும் வாகனம் இருந்ததா? வியக்க வைக்கும் ஒரு பழங்காலக் கதை!



இன்றைய உலகில் பறக்கும் கார்கள் (Flying Cars) மற்றும் நவீன போக்குவரத்து தொழில்நுட்பங்கள் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், இந்திய இதிகாசங்களில் குறிப்பிடப்படும் புஷ்பக விமானம் மீண்டும் கவனத்தைப் பெற்றுள்ளது.

இராமாயணத்தில் வரும் புஷ்பக விமானம் வானில் பறந்து செல்லக்கூடிய வாகனமாக விவரிக்கப்படுகிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வான்வழிப் பயணம் பற்றிய கற்பனை அல்லது கருத்து இந்திய இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

ஆனால், இது உண்மையில் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வாகனம் என்பதற்கு இதுவரை உறுதியான அறிவியல் அல்லது தொல்லியல் ஆதாரங்கள் இல்லை.

பழங்கால இலக்கியங்களில் காணப்படும் இத்தகைய கற்பனைகளும் வர்ணனைகளும் நமது வரலாறு, பண்பாடு மற்றும் அறிவியல் சிந்தனை பற்றிய ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

புஷ்பக விமானம் வெறும் இதிகாசக் கற்பனையா? அல்லது பழங்கால மனிதர்களின் தொழில்நுட்பக் கனவுகளின் வெளிப்பாடா?



மனநலத்தை பாதிக்குமா தொடர்ந்து ரீல்ஸ் பார்க்கும் பழக்கம்?

ஒரு நபர் தனது மனநலத்தைப் பற்றி எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? அவர் அனுபவிக்கும் மனக் கவலை எப்போது தீவிரமான மனநலப் பிரச்னையாக மாறுகிறது?

மனச்சோர்வு, பதற்றம் மற்றும் மனஅழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் எப்போது மருத்துவரின் உதவியை நாட வேண்டும்? மேலும், நம்மில் ஒவ்வொருவரும் நல்ல மனநலத்தைப் பேணுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

மனநலம் தொடர்பான கேள்விகளுக்கான பதில்களை உளவியல் நிபுணர் டாக்டர் கோமல்ப்ரீத் கவுர் வழங்கியுள்ளார்

1. கேள்வி: ஒருவருக்கு மனநல உதவி தேவைப்படுவதை சுட்டிக்காட்டும் ஆரம்ப அறிகுறிகள் என்ன?

பதில்: ஒருவர் இரண்டு வாரங்களுக்கும் மேலாக கவலையுடனோ மனவேதனையுடனோ இருந்தால், காரணமில்லாமல் பதற்றமடைந்தால், அதிகமாகவோ மிகக் குறைவாகவோ தூங்கினால், அதிகமாகவோ மிகக் குறைவாகவோ சாப்பிட்டால் கவனிக்க வேண்டும்.

அதிக மனஅழுத்தம், சமூக உறவுகளைத் தவிர்த்தல், மகிழ்ச்சியுடன் செய்து வந்த செயல்களில் ஆர்வம் இழத்தல் போன்ற அறிகுறிகளும் முக்கியமானவை. இத்தகைய அறிகுறிகள் தொடர்ந்து இருந்தால், மனநல நிபுணரின் உதவியை நாடுவது அவசியம்.

2. கேள்வி: சாதாரண சோகத்துக்கும் மனச்சோர்வால் ஏற்படும் சோகத்துக்கும் என்ன வித்தியாசம்?

பதில்: சாதாரண சோகம் பெரும்பாலும் ஒரு சூழ்நிலையால் உண்டாகிறது சில காலத்திற்குப் பிறகு குறைந்து விடும்.

ஆனால் மனச்சோர்வின் போது ஏற்படும் சோகம் நீண்ட காலம் நீடிக்கும். அது தூக்கம், உணவு பழக்கம், சமூக உறவுகள் மற்றும் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும். இதன் தாக்கம் உறவுகளிலும் தெளிவாகக் காணப்படும்.

3. கேள்வி: மனநோய் அல்லது மனச்சோர்வுக்கான காரணங்கள் என்ன?

பதில்: சில விஷயங்கள் நமது மரபணுக்களைச் சார்ந்தவை, சில நம்மைச் சுற்றியுள்ள சூழலைச் சார்ந்தவை. உதாரணத்திற்கு, உங்கள் குடும்பத்தில் யாருக்காவது மனச்சோர்வு போன்ற நோய் இருந்திருந்தால், அந்த நபரும் அத்தகைய நிலைக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம், ஏனெனில் அவர்களுக்குச் சூழல் அந்த விதத்தில் கிடைக்கிறது.

4. கேள்வி: மனநலம் என்றால் என்ன, அது உடல்நலத்தைப் போலவே ஏன் முக்கியமானது?

பதில்: உங்கள் மனநலம் சரியாக இல்லை என்றால், உங்களுக்கு மன நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. உதாரணத்திற்கு, உங்களின் உடல்நலம் சரியாக இல்லை என்றால் நீங்கள் மீண்டும் மீண்டும் நோயுறுவீர்கள். இதேபோல்தான், உங்கள் மனநலம் பலமாக இல்லை என்றால் நீங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் எதிர்மறையாகப் பார்க்கத் தொடங்குவீர்கள். உங்களின் செயல்பாடுகளும் எதிர்மறையாகவே இருக்கும். எனவே மனநலனுக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு. உங்களின் மனநலம் நன்றாக ,ருந்தால் மட்டுமே உங்களால் மன நோய்களில் இருந்து தள்ளி ,ருக்க முடியும்.

5. கேள்வி: நல்ல மனநலனுக்காக சில ஆலோசனைகளை வழங்குங்கள்.

பதில்: தினமும் குறைந்தபட்சம் அரை மணி நேரமாவது உங்களுக்காக ஒதுக்குங்கள். உடற்பயிற்சி செய்யுங்கள், நடைபயிற்சி செய்யுங்கள், நல்ல உணவை உண்ணுங்கள், சத்தற்ற உணவுகளில் (ஜங்க் ்.புட்) ,ருந்து தள்ளி ,ருங்கள்.

“உண்ணும் உணவைப் பொறுத்தே மனம் அமையும்” என்று சரியாகவே சொல்லப்பட்டுள்ளது. தினமும் இறைவனுக்கு நன்றி செலுத்துவது, தியானம் செய்வது, ஆழமாக மூச்சு விடுவது. இவை அனைத்தும் ஆண்டிவைரஸ் போலப் பணியாற்றுகின்றன. உங்களை தினமும் சுறுசுறுப்பாகவும் நேர்மறையாகவும் வைத்திருக்க உதவுகின்றன. ,ந்தச் செயல்பாடுகளால் நமது மகிழ்ச்சி ஹார்மோன்கள் சுரக்கின்றன.

6. கேள்வி: மனஅழுத்தம், மனச்சோர்வு மற்றும் பதற்றம் ஆகியவற்றுக்கிடையில் என்ன வித்தியாசம்?

பதில்: மனஅழுத்தம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையால் ஏற்படுவது. அந்த சூழ்நிலை சரியாகிவிட்டால் மன அழுத்தமும் குறையும். மனச்சோர்வு என்பது கடந்த காலத்தில் ஏற்பட்ட வலியான அனுபவங்களை மீண்டும் மீண்டும் நினைத்து வாழ்வது போன்றது. பதற்றம் என்பது எதிர்காலத்தைப் பற்றிய அதிகமான கவலை. அது காரணத்துடனோ காரணமின்றியோ ,ருக்கலாம். ஆனால் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கத் தொடங்கினால் கவனம் தேவை.

7. கேள்வி: சமூக ஊடகங்கள் மனநலத்தை எவ்வளவு பாதிக்கின்றன? இன்ஸ்டாகிராமில் தொடர்ந்து ரீல்ஸ் பார்க்கும் போது மூளையில் என்ன நடக்கும்?



பதில்: நீங்கள் இன்ஸ்டாகிராமில் தொடர்ந்து ரீல்ஸ்களைப் பார்க்கும்போது, ஒரு ரீலில் வேறு உணர்ச்சி இருக்கிறது, இரண்டாவது ரீலில் வேறு உணர்ச்சி இருக்கிறது, மூன்றாவது ரீலில் வேறு உணர்ச்சி இருக்கிறது.

உங்களின் உணர்ச்சிகள் உடனுக்குடன் மாறுகின்றன, அவை சரியான முறையில் செயலாக்கப்படுவதில்லை.

திரையில் நாம் திறக்கும் இத்தனை விஷயங்களும், அந்தத் தாவல்கள் அனைத்தும் நமது மூளையிலும் திறக்கின்றன. இதனால்தான் “பிரைன் .ாஹ்“ எனப்படும் மூளை தடுமாற்றம் ஏற்படுகிறது. நீங்கள் என்ன முடிவெடுப்பது என்பதே உங்களுக்கு புரிவதில்லை.

தொடர்ந்து ரீல்ஸ்களைப் பார்ப்பதால் உங்களால் உங்களின் உணர்ச்சிகளைச் சரியான முறையில் செயலாக்க முடிவதில்லை.

8. கேள்வி: குழந்தைகளிடம் மனச்சோர்வு அல்லது மனஅழுத்தம் அதிகரிப்பதற்கான காரணம் என்ன, இதில் பெற்றோர் என்ன பங்கினை வகிக்க வேண்டும்?

பதில்: முதலாவதாக, சமூக ஊடகங்களுக்குப் மிகப் பெரிய பங்கு உண்டு. ,து தவிர, குழந்தைகள் ஒருவரோடு ஒருவர் தங்களை அதிகம் ஒப்பிட்டுக்கொள்கிறார்கள். பெற்றோரின் அழுத்தம் மிக அதிகமாக உள்ளது, சமூகத்தின் அழுத்தமும் உள்ளது, குழந்தைகளுக்குத் தம் மீதே எதிர்பார்ப்புகளும் மிக அதிகமாக உள்ளன.

அவர்களால் அதைச் செய்ய முடியாமல் போகும்போது எதிர்மறையை நோக்கிச் சென்றுவிடுகிறார்கள். தங்களுட னேயே எதிர்மறையாகப் பேசத் தொடங்குகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் மெல்ல மெல்ல மனச்சோர்வை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

பெற்றோருக்கும் இதில் மிகப் பெரிய பங்கு உண்டு. வேலைக்குச் செல்லும் பெற்றோர் தங்களின் குழந்தைகளுக்கு அதிக நேரத்தைக் கொடுக்க முடிவதில்லை. அதனால் அவர்கள் குழந்தைகளின் ஒவ்வொரு கோரிக்கையையும் நிறைவேற்றுகிறார்கள்.

இப்போது நீங்கள் எப்பொழுதாவது அவர்களுக்கு “இல்லை“ என்று சொல்லும்போது, சுற்றிலுமிருந்து அவர்களுக்கு “இல்லை“ என்று கிடைக்கும்போதும் அவர்கள் மனச்சோர்வுக்கு ஆளாவார்கள். 10 விஷயங்களில் ஏற்றுக்கொள்ள வேண்டிய 4 விஷயங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால் காரணத்தைக் கூறி குழந்தைகளுக்கு “இல்லை“ என்று சொல்லுங்கள்.

குழந்தைகள் சிறியவர்களாக இருக்கும்போது களிமண் போன்றவர்கள். குயவர் எவ்வாறு களிமண்ணிற்கு வடிவம் கொடுக்கிறாரோ, அதேபோல் பெற்றோரும் குழந்தைகளுக்கு வடிவம் கொடுக்கிறார்கள். குழந்தைகள் செய்யும் எந்தவொரு நல்ல விஷயத்தையும், பெற்றோர் அவர்களின் முயற்சியைப் பாராட்ட வேண்டும். இதன் மூலம் நான் முயற்சி செய்தேன், அதனால் எனக்கு இந்த முடிவுக் கிடைத்தது என்று குழந்தைகளுக்குத் தோன்றும். அவர்களைச் சோர்வடையச் செய்யும் விஷயங்களைப் பேசாதீர்கள். உதாரணத்திற்கு “நீ சோம்பேறி, நீ தோற்றுப்போவாய்“ என்பது போல. அப்படிச் செய்வதன் மூலம் நாம் அவர்களுக்கே தீங்கு விளைவிக்கிறோம். அந்த வகையில் அவர்கள் தங்களை அப்படியே நினைக்கத் தொடங்கிவிடுவார்கள்.

நாம் குழந்தையிடம் “நீ கெட்டவன்“ என்று ஒருபோதும் சொல்லக் கூடாது, “நீ செய்வது கெட்டது“ என்று சொல்லுங்கள். இது தவிரக் குழந்தைகளுடன் தரமான நேரத்தைச் செலவிடுங்கள். அதாவது தடுக்காமல் மற்றும் கண்டிக்காமல், அவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள். அவர்களுக்குத் தேவையில்லாத ஆலோசனைகளை வழங்காதீர்கள். அவர்களுடன் விளையாட்டுகளை விளையாடுங்கள். இன்றைக்காலத்தில் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே பரஸ்பர இணைப்பு குறைந்து கொண்டே வருகிறது. இந்த பிணைப்பை மீண்டும் உருவாக்குவது மிகவும் அவசியம்.

குழந்தைகளுக்குச் செவி சாயுங்கள். இன்றைய காலகட்டத்தில் பெற்றோர் தங்களைப் புரிந்துகொள்வதில்லை என்று குழந்தைகளுக்குத் தோன்றுகிறது. குழந்தை பெற்றோரிடம் சென்று தான் ஏதோ தவறு செய்துவிட்டதாக கூறும்போது, பெற்றோர் குழந்தைகளையே திட்ட தொடங்குகிறார்கள், அப்படியிருக்கும்போது குழந்தை என்ன செய்யும். குழந்தை அடுத்த முறை சொல்வதையே நிறுத்திவிடும். எனவே குழந்தைகளுடன் அமர்ந்து அவர்களின் பேச்சைக் கேட்பது மிகவும் அவசியம்.

ஒருவர் இரண்டு வாரங்களுக்கும் மேலாக கவலையுடனோ மனவேதனையுடனோ இருந்தால், காரணமில்லாமல் பதற்றமடைந்தால், அதிகமாகவோ மிகக் குறைவாகவோ தூங்கினால், அதிகமாகவோ மிகக் குறைவாகவோ சாப்பிட்டால் கவனிக்க வேண்டும்...

9. கேள்வி: பணிபுரியும் இடத்தில் தனது மனநலனைப் பலமாக வைத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?

பதில்: பணிபுரியும் இடத்திற்கு நமது மனநலனில் மிகப்பெரிய தாக்கம் உண்டு. ஒர்க் லை.்ப் பேலன்ஸ் அதாவது முதலில் உங்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் தொழில்முறை வாழ்க்கைக்கும் இடையே சமநிலையை உருவாக்கக் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம். ஒரு நபர் வீட்டிற்குச் செல்லும்போது அலுவலக விஷயம் அலுவலகத்திலேயே இருக்க வேண்டும், அலுவலகத்திற்கு வரும்போது வீட்டு விஷயம் வீட்டிலேயே இருக்க வேண்டும். இந்தச் சமநிலை இருப்பது மிகவும் அவசியம். நீங்கள் வீட்டிற்குச் செல்லும்போது அலுவலகத்தின் அனைத்துப் பிரச்னைகளையும் கையோடு எடுத்துச் செல்வது போல் இருக்கக் கூடாது. அலுவலகத்திற்கு வரும்போது வீட்டின் பிரச்னைகளைக் கையோடு எடுத்து வருவது போல் இருக்கக் கூடாது. எனவே ஒரு எல்லையை உருவாக்குவதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

மூச்சுப் பயிற்சிகளை உங்களின் வாழ்க்கையின் அங்கமாக மாற்றிக்கொள்ளுங்கள். பாக்ஸ் பிரீதிங், பட்டாம்பூச்சி பிரீதிங், டீப் பிரீதிங், 4-7-8 பிரீதிங் போன்றவை. எப்போதெல்லாம் ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ நேரம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் இந்த மூச்சுப் பயிற்சிகளைச் செய்யுங்கள். அது அமைதியாக இருக்க உதவுகிறது. நாம் அமைதியாக இருக்கும்போது முடிவுகளையும் சரியான முறையில் எடுக்க முடிகிறது, நமது செயல்பாடும் நன்றாக இருக்கும்.

10. கேள்வி: பெண்களின் மனநலம் எந்தக் காரணங்களால் பாதிக்கப்படுகிறது?

பதில்: ஒரு பெண் வேலைக்குச் சென்றிருந்தால், வீட்டில் குழந்தைகள் என்ன செய்துகொண்டிருப்பார்கள், கணவர் என்ன செய்துகொண்டிருப்பார், வீட்டிற்குச் சென்று நான் இந்த வேலையைப் பார்க்க வேண்டும், வீட்டிற்கு விருந்தினர்கள் வரவிருக்கிறார்கள் என்ற சிந்தனையே அவரது மூளையில் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். அவ்வப்போது இடைவேளை எடுப்பது மிகவும் அவசியம். வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால், அவருடைய மூளையில் ஓடிக்கொண்டிருக்கும் அதிகப்படியான சிந்தனைதான் அவருடைய உடல்நலனை மிக அதிகமாகப் பாதிக்கிறது.

வேலைக்குச் செல்லும் பெண்ணாக இல்லாவிட்டாலும் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. இன்றைய காலத்தில் அனைவரும் படித்தவர்கள்தான், ஆனால் திருமணத்திற்குப் பிறகு குடும்பத்தைக் கவனிப்பதற்காக வேலை செய்யவில்லை. முழு நேரத்தையும் தங்களின் குழந்தைகள், கணவர் மற்றும் குடும்பத்திற்கு அளித்துவிட்டார்கள். இப்போது குழந்தைகள் வளர்ந்து தங்களின் வாழ்க்கையில் பிஸியாகிவிடும்போது, அந்தப் பெண் தனிமையாக உணரத் தொடங்கி மனச்சோர்வுக்குச் சென்றுவிடுகிறார். நான் பயனற்றவளாகிவிட்டேன் என்ற எதிர்மறை எண்ணம் அவர்களுக்குள் வரத் தொடங்குகிறது. அதற்குப் பிறகு அந்தப் பெண்ணின் மனச்சோர்வு மிகவும் அதிகரித்துவிடுகிறது.

11. கேள்வி: இல்லத்தரசிகளாக இருக்கும் பெண்கள் தங்களின் மனநலனுக்காக என்ன செய்ய வேண்டும்?

பதில்: ”சுய அன்பு”. உங்களுக்காக நேரத்தைச் செலவிடுங்கள். உங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகள் எவையோ, அவற்றை நிச்சயமாகச் செய்யுங்கள். அவை உங்களின் மகிழ்ச்சி ஹார்மோன்களைச் சுரக்கச் செய்கின்றன. உடற்பயிற்சி, உணவு, தூக்கம் ஆகியவற்றில் முழு கவனம் செலுத்துங்கள். தயாராகி அமருங்கள். எங்கும் செல்ல வேண்டியதில்லை என்பதால் தயாராக வேண்டிய அவசியம் என்ன என்று பெண்கள் அடிக்கடி நினைக்கிறார்கள். ஆனால் நீங்கள் தயாராகும்போது, உங்களுக்கு நீங்களே முக்கியத்துவம் தருகிறீர்கள் என்ற சிக்னல் மூளைக்குச் சென்று மகிழ்ச்சி ஹார்மோனைச் சுரக்கச் செய்கிறது. இது மிகவும் அவசியம்.

உணவு, தியானம், நன்றியுணர்வு, மூச்சுப் பயிற்சி ஆகியவற்றை அனைவரும் செய்ய வேண்டும், அவர் ல்லத்தரசியாக இருந்தாலும் சரி, வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தாலும் சரி அல்லது யாராக இருந்தாலும் சரி. இவை அனைத்துமே நிவாரணிகள்தான்.

நன்றி : இணையம்

BEHIND ME MEDIA

CANADA

HUMANITY

SINCE 2024

BEHIND ME FOUNDATION

மனிதநேயம் - Behind me foundation









வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது **மனிதநேயம் - Behind me foundation** நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.

உதவிகள் தேவைப்படுவோர் **Behind me foundation** ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.

எமது சேவைகள்

- உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
- உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
- உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
- உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்

எமது **Behind me International Media** ஊடக வலையமைப்பில் பகிரப்படும்

தொடர்புக்கு

இலங்கை	-	+94 76239 0159
இந்தியா	-	+ 91 917632 3079
கனடா	-	+ 437 688 3493
மின்னஞ்சல்	-	info@behindmemedia.com

BEHIND ME FOUNDATION

உதவுவது நம் கடமை

மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்

நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...

BEHIND ME MEDIA
2026 November, 03
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

கறுப்பு ஜூலை துன்பியல் சம்பவ ஆய்வுக்கு விசேட குழு?

1983 கறுப்பு ஜூலை துன்பியல் சம்பவம் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கும் தேசிய சகவாழ்வை உறுதிப்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான அதன் முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல் தொடர்பான யோசனையை தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயசந்திரமூர்த்தி முன்வைக்கவுள்ளார்

12 இற்கும் மேற்படாத உறுப்பினர்களை கொண்டதாக முழுமையாக அதிகாரமளிக்கும் வகையில் குழு நியமிக்கப்பட்டு ஆறுமாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. கறுப்பு ஜூலை கலவரம் காரணமாக பல தசாப் தங்களாக ஒரு நாடென்ற ரீதியில் பொருளாதார, சமூக, கலாசார ரீதியாக பின்னோக்கித் தள்ளப்பட்டு, அதன் காரணமாக ஆயிரக்கணக்கான பெறுமதிமிக்க உயிர்கள் பறிபோனதுடன், பாரிய அளவில் சொத்துகளும் சேதமுற்று பொருளாதார ரீதியாகவும் பாரிய பின்னடைவை எதிர்கொள்ள நேரிட்டது.

மிகவும் மோசமான துன்பியல் நிகழ்வாகக் கருதப்படும் 1983 கறுப்பு ஜூலை சம்பவத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்துச்சேதங்கள் மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உளவியல் மற்றும் சமூக ரீதியான உளவியல் ரீதியான பாதிப்புகள் என்பன இதுவரை முறையான விதத்தில் மதிப்பிடப் படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான இனவாத மற்றும் நெருக்கடியான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கும் பொருட்டு உறுதிமிக்க சட்டரீதியானதும், சமூகஞ் சார்ந்ததுமான நல்லிணக்கப் பொறிமுறை யொன்றைத் தாபிப்பதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளது.

நம்பிக்கையையும், நல்லுறவையும் இலங்கையில் பல்வேறு இனங்களுக்கிடையில் நிலவும் நம்பிக்கையையும் சீர்குலைக்கும் வகையிலான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அத்தியாவசியமான ஒரு காரணியாக மாறியுள்ளது.

அத்தகைய சம்பவங்களுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளையும், மேற்படி அழிவுகரமான செயற்பாடுகளை வழிநடத்திய நபர்களையும் வெளிக்கொணர வேண்டும். அச்சம்பவத்தால் பாதிப்புக்குள்ளான மற்றும் தீங்கிற்குள்ளான ஒட்டுமொத்த மக்களின் மனங்களை தெளிவடையச் செய்வதற்காகவும் அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையிலான நியாயமான நிவாரணத்தை வழங்குவதோ அல்லது கௌரவமான சுகப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவதோ அரசொன்றின் கடப்பாடாகும். விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும் அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழி மூலமாக பெற்றுக்கொள்வதற்கும் குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப் பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக் கப்பட்டாலோ தடைபெறாது கூடுவதற்கும், முழுமை யான அதிகாரமளிக்க வேண்டும். குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக காலப பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத் திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

Ontario பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி - பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்திப்பு!



கனடா Ontario மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களுக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறீதரன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த கடந்த மாத நிறைவில் லோகன் கணபதி அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பு இலங்கையின் மாகாண சபை ஆட்சி முறைமைக்கும் கனடாவின் மாகாண ஆட்சி முறைமைக்கும் இடையிலான ஒப்பீடு, அதிகாரப் பகிர்வின் நடைமுறைச் சாத்தியங்கள், மாகாணங்களின் அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்கள், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களை மையமாகக் கொண்டமைந்தது. இச்சந்திப்பின் முக்கியமான பேசுபொருளாக இலங்கையிலும் கனடாவிலும் நடைமுறையில் உள்ள மாகாண நிர்வாகக் கட்டமைப்புகளும் அவற்றுக்கு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் அமைந்தன. குறிப்பாக, கனடாவின் கூட்டாட்சி முறைமையின் கீழ் ஒன்றாரியோ உள்ளிட்ட மாகாணங்கள் அனுபவிக்கும் அரசியலமைப்புச் சட்டரீதியான அதிகாரங்கள், அவற்றின் சட்டவாக்கச் சுதந்திரம், நிர்வாகப் பொறுப்புகள், நிதி அதிகாரங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்துடனான அதிகாரப் பகிர்வு தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பட்டியல்கள், மாகாண நிர்வாகத்தின் உண்மையான அதிகார எல்லைகள், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், நிதி வளங்களின் பகிர்வு, ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் தலையீடுகள் போன்ற விடயங்கள் இக்கலந்துரையாடலில் முக்கியத்துவம் பெற்றன.

இலங்கையில் மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும், கனடாவின் மாகாணங்கள் நடைமுறையில் பயன்படுத்துகின்ற அதிகாரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் புரிந்துகொள்வதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பான விவாதங்களில் அதிகாரப் பகிர்வு, மாகாண சுயாட்சி, பிராந்திய நிர்வாகத்தின் வலுப்படுத்தல் மற்றும் மக்களின் ஜனநாயகப் பங்கேற்பு ஆகியவை நீண்டகாலமாக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

அந்த வகையில், கனடாவின் கூட்டாட்சி ஆட்சி அனுபவங்களைப் புரிந்துகொள்வதும், அவற்றை இலங்கையின் வரலாற்று, அரசியல் மற்றும் சமூகச் சூழலுக்கு ஏற்ற வகையில் ஒப்பீட்டு அடிப்படையில் ஆராய்வதும் அவசியமானதாகும் என்ற கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

மாகாண அதிகாரப் பகிர்வு தொடர்பான இவ்வாறான கலந்துரையாடல்களை ஒருமுறை இடம்பெறும் சந்திப்புடன் மட்டுப்படுத்தாமல், தொடர்ச்சியான அரசியல் மற்றும் கொள்கைசார் உரையாடல்களாக முன்னெடுப்பது குறித்தும் இருவரும் ஆர்வம் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது லோகன் கணபதி அவர்கள் கனடாவில் அரசியல் மற்றும் சமூகப் பொறுப்புகளை வகித்த காலப்பகுதிகளில் தமிழ் மக்களின் நலன்களுக்காக ஆற்றிய பங்களிப்புகளை நினைவுகூர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் குறிப்பாக, அவர் நகரசபை உறுப்பினராகவும் பின்னர் ழுவெயசழை மாகாண சபை உறுப்பினராகவும் பொதுவாழ்வில் பணியாற்றிய காலங்களில் கனடாவில் வாழும் தமிழ் மக்களின் சமூக பண்பாட்டு மற்றும் அடையாளம் சார்ந்த விடயங்களுக்கு வழங்கிய ஆதரவும் தமிழ் மக்களின் பங்களிப்பையும் வரலாற்றையும் அங்கீகரிக்கும் வகையில் மேற்கொண்ட முயற்சிகளும் பாராட்டப்பட்டன.

அந்த வகையில் கனடாவில் 'வன்னி வீதி' (Vanni Street) எனப் பெயரிடப்பட்டமை தொடர்பான அவரது பங்களிப்பும் நன்றியுடன் நினைவுகூரப்பட்டது.

வன்னி என்பது வெறுமனே ஒரு புவியியல் அடையாளம் மட்டுமல்ல. அது ஈழத்தமிழர்களின் வரலாறு, பண்பாடு, வாழ்வியல், போராட்ட அனுபவங்கள் மற்றும் மக்களின் கூட்டுச் சமூக நினைவுகளுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்த ஒரு நிலப்பரப்பாகும். அத்தகைய வரலாற்று மற்றும் பண்பாட்டு அடையாளத்தை கனடாவின் பொதுவெளியில் அங்கீகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், புலம்பெயர் தமிழ் மக்களின் அடையாளப் பாதுகாப்புக்கும் அடுத்த தலைமுறையினரிடையே தமது வரலாற்றை எடுத்துச் செல்வதற்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை எனச் சிறிதரன் எம்.பியினால் சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ் மக்களின் அடையாளத்தையும் வரலாற்று நினைவுகளையும் மதித்து, அவற்றை கனடாவின் பன்முகத்தன்மை கொண்ட சமூகக் கட்டமைப்பில் அங்கீகரிக்கச் செய்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் லோகன் கணபதி அவர்களுக்குத் தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார்.

இச்சந்திப்பு, இரு அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவதுடன், இலங்கையின் மாகாண சபை முறைமை மற்றும் கனடாவின் கூட்டாட்சி ஆட்சி முறைமை தொடர்பான அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு பயனுள்ள தளமாகவும் அமைந்தது.

புயலுக்கு முரசு என்ன தமிழ்க் கலாசாரப் பின்னணி

உருவாகி ஆந்திராவில் கரையை கடந்த புயலுக்கு முரசு என தமிழ் கலாசாரப் பின்னணி கொண்ட ஒரு பெயர் சூட்டபட்டு இருந்தது. இந்தியா பரிந்துரைத்த "முரசு" என்ற தமிழ்ப் பெயர், வரலாற்றில் முதல் முறையாக இடம் பிடித்துள்ளது.

பாரம்பரியத் தமிழ் இசைக்கருவியான "முரசு" என்பதன் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது பிராந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைவராக இருந்த பாலச்சந்திரன் கூறுகையில், ""2004ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வட இந்தியப் பெருங்கடல் பகுதியில் சூறாவளிகளுக்குப் பெயரிடும் முறை துவங்கியதில் இருந்தே, புயலுக்கு வைக்கப்பட்ட முதல் தமிழ்ப் பெயர் "முரசு" தான்,"" என்றார்.

வானிலை ஆய்வாளர்கள் கூறியதாவது: நாங்கள் கடல், மீன், கடற்கரைப் பகுதிகள் மற்றும் தகவல் தொடர்பு தொடர்பான பெயர்களைப் பரிந்துரைத்தோம். "முரசு" என்ற பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம், பண்டைய காலத்தில் தகவல்களைப் பரப்பவும், இயற்கை பேரிடர்கள் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கவும் இந்த இசைக்கருவி பயன்படுத்தப்பட்டதுதான்.

மேலும், இது இடி போன்ற முழக்கத்தையும் குறிக்கிறது. இந்தியா, உலக வானிலை அமைப்பு, ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் ஆகியவற்றின் குழுவிடம் 13 பெயர்களைப் பரிந்துரைத்திருந்தது. அந்தப் பட்டியலில் "கதி" (Gati) மற்றும் "தேஜ்" (Tej) ஆகிய பெயர்களுக்கு அடுத்தபடியாக, மூன்றாவது பெயராக "முரசு" இடம்பெற்று இருந்தது, என்றனர்.

பெங்களூரு வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் புவியரசன், பெயர்கள் பரிந்துரைத்த காலத்தில் சென்னை மண்டல வானிலை ஆய்வு மையத்தில் பணியாற்றினார். "திருக்கை", "கலப்பை", "ஏர்" மற்றும் "நாவாய்" போன்ற பெயர்களும் புயல்களுக்கு சூட்டுவதற்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்தன. எனினும் இந்தப் பெயர்கள் இறுதிப் பட்டியலில் இடம்பெறவில்லை.

பெயர்கள் எளிதாக உச்சரிக்கக்கூடியவையாக இருக்க வேண்டும், அதிகபட்சம் எட்டு எழுத்துகளைக் கொண்டிருக்க வேண்டும் நடுநிலையானவையாக இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் காரணமாக இவை பட்டியலில் இடம்பெறவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.





BEHIND ME MEDIA

நடைப்பயிற்சியை சாப்பிட்ட உடன் மேற்கொள்வதால் கிடைக்கும் நன்மைகள்!



நாள் முழுவதும் உட்கார்ந்து பணிபுரியும் சூழல் பலருக்கும் உண்டு. என்னதான் நடைப்பயிற்சியும் உடற்பயிற்சியும் மேற்கொண்டாலும், நாள் முழுவதும் அமர்ந்து வேலை செய்வதால் உடல் பருமன், இரத்த சர்க்கரை அளவு அதிகரித்தல் மற்றும் அதன் விளைவாக சர்க்கரை நோய் போன்ற பாதிப்புகள் உண்டாகின்றன. தினமும் ஏதாவது ஒரு வேளையில், சாப்பிட்டதும் 10 நிமிடங்கள் மட்டும் நடைப்பயிற்சி செய்வதால் ஏராளமான நன்மைகள் ஏற்படும் என்று நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துதல்:

உணவு அருந்திய பின்பு இரத்தத்தில் சர்க்கரையின் அளவு திடீரென உயர்வது இயல்பான ஒன்று. இதைத் தடுத்து சர்க்கரையைச் சீரான அளவில் பராமரிக்க உணவுக்குப் பிந்தைய நடைப்பயிற்சி பெரிதும் உதவுகிறது. ஆய்வின்படி நீரிழிவு நோயாளிகள் ஒரே நேரத்தில் அரை மணி நேரம் நடப்பதை விட, உணவிற்குப் பிறகு 10 நிமிடங்கள் நடப்பது அவர்களது உணவுக்குப் பிந்தைய இரத்த சர்க்கரை அளவை மிகச் சிறப்பாகக் குறைக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, இரவு உணவிற்குப் பிறகு நடப்பது சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைக்க பெரிதும் உதவுகிறது.

தசைகளின் குளுக்கோஸ் நுகர்வு:

நாம் உண்ணும் உணவு செரிமானமாகி குளுக்கோஸாக மாறும்போது, அதை உடலின் தசைகள் திறம்படப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சாப்பிட்ட பிறகு 5 முதல் 10 நிமிடங்கள் வரை மிதமான வேகத்தில் நடப்பது கூட இரத்தத்தில் இன்சுலின் மற்றும் சர்க்கரை அளவின் திடீர் உயர்வைத் தடுக்கிறது. நாம் நடக்கும்போது தசைகள் சுருங்கி விரிந்து இரத்தத்தில் உள்ள குளுக்கோஸை இன்சுலினின் தேவையின்றி நேரடியாக உறிஞ்சிக் கொள்கின்றன. இதனால் கணையத்திற்கு அதிக சுமை ஏற்படுவது தவிர்க்கப்பட்டு, இன்சுலின் உணர்திறன் அதிகரிக்கிறது.

உணவு உண்ட பின் பலருக்கும் ஏற்படும் முக்கியப் பிரச்சினை செரிமானமின்மையும் வயிறு உப்பசமும் ஆகும். இவர்கள் உணவுக்குப் பிறகு 10 முதல் 15 நிமிடங்கள் மிதமான நடைபயிற்சி மேற்கொண்டால், அவர்களின் குடல் அசைவுகள் சீராகி செரிமானப் பிரச்சினைகள் குறைகின்றன. நடைபயிற்சி செரிமான மண்டலத்தைத் தூண்டி, உணவு எளிதாகக் குடலுக்குள் நகர உதவுகிறது. இதனால் நெஞ்செரிச்சல் மற்றும் வாயுத் தொல்லைகள் பெருமளவில் தவிர்க்கப்படுகின்றன.

இதய ஆரோக்கியம்:

உணவுக்குப் பிந்தைய சிறு நடைபயிற்சி இதயத்திற்கும் நன்மை செய்கிறது. நடக்கும்போது இரத்த அழுத்தம் சீராகிறது. உணவு உண்டபின் நடப்பது உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரித்து தமனிகளின் அழுத்தத்தைக் குறைக்கிறது. இது உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதயம் சார்ந்த நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்தைப் பெருமளவு குறைக்கிறது. தொடர்ச்சியாக இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கும் போது இரத்த நாளங்களின் நெகிழ்வுத்தன்மை அதிகரித்து இதயம் வலுவாகிறது.

யாரெல்லாம் உணவுக்குப் பிறகு நடக்கக் கூடாது?

உணவுக்குப் பிறகு மிதமான நடைபயிற்சி பெரும்பாலானோருக்கு நன்மை என்றாலும், குறிப்பிட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியமாகும். குறிப்பாக, மாரடைப்பு அல்லது கடுமையான இதயச் செயலிழப்பு உள்ளவர்கள் மருத்துவரின் வழிகாட்டுதல் இன்றி சாப்பிட்ட உடனே நடப்பதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல், கடுமையான மூட்டுவலி, கீல்வாதம் அல்லது கால் நரம்பு பிரச்சினைகள் உள்ளவர்கள், அதிக நேரம் நடப்பது வலியை அதிகரிக்கும் என்பதால் மருத்துவரின் அறிவுரைப்படி சிறிய அளவில் மட்டுமே நடக்க வேண்டும்.

வயிற்றுப் பகுதியில் சமீபத்தில் பெரிய அறுவை சிகிச்சைகள் செய்தவர்களும், மருத்துவர் இயல்பு நிலைக்குத் திரும்ப அனுமதிக்கும் வரை இத்தகைய நடைப்பயிற்சியைத் தவிர்க்க வேண்டும். உணவுக்குப் பின் செய்யப்படும் நடைபயிற்சி என்பது வேகமாகச் செய்யும் உடற்பயிற்சி அல்ல, மாறாக மிக மெதுவான மற்றும் மிதமான நடை மட்டுமே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சிக்குள் கால் ஆட்டும் பழக்கமும் உள்ளடங்குகிறதா?



அமர்ந்திருக்கும்போது கால் ஆட்டுவது, மொபைலில் பேசும்போது நடப்பது உள்ளிட்ட தற்செயல் உடல் அசைவுகளும் இதய ரத்தக் குழாய் நோய்களின் அபாயத்தையும் சில நேரங்களில் மரண ஆபத்தையும் கூட குறைக்கக்கூடும்

திட்டமிட்டு உடற்பயிற்சி செய்யாத நேரங்களிலும் நாம் மேற்கொள்ளும் சிறிய உடலசைவுகள் இதய ரத்தக் குழாய் நோய்களின் அபாயத்தையும், சில நேரங்களில் மரண ஆபத்தையும் கூட குறைக்கக்கூடும். கூட்டத்தில் அமர்ந்திருக்கும்போது, விமானப் பயணத்தின்போது அல்லது இந்தக் கட்டுரையைப் படித்துக்கொண்டிருக்கும்போதுகூட இதுபோன்ற எளிய அசைவுகளைச் செய்யலாம்.

ஒரு நாள் முழுவதும் அமர்ந்தபடியே இருப்பது எளிதான விஷயமாகிவிட்டது. முதலில் அலுவலக நாற்காலியில் அமர்ந்து வேலை செய்வது, பின்னர் வாகனத்தில் பயணம், அதன் பிறகு வீட்டில் சோ.்பாவில் சில மணி நேரம் செலவிடுவது என நாள் நகர்கிறது. இரவு உணவு சாப்பிடும் நேரத்தில் தான், நாள் முழுவதும் எந்த உடற்பயிற்சியும் செய்யவில்லை என்பது பலருக்குப் புரிகிறது.

உலகம் முழுவதும் நடத்தப்பட்ட பல ஆய்வுகள், நீண்ட நேரம் அமர்ந்திருக்கும் வாழ்க்கை முறை பல்வேறு கடுமையான உடல்நலப் பிரச்னைகளின் அபாயத்தை அதிகரிக்கக்கூடும் என்று கூறுகின்றன. எனவே, அமர்ந்திருக்கும் நேரத்தைக் குறைக்கும் எந்த முயற்சியும் ஒட்டுமொத்த உடல்நலத்துக்கு நன்மை பயக்கும். ஆனால் அதற்கென நேரம் ஒதுக்குவது பலருக்கு சவாலாக இருக்கலாம்.

அந்த இடைவெளியை நிரப்புவதற்காகவே ”தற்செயலான உடற்பயிற்சி” (Incidental Exercise) முக்கியத்துவம் பெறுகிறது. திட்டமிட்ட உடற்பயிற்சிக்கு அப்பால், அன்றாட வாழ்க்கையில் நாம் இயல்பாகச் செய்யும் உடலசைவுகளே இதன் அடிப்படை.

இது "Non-Exercise Activity Thermogenesis- (NEAT) என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது, தூங்குவது, உணவு உட்கொள்வது அல்லது திட்டமிட்டு உடற்பயிற்சி செய்வது ஆகியவற்றைத் தவிர, உடல் இயக்கத்துக்காக செலவிடப்படும் ஆற்றல் என இதை விளக்குகிறார் நியூசிலாந்தின் ஆக்லாண்ட் தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆய்வாளர் அனந்த நாராயணன்.

அமர்ந்தபடி கால் ஆட்டுவது, பாத்திரங்கள் கழுவுவது போன்ற சாதாரண செயல்கள்கூட தற்செயலான உடற்பயிற்சியாகக் கருதப்படுகின்றன. ”உட்கார்ந்திருக்கும் நிலையில் உடல் நிலையை மாற்றிக்கொள்வது, தோள்பட்டையைச் சுழற்றுவது, பாதங்களை வளைத்து நீட்டுவது போன்ற சிறிய அசைவுகளும் இதில் அடங்கும்” என்கிறார் அவர்.

தற்செயலான உடற்பயிற்சி, எதிர்பாராத வகையில் உடல்நலத்தைப் பாதுகாக்கும் சக்திவாய்ந்த கருவியாக உருவெடுத்து வருகிறது. இது கூடுதல் கலோரிகளை எரிக்கவும், இதய நோய் அபாயத்தைக் குறைக்கவும், சில ஆய்வுகளின் படி மரண ஆபத்தைக் கூடக் குறைக்கவும் உதவக்கூடும்.

இந்த வகையான உடலசைவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த பிறகு, அன்றாட வாழ்க்கையில் சில எளிய மாற்றங்கள் மூலம் அவற்றை அதிகப்படுத்த முடியும்.


BEHIND ME MEDIA
BEHIND ME MEDIA
Now in JAFFNA
NEW OFFICE • NEW OPPORTUNITIES
SAME BIG VISION
யாழ்ப்பாணத்தில்
உங்கள் திறமையை
வெளிப்படுத்த
ஒரு புதிய வாய்ப்பு!
யாழ்ப்பாணம்
JAFFNA
Behind Me International Media
நிறுவனத்தின் புதிய Jaffna Office
தற்போது திறக்கப்பட்டுள்ளது!
219, Kandy Road, Jaffna – A9 Road
Join Our Team
STRATEGY
BRAND
GROWTH
Administration Officer
Marketing Executive
Video Editors
Video Jockeys – Presenters
WE'RE LOOKING FOR
Administration Officer & Marketing Executive
Relevant work experience
Strong English communication skills
Professional & hardworking attitude
IF YOU ARE A
Video Editor or Video Jockey / Presenter
Passionate about media and content creation
Ready to showcase your talent
Eager to grow in the media industry
This is your chance!
GROW YOUR CAREER
BE PART OF A CREATIVE TEAM
MAKE AN IMPACT THROUGH MEDIA
Media
Marketing
Digital Content
Your Future Starts Here!
APPLY NOW!
Send your Resume / CV to
info@behindmemedia.com
LET'S CREATE BIGGER STORIES TOGETHER!
FROM
JAFFNA
TO A
BIGGER TOMORROW



BEHIND ME MEDIA

உலக நீதிக்கான போராட்டத்தில் தன் வாழ்நாளை அர்ப்பணித்த நவநீதம் பிள்ளை!

தென்னாபிரிக்காவில் தமிழ் வம்சாவளியில் பிறந்து சர்வதேச மனித உரிமைகளுக்காகப் போராடி 2026 அமைதிக்கான நோபல் பரிசு வென்ற நவநீதம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு.

நிறவெறிக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தில் தன் வாழ்நாளை அர்ப்பணித்து, இன்று உலக அரங்கில் தமிழர்களின் பெருமையை உச்சத்திற்குக் கொண்டு சேர்த்துள்ளவர் நவநீதம் பிள்ளை! தென்னாப்பிரிக்காவில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து நெல்சன் மண்டேலா போன்றோருக்காகச் சட்டப் போராட்டம் நடத்தி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையராக உயர்ந்த இவரது பயணம் பல திருப்பங்கள் கொண்டது.

உலகில் மனிதர்களிடையே அமைதியும் சமத்துவமும் நிலவ வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் வாழ்பவர்கள் சிலரே. இனப் பாகுபாடு, நிறவெறி, பாலின வேறுபாடு, மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு எதிராகத் துணிச்சலுடன் குரல் கொடுப்பவர்கள் வரலாற்றில் அழியாத இடத்தைப் பெறுகின்றனர். அத்தகைய பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவர் நவநீதம் பிள்ளை. தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த இவர், 2026ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றிருப்பது தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

நவநீதம் பிள்ளை, 1941 செப்டம்பர் 23ஆம் தேதி தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் நரைன்சாமி நாடூ (Narrainsamy Nadoo), சாந்தமா நாடூ (Santhama Nadoo) ஆவர்.

இவருடைய குடும்பம் இந்தியத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தது. இவரது தாத்தா, பாட்டி உள்ளிட்ட முன்னோர்கள் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்காவுக்குச் சென்றனர். அங்கு கரும்புத் தோட்டங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றிய இந்தியர்களின் வரலாற்றுப் பின்னணியுடன் இவரது குடும்பமும் தொடர்புடையது.

நரைன்சாமி நாடூ பேருந்து ஓட்டுநராகப் பணியாற்றினார். குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளைச் சமாளிக்கக் கூடுதல் வேலைகளையும் செய்தார். அவரது தாயார் சாந்தமா நாடூ குடும்பத்தைக் கவனித்துக் கொண்டார்.

இவர்களுக்குப் பிறந்த எட்டுக் குழந்தைகளில் நவநீதம் ஐந்தாவது குழந்தை ஆவார். அவருடைய குடும்பத்தின் பின்னணி வெளிநாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் எதிர்கொண்ட சமூகச் சவால்களை நினைவூட்டுகிறது.

அவர் வளர்ந்த காலத்தில் தென்னாப்பிரிக்காவில் நிறவெறிக் கொள்கையான நிறவெறிப் பிரிவினை முறை (யியசவாநனை) கடுமையாக நடைமுறையில் இருந்தது. சருமத்தின் நிறத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, குடியிருப்பு, அரசியல் உரிமைகள் உள்ளிட்டவற்றில் வேறுபாடுகள் காட்டப்பட்டன.

இத்தகைய அநீதிகளை இளம் வயதிலேயே கண்ட நவநீதம் பிள்ளை, சட்டத்தின் வழியாக மக்களுக்கு நீதி பெற்றுத்தர வேண்டும் என்று உறுதி கொண்டார். சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞரானார்.

1967ஆம் ஆண்டு, நடால் மாகாணத்தில் சொந்தமாகச் சட்ட அலுவலகம் தொடங்கிய முதல் பெண் என்ற பெருமையையும் பெற்றார்.

நவநீதம் பிள்ளையின் வாழ்க்கையில் சட்டம் என்பது வெறும் தொழிலாக இருக்கவில்லை ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கருவியாக இருந்தது. நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களுக்குச் சட்ட உதவி வழங்கினார். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்பட்டார்.

தென்னாப்பிரிக்காவின் விடுதலைப் போராட்டத் தலைவரான நெல்சன் மண்டேலா உள்ளிட்ட நிறவெறி எதிர்ப்பாளர்களுக்குச் சட்டரீதியான ஆதரவு வழங்கிய வழக்கறிஞர்களில் இவரும் ஒருவர்.

1995ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் கறுப்பினப் பெண் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினார். ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அதன் செல்வத்தைக் கொண்டு மட்டும் அளவிட முடியாது அச்சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் சம உரிமையும் நீதியும் கிடைக்கிறதா என்பதுதான் உண்மையான அளவுகோல் என்பதை அவரது வாழ்க்கை உணர்த்துகிறது.

நவநீதம் பிள்ளையின் பணிகள் தென்னாப்பிரிக்காவுடன் முடிந்துவிடவில்லை. உலகளாவிய மனித உரிமைப் பாதுகாப்பிலும் அவர் முக்கியப் பங்காற்றினார். 1999ஆம் ஆண்டு ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்றார். பின்னர் அதன் தலைவராகவும் பணியாற்றினார்.

இனப்படுகொலை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

ருவாண்டா இனப்படுகொலை தொடர்பான வழக்குகளில், பாலியல் வன்முறையும் பாலியல் வல்லுறவும் குறிப்பிட்ட சூழல்களில் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களாகவும் இனப்படுகொலையின் கூறுகளாகவும் கருதப்படுவதற்கு அவரது நீதித்துறைப் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

2003 முதல் 2008 வரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றினார். உலகின் பல பகுதிகளில் நிகழும் கடுமையான குற்றங்களுக்கு எதிராகச் சர்வதேசச் சட்டம் செயல்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைப் பணி:

2008 முதல் 2014 வரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையராக நவநீதம் பிள்ளை பணியாற்றினார். உலகெங்கிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அரசுகள் தங்களுடைய குடிமக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

உலகில் மனிதர்களிடையே அமைதியும் சமத்துவமும் நிலவ வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் வாழ்பவர்கள் சிலரே. இனப் பாகுபாடு, நிறவெறி, பாலின வேறுபாடு, மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு எதிராகத் துணிச்சலுடன் குரல் கொடுப்பவர்கள் வரலாற்றில் அழியாத இடத்தைப் பெறுகின்றனர்.





இனம், மதம், பாலினம், சமூகப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவர் ஒதுக்கப்படக் கூடாது என்பது நவநீதம்பிள்ளையின் பணிகளின் அடிப்படைக் கருத்தாக இருந்தது. பெண்கள், குழந்தைகள், சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர் தொடர்ந்து கவனம் செலுத்தினார்!

இனம், மதம், பாலினம், சமூகப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவர் ஒதுக்கப்படக் கூடாது என்பது அவரது பணிகளின் அடிப்படைக் கருத்தாக இருந்தது. பெண்கள், குழந்தைகள், சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர் தொடர்ந்து கவனம் செலுத்தினார்.

சட்டத்தின் ஆட்சி என்பது அதிகாரம் படைத்தவர்களுக்கான பாதுகாப்பு மட்டுமல்ல் அதிகாரமற்றவர்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்தும் அமைப்பாக இருக்க வேண்டும் என்பதே அவரது அணுகுமுறை.

அமைதிக்கான நோபல் பரிசு:

2026 அக்டோபர் 9ஆம் தேதி, நவநீதம் பிள்ளைக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

அமைதியையும் சர்வதேசச் சட்டத்தையும் மேம்படுத்துவதற்காக அவர் ஆற்றிய பணிகளுக்காக இந்தப் பரிசு வழங்கப்படுவதாக நோபல் குழு தெரிவித்தது.

போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் அவர் ஆற்றிய பங்களிப்பு இந்த அங்கீகாரத்தில் முக்கிய இடம் பெற்றது.

அமைதி என்பது போர் இல்லாத நிலை மட்டுமல்ல. மனிதர்கள் அச்சமின்றி வாழ்வதும், தங்களுடைய உரிமைகளைப் பெறுவதும், அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்க முடிவதும் அமைதியின் அடிப்படைகளாகும். இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தியவர்களில் நவநீதம் பிள்ளையும் ஒருவர்.

நவநீதம் பிள்ளை 1965ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பரஞ்சோதி (கேபி) அந்தோணி பிள்ளை (யசயதெழவாநந “புயடில“ யுவொழலெ ஸடையல) என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

அவரது கணவரும் சட்டத் துறையுடன் தொடர்புடையவர். இருவருக்கும் இரண்டு மகள்கள் உள்ளனர்.

தனது குடும்ப வாழ்க்கையையும் சட்டப் பணியையும் ஒருங்கிணைத்துக் கொண்டு, சர்வதேச அளவில் மனித உரிமைகளுக்காகப் பணியாற்றியவர் நவநீதம் பிள்ளை. இருப்பினும், அவரது கணவர் மற்றும் மகள்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த விரிவான தகவல்கள் பொதுவெளியில் அதிகமாகக் கிடைப்பதில்லை.

பிறப்பும் பின்னணியும் ஒருவரின் உயர்வுக்குத் தடையாக இருக்க வேண்டியதில்லை. அறிவு, நேர்மை, துணிச்சல், விடாமுயற்சி ஆகியவற்றின் மூலம் உலக அளவில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

2026ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அவரது நீண்டகாலப் பணிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் மட்டுமல்ல் நீதி, மனிதநேயம், சமத்துவம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் ஊக்கமளிக்கும் செய்தியாகவும் அமைந்துள்ளது.

தமிழ் வம்சத்தின் வேர்களிலிருந்து உலக நீதியின் உயரங்களுக்கு உயர்ந்த நவநீதம் பிள்ளையின் சாதனை, தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பதுடன், மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டும் ஒளியாகத் திகழ்கிறது.

இளைய தலைமுறைக்கு தமிழின்மீது ஆர்வம் ஏற்பட என்ன செய்யவேண்டும்?

இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழின்மீது ஆர்வம் ஏற்பட என்ன செய்யவேண்டும்?

“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்.”

ஒரு செயலைச் செய்வதாகச் சொல்வது எளிது சொன்னபடியே செய்து முடிப்பதுதான் கடினம் என்கிறார் திருவள்ளுவர். இந்தக் குறள் இன்றைய தலைமுறைக்கு தமிழின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் மிகப் பொருத்தமானது.

“படி... புத்தகம் வாசி... தமிழைப் பேசு... தமிழ் இலக்கியத்தைப் படி...” என்று குழந்தைகளிடம் சொல்வது எளிது. ஆனால் நாம் சொல்வதை நாமே செய்கிறோமா என்பதுதான் முக்கியமான கேள்வி.

தமிழின் மீது இளைய தலைமுறைக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான தொடக்கம் பள்ளியில் மட்டுமல்ல் வீட்டில்தான் முதலில் இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பெரிய நூலகம் தேவையில்லை. ஒரு சிறிய அலமாரி போதும். குழந்தைகளின் கண்ணில் படும்படி கவிதை, சிறுகதை, வரலாறு, அறிவியல், வாழ்க்கை வரலாறு, இலக்கியம் போன்ற நல்ல நூல்களை வைக்கலாம்!

“கைப்பேசியை அதிக நேரம் பார்க்காதே புத்தகம் வாசி” என்று ஒரு தந்தை மகனிடம் அறிவுறுத்துகிறார். அதே நேரத்தில் அந்தத் தந்தையின் கையில் கைப்பேசி சமூக வலைதளங்களில் அவரது கவனம். தொலைக்காட்சித் தொடரிலும் ஆர்வம்.

அந்தக் குழந்தை தந்தையின் வார்த்தையைப் பின்பற்றுமா? வாழ்க்கை முறையைப் பின்பற்றுமா? இன்றைய குழந்தைகள் நாம் சொல்வதைக் காட்டிலும், நாம் செய்வதைத்தான் அதிகமாகக் கற்றுக்கொள்கிறார்கள்.

முதலில் மாற வேண்டியது வீடு: தமிழின் மீது இளைய தலைமுறைக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான தொடக்கம் பள்ளியில் மட்டுமல்ல் வீட்டில்தான் முதலில் இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பெரிய நூலகம் தேவையில்லை. ஒரு சிறிய அலமாரி போதும். குழந்தைகளின் கண்ணில் படும்படி கவிதை, சிறுகதை, வரலாறு, அறிவியல், வாழ்க்கை வரலாறு, இலக்கியம் போன்ற நல்ல நூல்களை வைக்கலாம். பிறந்தநாள் பரிசாக ஒரு புத்தகத்தைக் கொடுக்கலாம்.

வாரத்தில் ஒருநாள் குடும்பமாக ஒரு கதையை வாசித்துவிட்டு, அதன் கதாபாத்திரங்களைப் பற்றிப் பேசலாம். “இந்தக் கதையில் உனக்குப் பிடித்தவர் யார்?” என்ற ஒரு கேள்வியே குழந்தைக்குள் சிந்தனையைத் தொடங்கிவைக்கலாம். புத்தகம் வீட்டில் இருக்கும் பொருளாக மட்டும் இல்லாமல், வீட்டின் உரையாடலாக மாற வேண்டும்.

படிப்பு வேறு வாசிப்பு வேறு: பள்ளி, கல்லூரிப் பாடங்களைப் படித்து தேர்வில் வெற்றி பெறுவது கல்வியின் ஒரு பகுதி. ஆனால் வாசிப்பு அதைக் கடந்தது. கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, வரலாறு, இலக்கியம் என தனக்குப் பிடித்தவற்றைத் தேடிச் செல்வதுதான் வாசிப்பின் அழகு.

வாசிப்புக்கு தேர்வு இல்லை. மதிப்பெண் இல்லை. தேர்ச்சி-தோல்வி இல்லை.

ஆனால் அது நமக்கு அனுபவத்தையும் பக்குவத்தையும் தருகிறது. நாம் சந்திக்காத மனிதர்களை அறிமுகப்படுத்துகிறது. பிறரின் துயரத்தைப் புரிந்துகொள்ளவும், மனிதர்களையும் உயிர்களையும் நேசிக்கவும் கற்றுக்கொடுக்கிறது. வாசிப்பு என்பது அறிவைப் பெறுவது மட்டுமல்ல் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதும் ஆகும்.

அவர்களின் ஆர்வத்திலிருந்து தமிழை நோக்கி:

“தமிழ் இலக்கியத்தைப் படி” என்று சொன்னவுடன் எல்லா இளைஞர்களும் இலக்கிய நூலை எடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

கிரிக்கெட் பிடிக்கும் இளைஞருக்கு விளையாட்டு பற்றிய தமிழ் நூலை அறிமுகப்படுத்தலாம். அறிவியலில் ஆர்வமுள்ளவருக்கு அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தலாம். வேளாண்மையில் விருப்பமுள்ளவருக்கு விவசாயிகளின் வாழ்க்கை, பாரம்பரிய வேளாண்மை பற்றிய நூல்களைத் தரலாம். திரைப்படம் பிடித்தவருக்கு திரைக்கதை, திரைப்படக் கட்டுரைகளை அறிமுகப்படுத்தலாம். அவர்களின் விருப்பத்திலிருந்து தமிழை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும். தமிழ் என்பது தேர்வுக்கான பாடம் மட்டுமல்ல் அவர்களின் கனவுகளையும் ஆர்வங்களையும் வெளிப்படுத்தும் மொழி என்பதை உணர்த்த வேண்டும்.

கைப்பேசியும் தமிழுக்கான கருவிதான்: இன்றைய இளைஞர்களை கைப்பேசியிலிருந்து முழுமையாக விலக்குவது சாத்தியமற்றது. அதனால் கைப்பேசியை எதிரியாகப் பார்ப்பதைவிட, அதைத் தமிழுக்கான கருவியாக மாற்றலாம்.

சிறுகதைகள், கவிதைகள், ஒலிப்புத்தகங்கள், இலக்கிய உரைகள், நல்ல தமிழ் காணொளிகள் எனத் தரமான உள்ளடக்கங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம். தொழில்நுட்பம் தமிழுக்கு எதிரி அல்ல் அதை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம்.

கட்டாயத்தால் அன்பு வராது: தமிழை நேசிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினால், தமிழ் இன்னொரு பாடமாகத் தோன்றிவிடும்.

“இந்தக் கதையைப் படித்துப் பாரு உனக்குப் பிடிக்கும்.”
“இந்தக் கவிதையைப் படித்திருக்கிறாயா?”
“இந்த எழுத்தாளர் எழுதிய கதை உனக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்.”


என்று ஆர்வத்தைத் தூண்டலாம். ஒரு நல்ல கதை குழந்தையை அடுத்த கதைக்குக் கூட்டிச் செல்லும். ஒரு நல்ல கவிதை மொழியின் அழகை உணரச் செய்யும். அங்கிருந்து இலக்கியத்தின் மீதான ஆர்வம் இயல்பாக வளரலாம்.

□தமிழைத் திணிக்க வேண்டாம் தமிழை ரசிக்கச் செய்ய வேண்டும்.”

தமிழ் வீட்டில் வாழ வேண்டும்: தமிழின் எதிர்காலம் பாடப்புத்தகங்களில் மட்டும் இல்லை. அது வீட்டில் பேசப்படும் மொழியிலும், பாட்டி சொல்லும் கதையிலும், தாத்தா கூறும் பழமொழியிலும், குழந்தையின் கையில் இருக்கும் புத்தகத்திலும் இருக்கிறது. ஒரு பாட்டி தனது பேரனுக்குத் தூங்குவதற்கு முன் ஒரு நாட்டுப்புறக் கதையைச் சொல்கிறாள் என்று வைத்துக்கொள்வோம்.

அந்தக் குழந்தை அன்றிரவு ஒரு கதையை மட்டும் கேட்கவில்லை. அது ஒரு மொழியையும், ஒரு பண்பாட்டையும், ஒரு தலைமுறையின் நினைவையும் பெற்றுக்கொள்கிறது. அதனால்தான் தமிழைக் காப்பாற்ற வேண்டும் என்று மேடைகளில் பேசுவதைக் காட்டிலும், தமிழை வீட்டில் வாழ வைப்பது முக்கியம்.

BEHIND ME MEDIA



நாம் வாழ்ந்து காட்டுவோம். இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழின் மீது ஆர்வம் இல்லை என்று குறை கூறுவது எளிது. ஆனால் அதற்கு முன் நாம் நம்மிடம் சில கேள்விகளைக் கேட்க வேண்டும்.

குழந்தைகளுடன் தமிழில் உரையாடுகிறோமா?
புத்தகத்தை ஒரு பரிசாகக் கொடுக்கிறோமா?
நம் வாழ்க்கையில் தமிழுக்கு ஒரு இயல்பான இடம் இருக்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களில்தான் அடுத்த தலைமுறையின் தமிழ் இருக்கிறது. ஒரு நாள் நாம் ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது, நம் குழந்தை, “அப்பா... நீங்கள் படிக்கும் அந்தப் புத்தகத்தை நானும் படிக்கலாமா?” என்று கேட்கலாம்.

அந்தக் கேள்வி வருவதற்காகப் பெரிய அறிவுரைகள் தேவையில்லை. திருவள்ளுவர் சொன்னதுபோல், சொன்னதைச் செயலாக்கிக் காட்டினால் போதும். தமிழை நேசிக்கச் சொல்லாதீர்கள். தமிழை நேசிப்பதை அவர்கள் பார்க்கட்டும். அப்போது தமிழ் ஒரு பாடமாக மட்டும் இல்லாமல், ஒரு மொழியாக, ஒரு பண்பாடாக, ஒரு உணர்வாக, ஒரு வாழ்க்கை முறையாக அடுத்த தலைமுறைக்குக் கடந்து செல்லும் செல்லட்டும்.

இந்தக் கட்டுரையை வாசிப்பதன் மூலம், குழந்தைகளின் பழக்கவழக்கங்களில் பெற்றோரின் நேரடித் தாக்கத்தைப் புரிந்து கொண்டு, திணிப்பு இல்லாமல் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தமிழ் மொழியையும் வாசிப்பையும் இயற்கையாகவே வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றும் செயல்முறை உத்திகளைப் பெறலாம்.

நன்றி - இணையம்



ஸ்பெயினில் இரயில் பயணம் பேரழிவாக மாறியது எப்படி?

ஸ்பெனில் கடந்த புதன்கிழமை இரு அதிவேக ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 68ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த விபத்தில் குறைந்தது 80 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டொலெடோ மாகாணத்தில் உர்டா மற்றும் லாஸ் யெபெனெஸ் நகரங்களுக்கு இடைப்பட்ட ரயில் மார்க்கத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் அந்நாட்டின் பிராந்திய அரசின் ஊடகப் பேச்சாளர் எஸ்தர் படில்லா கூறுகையில், குறித்த ஒரு பகுதியில், தண்டவாளத்தில் ரயிலொன்று தரித்து நின்றபோது, அதே தண்டவாளத்தில் எதிர்த்திசையிலிருந்து வந்துகொண்டிருந்த ரயில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் மீது நேருக்கு நேராக மோதியுள்ளது என்கிறார்.

ஸ்பெயின் நாட்டின் தலைநகரான மெட்ரிட்டிலிருந்து செவில்லி நோக்கி சென்றுகொண்டிருந்த அரசுக்கு சொந்தமான ரயிலே, வேகமாக வந்து நிறுத்தப்பட்டிருந்த தனியார் ரயில் மீது மோதியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ரயில்கள் இரண்டும் தடம் புரண்டதோடு இரண்டு ரயில் பெட்டிகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

அரசு ரயிலில் 397 பயணிகளும் தனியார் ரயிலில் 147 பயணிகளும் இருந்த நிலையில், விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் இரண்டு ரயில்களிலும் இருந்த பயணிகள் அடங்குவர்.

இதனையடுத்து, மாட்ரிட், கியூடட், அண்டலூசியா நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த ஜனவரியில் ஸ்பெயினில் இதே போன்று இரு ரயில் மோதி விபத்து இடம்பெற்றதையடுத்து, தற்போது அங்கு மீண்டும் ஒரு கோர ரயில் விபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயின் நாட்டின் தலைநகரான Madrid (மாட்ரிட்டிலிருந்து) Seville (செவில்லே) நோக்கி தெற்கு திசையில் இரண்டு அதிவேக இரயில்கள் பயணித்துக் கொண்டிருந்தன. அது ஒரு சாதாரண புதன்கிழமை, நேரம் காலை 08:30 (07:30 GMT) மணி நெருங்கிக் கொண்டிருந்தது.

அரசுக்குச் சொந்தமான சுநகெந நிறுவனத்தால் இயக்கப்படும் ஒரு இரயிலில் 397 பயணிகள் இருந்தனர். அதே தண்டவாளத்தில் அதற்கு முன்னால் ஐசலழ என்ற தனியார் நிறுவனத்தின் இரயில் 147 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. தானியங்கி சிக்னல் அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு (கணினி செயலிழப்பு) காரணமாக, பாதிக்கப்பட்ட பகுதியில் அனைத்து இரயில்களும் நிறுத்தப்பட வேண்டியதாயிற்று.

பின்னர், "நம்ப முடியாத ஒன்று நடந்தது" என்று ஸ்பெயினின் போக்குவரத்து அமைச்சர் கூறினார். ஏனெனில், நிறுத்தப்பட்டிருந்த "ரென்.்.பே" இரயிலை "தவறுதலாக" முன்னோக்கிச் செல்ல உத்தரவிடப்பட்டது.

மாட்ரிட்டிற்கு தெற்கே சுமார் 140 கி.மீ (87 மைல்) தொலைவில் உள்ள Mora மற்றும் Orgaz நகராட்சிகளுக்கு இடையே, அந்த இரயில் முன்னால் சென்று கொண்டிருந்த மற்றொரு இரயிலின் பின்பகுதியில் பலமாக மோதியது.

"மக்கள் தங்கள் இருக்கைகளிலிருந்து தூக்கி வீசப்பட்டனர்" - பயணி ஒருவர் கூறத் தகவல் முறிந்த கைகள், உடைந்த மூக்குகள், கூரையை ஊடுருவிய இரயில் தண்டவாளம் சில பயணிகள் தூங்கிக் கொண்டிருந்தனர், சிலர் மடிக்கணினிகளில் தங்களது வேலைகளைத் தொடங்கியிருந்தனர் - மற்றவர்கள் தங்களது தொலைபேசிகளில் செயலிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தண்டவாளத்தில் நெரிசல் இருப்பதாகச் செய்யப்பட்ட ஒரு அறிவிப்பினால் பயணம் இடைநிறுத்தப்பட்டது. இது சில நிமிடங்களுக்கு நீடித்தது - சிலருக்குச் சிறிது நேரமும், வேறு சிலருக்கு இன்னும் சிறிது அதிக நேரமும் நீடித்தது.

ஸ்பெயின் நாட்டுச் செய்தியாளரான Roberto Gómez (ரோபர்ட்டோ கோலெஸ்), பினியரின் இரயிலில் இருந்து 25 கி.மீ (16 மைல்) தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த அதிவேக "ரென்.்.பே" இரயிலில் லேசாக உறங்கிக் கொண்டிருந்தார்.

அது ஒரு குறுகிய நிறுத்தமாக இருந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு இரயில் மீண்டும் நகரத் தொடங்கியதாகவும், அதைத் தொடர்ந்து இந்த விபத்து நடந்ததாகவும் அவர் விளக்கினார்.

காலை 08:36 மணிக்குத் தனது இரயில் பயணத்தைத் தொடர உத்தரவிடப்பட்டதையும், சுமார் 17 நிமிடங்களுக்குப் பிறகு இந்த "உண்மையிலேயே நம்ப முடியாத" சம்பவம் நடந்ததையும் அவர் அறிந்திருக்கவில்லை என்று ஸ்பெயினின் போக்குவரத்து அமைச்சர் Óscar Puente தெரிவித்தார்.

"மோதலின் தாக்கம் மிகக் கொடூரமாக இருந்தது," என்று கோலெஸ் 'Onda Cero' (ஒண்டா செரோ) வானொலியிடம் கூறினார். "நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியும், இரயில் பெட்டி முற்றிலும் சிதைந்துவிட்டது. சேதமடைந்த பெட்டி முழுவதும் பயணிகளின் பெட்டிகள் சிதறிக் கிடந்தன."

கோலெஸிற்கு லேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டன, ஆனால் மற்றொரு பயணி தன் மீது விழுந்து, தலையில் பலத்த வெட்டுக் காயத்திற்கு உள்ளானதை அவர் விவரித்தார்.

"மார்பு மற்றும் விலா எலும்புகளில் பலத்த அடிபட்ட மக்களுக்கு எங்களால் உதவி செய்ய முடிந்தது" என்று அவர் கூறினார்.

ஸ்பெயின் நாடு ஏற்கனவே ஜனவரி மாதம் Córdoba (கோர்டோபா) பகுதிக்கு வெளியே யுனயஅரண அதிவேக இரயில் பேரழிவில் 46 பேரை இழந்து தவித்துக் கொண்டிருந்தது.



ஸ்பெயின் ரயில் விபத்தில் 2 கனடியர்கள் காயம்?

ஸ்பெயினில் நின்று கொண்டிருந்த ரயிலின் பின்புறத்தில் அதிவேக ரயில் ஒன்று மோதியதில், இரண்டு பெட்டிகள் தடம் புரண்டு டஜன் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

புதன்கிழமை அன்று ஸ்பெயினில் நடந்த ஒரு பெரிய ரயில் விபத்தில் குறைந்தது இரண்டு கனடியர்கள் காயமடைந்துள்ளனர்.

பிரதமர் Mark Carney பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது "துயரத்தையும் ஒற்றுமையையும்" வெளிப்படுத்தும் வேளையில் இந்த விவரத்தை வெளியிட்டார்.

"எதிர்வரும் நாட்களிலும் வாரங்களிலும் எங்கள் எண்ணங்கள் அவர்களின் குடும்பத்தினர், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுடன் இருக்கும்," என்று கார்னி புதன்கிழமை ஒட்டாவாவில் கூறினார். தேவைப்படும் "எந்தவொரு உதவியையும்" வழங்க கூட்டாட்சி அரசு தயாராக உள்ளது என்றும், மேலதிக விவரங்களைக் குறிப்பிடாமல் அவர் மேலும் தெரிவித்தார்.



அது அதே அதிவேக இரயில் பாதையில், ஆனால் தெற்கே சற்றுத் தொலைவில் நடந்தது. எனவே புதன்கிழமை நடந்த இந்த விபத்து அதிகாரிகளுக்கு பல கேள்விகளை எழுப்பியுள்ளது. பாதிக்கப்பட்ட பயணிகள் மிகுந்த ஆத்திரத்தில் காணப்பட்டனர்.

"எங்கள் இரயில் ஐந்து அல்லது 10 நிமிடங்கள் நிறுத்தப்பட்டிருந்ததும், மற்ற இரயிலுக்கு நிறுத்துமாறு உத்தரவிடப்படாமல் இருந்ததும் எப்படி சாத்தியமாகும்?" என்று அவர்களில் ஒருவர் கூறினார்.

"நம்மிடம் உள்ள நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு இது எப்படி நடக்க முடியும்?" என்று அவர்கள் மேலும் கூறினர். "இது சாதாரணமானது அல்ல. எங்களுக்கு எதுவும் சொல்லப்படவில்லை. தகவல் தெரிவிக்கப்பட வேண்டிய நபர் மற்ற இரயிலின் ஓட்டுநர் ஆவார். மற்ற இரயிலுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் வரை எங்களுக்கு கவலை இருந்திருக்காது. இது எனக்குப் புரியவே இல்லை" என்றும் அவர்களில் ஒருவர் கூறினார்.





பிறந்த சில மணி நேரத்தில் பந்தாவாகப் படுத்திருந்த குழந்தை!



பொதுவாகப் பிறந்த குழந்தைகள் அழுதுகொண்டே உலகை வரவேற்பது வழக்கம். ஆனால், எகிப்து நாட்டின் கெய்ரோ நகரில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் பிறந்த பச்சிளம் குழந்தை ஒன்று, வைத்தியர்களின் பரிசோதனையின்போது பெரியவர்கள் போல 'Cool pose' கொடுத்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

கெய்ரோ வைத்தியசாலையில் பிறந்த சில மணி நேரங்களே ஆன பச்சிளம் குழந்தைக்கு, குழந்தை நல வைத்தியர்கள் வழக்கமான ஸ்டெதாஸ்கோப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அப்போது வைத்தியப் படுக்கையில் படுத்திருந்த அக்குழந்தை, எந்தவிதப் பதற்றமும் அல்லது பயமும் இன்றி, தனது இரண்டு கைகளையும் தலைக்குப் பின்னால் முட்டுக் கொடுத்துக் கொண்டு, கால்களை ஒன்றின் மேல் ஒன்றாகப் போட்டவாறு மிகவும் இயல்பாகவும் “கூல்“ ஆகவும் படுத்திருந்தது.

தங்கத்தால் ஜொலிக்கும் புதிய நடைபாதை: துபாயில் புதுமை!



துபாய் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 24 காரட் சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்ட புதிய நடைபாதை ஒன்றை இந்த ஆண்டின் இறுதிக்குள் திறக்க துபாய் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

துபாயின் வரலாற்றுச் சிறப்புமிக்க டேரா பகுதியில் அமைந்துள்ள ‘துபாய் கோல்ட் டிஸ்ட்ரிக்ட்’ வளாகத்தில் இந்த நடைபாதை அமையவுள்ளது.

இந்த பிரம்மாண்ட வணிகப் பகுதியில் 1,000-க்கும் மேற்பட்ட தங்க நகை வியாபாரிகள் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது உலகிலேயே முதன்முறையாக அமைக்கப்படும் மிக நீளமான தங்க நடைபாதை என்று துபாய் கோல்ட் டிஸ்ட்ரிக்ட் அழைக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், புதிய இந்தச் தங்க நடைபாதை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகச் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

துபாய்க்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கம் பதித்த பாதையில் நடக்கும் ஒரு தனித்துவமான ஆடம்பர அனுபவத்தை வழங்குவதும், உலகளாவிய தங்க வர்த்தக மையமாக துபாயின் நிலையை மேலும் வலுப்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

விண்வெளியில் ரஷியா - அமெரிக்கர் புதிய செய்தி!



KOSMOS 2612 என்ற ரஷிய சாடலைட் ICEYE – X36 என்ற அமெரிக்க வணிக விண்கலத்தின் அருகெ சென்று SYNTHETIC APERTURE RADAR – SAR எனப்படும் ராடாரை வைத்துப் பார்த்திருக்கிறது. இதை மார்கோ லாங்ப்ரோக் என்னும் சாடலைட்டுகள் ஓடுவதைக் கண்காணிக்கும் நிறுவனம் கண்டு பிடித்து அறிவித்திருக்கிறது. இதை அந்த நிறுவனம் கவலை அளிக்கும் எலி-பூனைச் சண்டை விளையாட்டு என்று வர்ணித்திருக்கிறது.

இது உலகளாவிய விதத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் இது வழக்கத்திற்கு மாறான ஒன்று அத்துடன் இது மிகவும் நெருக்கமான அளவில் இருந்திருக்கிறது. அதாவது ஒரு கட்டத்தில் இரு கலங்களுக்கும் இடையே சில மீட்டர் தூரமே இருந்துள்ளது.

ரஷியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பல விண்கலங்கள் விண்ணில் உலவுகின்றன. ஜியோ ஸ்டேஷனரி ஆர்பிட் என்று சொல்லப்படும் பூமிக்கு மேலே 22236 அடி உயரத்தில் இவை சுற்றுகின்றன. இது உளவு பார்க்கச் சரியாக அமையும் தூரமாகும்.

முழுளுஆழுளு 2612 பூமிக்குக் கீழ் சுற்றுப்பாதையில் சுற்றும் சாடலைட் என்பதால்தான் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சீனாவோ அமெரிக்காவோ இந்த கீழ் சுற்றுப்பாதையில் ஒருவருக்குத் தெரியாமல் இன்னொருவர் ஒற்றுப் பார்க்கும் இந்த வேலையைச் செய்ததில்லை. உக்ரேனின் ராணுவத்துருப்பு நடமாட்டம் உள்ளிட்ட பல்வேறு தரவுகளை ரஷியா இதனால் பெறமுடியும்.

இப்படி ரஷியா தனது ராக்கெட்டை அமெரிக்க விண்கலத்தின் அருகே செலுத்தியதால் அடையும் பலன் என்ன? ஆறு மாத காலமாக ஒரு முன்னேற்றத்தையும் அடையாததால் ரஷியா பெருத்த ஏமாற்றத்தை அடைந்துள்ளது. உக்ரேனிடம் ராக்கெட் தொழில்நுட்பம் இல்லை. ஆனால் அவர்கள் ட்ரோன் விடுவதில் வல்லவர்கள்.

ATM Button ஏன் எப்போதுமே இரும்பில் இருக்கு?



நம்மில் பலரும் தற்போது பணம் எடுப்பதற்காக ATM இயந்திரங்களை அடிக்கடி பயன்படுத்துகிறோம். இயந்திரத்தில் கார்டை போட்டு ரகசிய எண்ணை அழுத்திப் பணத்தை எடுத்துவிட்டு வந்துவிடுவோம். ஆனால் அந்த இயந்திரத்தில் உள்ள பட்டன்கள் எந்தப் பொருளால் செய்யப்பட்டுள்ளது என்பதை நம்மில் 99 சதவீத மக்கள் கவனித்திருக்கவே மாட்டார்கள். அவை எப்போதுமே உலோகம் கொண்டுதான் தயாரிக்கப்படுகின்றன.

பொதுவாக ஒரு ATM இயந்திரத்தை தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து பயன்படுத்துவார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பட்டன்களை அழுத்துவார்கள். ஒருவேளை அவை பிளாஸ்டிக் மூலம் செய்யப்பட்டிருந்தால் மிக எளிதாக உடைந்துவிடும். ஆனால் உலோகத்தால் செய்யப்படும் பட்டன்கள் மிகவும் வலிமையானவை. கடுமையான பயன்பாடு, அடிக்கடி சுத்தம் செய்யும் ரசாயனங்கள் மற்றும் முரட்டுத்தனமான கையாளுதல் போன்ற அனைத்தையும் தாங்கி மிக நீண்ட காலம் உழைக்கும் தன்மையை இவை இயல்பாகவே கொண்டுள்ளன.

இதில்தான் ஒரு மிக முக்கியமான பாதுகாப்பு ரகசியம் ஒளிந்துள்ளது. நாம் பிளாஸ்டிக் பட்டன்களை அழுத்தும்போது நமது கைவிரல்களின் உடல் வெப்பம் அந்தப் பட்டன்களில் சிறிது நேரம் அப்படியே தங்கிவிடும். திருடர்கள் வுாநசஅயட ஐஅயபபை எனப்படும் அதிநவீன கேமராக்களைப் பயன்படுத்தி நாம் எந்தெந்த எண்களை அழுத்தினோம் என்பதை அந்த வெப்பத்தின் அளவை வைத்து மிக எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். ஆனால் ஏடிஎம் கீபோர்டு பேனல் அந்த வெப்பத்தை உடனடியாக வெளியேற்றி எவ்வித தடயமும் இல்லாமல் செய்துவிடும். சில நேரங்களில் கொள்ளையர்கள் இயந்திரத்தை உடைத்துப் பணத்தைத் திருட முயற்சிப்பார்கள். அந்த மாதிரியான நேரங்களில் உலோகப் பட்டன்கள் இயந்திரத்தின் உள்ளே இருக்கும் முக்கியமான எலக்ட்ரானிக் பாகங்களைச் சேதமடையாமல் பாதுகாக்கும் கவசமாகச் செயல்படுகிறது.

ராஜ கீதம்ஸ் நிகழ்வில் சுப்பர் சிங்கர் புகழ் சுகன்யாவுடன் இணைந்து பாடிய Behind Me Media ஊடகவியலாளர் நிரோஷ் விஜய்!









கனடா TMS என அழைக்கப்படும் V.S. தெய்வேந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'ராஜகீதம்ஸ்' இசை நிகழ்வு கடந்த வாரம் கனடாவில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் Behind Me International Media நிறுவனத்தின் ஊடகவியலாளர் நிரோஷ் விஜய்யும் கலந்துகொண்டு, சுப்பர் சிங்கர் புகழ் பாடகி சுகன்யாவுடன் இணைந்து, 2013ஆம் ஆண்டு வெளியான 'சோளி சோளி□ என்ற தேசிய விருது பெற்ற நவீன கிராமியப் பாடலைப் பாடி, பார்வையாளர்கள் மத்தியில் தனித்துவமான வரவேற்பையும் சிறப்புக் கௌரவத்தையும் பெற்றார். குறிப்பாக, நிரோஷ் விஜய்யும் சுகன்யாவும் இணைந்து வழங்கிய இப்பாடல் நிகழ்வில் கலந்துகொண்ட ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

மேலும், 'சோளி சோளி' பாடலுக்கு 2015ஆம் ஆண்டு இலங்கை அரச விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடமேல் அபிவிருத்தி மற்றும் அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ், கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக்கழகத்தின் அரச குழுவினால் இவ்விருது வழங்கப்பட்டிருந்தது.

கனடாவில் நடைபெற்ற இசை மேடையில் தேசிய விருது பெற்ற இப்பாடலை மீண்டும் உயிர்ப்பித்து, பிரபல பாடகி சுகன்யாவுடன் இணைந்து நிரோஷ் விஜய் பாடியமை ரசிகர்களுக்கு ஒரு சிறப்பான இசை அனுபவமாக அமைந்தது.













வாழ்வாதாரச் சிக்கல்: தீவிரமடையும் ஐரோப்பிய இளம் சமூகத்தின் போராட்ட அலை!

தொடர்ச்சி

சமீபத்தில் ஹாலோவீன் வார இறுதி ஆர்ப்பாட்டங்களைச் சுற்றி மோதல் தீவிரமடைந்துள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகள் முழுவதும் தற்போதைய நிலைமை பின்வருமாறு:

பிரான்ஸ் : நிலைமை: நிதிப் பற்றாக்குறையுள்ள கல்வி, ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பள்ளி நிலைமைகள் காரணமாக ஆர்ப்பாட்டங்கள் முதலில் வெடித்தன, ஆனால் விரைவில் வாழ்க்கைச் செலவு மீதான பரவலான கோபம் மற்றும் அரசாங்கத்தின் 2027 பட்ஜெட் பேச்சுவார்த்தைகளுடன் இணைந்தன.

தற்போதைய நிலை: சமீபத்திய வார இறுதி ஆர்ப்பாட்டங்களின் போது நாடு முழுவதும் 320,000 க்கும் மேற்பட்டோர் தெருக்களில் இறங்கினர். உள்துறை அமைச்சர் லாரன்ட் நூனெஸ் முக்கிய நகரங்களைக் கட்டுப்படுத்த 70,000 காவல் துறையினரை அமர்த்தினார், இதனால் 560க்கும் மேற்பட்ட கைதுகள் நடந்தன. பாரிஸின் பிளேஸ் டி லா ரெபப்ளிக் மற்றும் நைஸ் உட்பட பிரான்ஸின் சில பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப் பட்டுள்ளது.

ஜெர்மனி : நிலைமை: 30க்கும் மேற்பட்ட ஜெர்மன் நகரங்களில் பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் ஒன்றுதிரண்டுள்ளனர். ஜென் இசட் குழுக்கள் கல்விச் சீர்திருத்தம், குறைந்த வாழ்க்கைச் செலவுகள் மற்றும் கட்டாய இராணுவச் சேவைக்கு எதிராகப் போராடுகின்றன.

தற்போதைய நிலை: வார இறுதியில் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக மாறின, இதனால் கலவரக்காரர்கள் காவல் துறையினர் மீது தாக்குதல் நடத்தினர், கடைகளைக் கொள்ளையடித்தனர் மற்றும் பரவலான சொத்து சேதத்தை ஏற்படுத்தினர்.

இத்தாலி : நிலைமை: புதிதாக உருவாக்கப்பட்ட "அக்டோபர் 17 இயக்கம்" தூண்டுதலால், மாணவர் குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் போருக்கு எதிரான கூட்டணிகள் குறைந்த ஊதியங்கள், மோசமடைந்து வரும் பொதுச் சேவைகள் மற்றும் உயரும் விலைகளுக்கு எதிராகப் போராடுகின்றன.

தற்போதைய நிலை: கலவரம் மற்றும் கொள்ளை முன்பு மிலனின் ஆடம்பர ஷாப்பிங் பகுதிகளை இலக்காகக் கொண்டிருந்தது, இதனால் கடை உரிமையாளர்கள் கடைமுகப்புகளை பலகைகளால் மூடினர். பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியின் நிர்வாகம் அதிக ஆபத்துள்ள பகுதிகளில் வீரர்களை அமர்த்தி, சிறு குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை அறிமுகப்படுத்தி, வன்முறை ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதற்கு 2 முதல் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கும் பாதுகாப்பு ஆணையை நிறைவேற்றியது.



போர்ச்சுகல் ரூ ஸ்பெயின் : நிலைமை: ஐபீரிய தீபகற்பத்தில் வீட்டுவசதி மலிவு என்பது முதன்மை தூண்டுதலாகும். ஸ்பெயினில், ஓய்வூதியதாரர்கள் மற்றும் பிற குடிமைக் குழுக்கள் வரவிருக்கும் முன்கூட்டிய தேர்தல்களுக்கு முன்னதாக பொதுப் பென்ஷன்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு எதிராகத் தெருக்களில் இறங்கியுள்ளனர்.

தற்போதைய நிலை: லிஸ்பனில், போர்ச்சுகீசிய கலவரக் காவல்துறையினர் ரோசியோ சதுக்கத்தில் உள்ள ஒரு பிரம்மாண்டமான மத்திய ஆர்ப்பாட்ட முகாமை வலுக்கட்டாயமாக அகற்றிய பதற்றமான மோதலைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் போராடினர்.

அல்பேனியா : நிலைமை: 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சாசான் தீவில் ஒரு ரிசார்ட் மேம்பாட்டுக்கு எதிரான சுற்றுச்சூழல் ஆர்ப்பாட்டங்களாகத் தொடங்கியது (".பிளமிங்கோ புரட்சி" என அழைக்கப்படுகிறது) ஒரு பிரம்மாண்டமான அரசாங்க எதிர்ப்பு இயக்கமாக மாறியுள்ளது.

தற்போதைய நிலை: திரானாவில் உள்ள மாணவர்களும் குடிமக்களும் அரச ஊழல் மற்றும் அதிக கல்விக் கட்டணங்களைக் காரணம் காட்டி, சோசலிச பிரதமர் எடி ராமாவின் பதவி விலகலைக் கோருகின்றனர். மோதல்கள் வன்முறையாக மாறியுள்ளன, ஆர்ப்பாட்டக்காரர்கள் பட்டாசுகள் மற்றும் தீக்குண்டுகளை வீசினர், காவல்துறையினர் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்துப்பாக்கிகளால் பதிலளித்தனர்.

போலந்து : நிலைமை: மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரக் கவனத்திலிருந்து வேறுபட்டு, போலந்தின் ஆர்ப்பாட்டங்கள் நீதித்துறை நெருக்கடியை மையமாகக் கொண்டுள்ளன. போலந்தின் அரசியலமைப்பு தீர்ப்பாயத்தின் தலைவர் இடைநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியான நாட்கள் ஒன்றுகூடினர், பிரதமர் டொனால்ட் டஸ்கின் அரசாங்கம் நீதித்துறையை சட்டவிரோதமாகக் கைப்பற்றியதாகக் குற்றம் சாட்டினர்.

வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னதாக செலவுகளைக் குறைக்குமாறு பிரதமரிடம் வலியுறுத்தல்

தொடர்ச்சி

அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் $733 பில்லியன் கூடுதல் கடன் ஏற்படும் என்று கணித்துள்ள நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அதிகாரியின் தரவுகளை அவர் மேற்கோள் காட்டினார். இதில் 2026-27 நிதியாண்டில் $63.3 பில்லியன் பற்றாக்குறை அடங்கும்.

Carneyக்கு எழுதிய கடிதத்தில் அரசாங்கத்தின் செலவுகளைக் குறைக்க வேண்டும் என்று பொய்லியேவ் வலியுறுத்தினார். அதில் அதிகாரித்துவ நிர்வாகச் செலவுகள் வீணான வெளிநாட்டு உதவிகள் ஆகியவற்றைக் குறைப்பதோடு, திட்டமிடப்பட்டுள்ள 'ALTO' அதிவேக ரயில் திட்டத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வரவு செலவுத் திட்டம் சமநிலையை எட்டும் வரை பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் என்றும், "வாக்களித்த கடன் வரம்புகளைக் காப்பாற்றுங்கள்" என்றும் பிரதமருக்கு அதிகாரப்பூர்வ எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.


பற்றாக்குறைக்கும் ஜி.டி.பி-க்கும் (GDP) இடையிலான விகிதத்தைக் குறைக்கும் நிதி இலக்கை அரசாங்கம் எட்டாது என்று PBO கணித்துள்ளது மாறாக, 2027-28 மற்றும் 2029-30 நிதியாண்டுகளில் இந்த அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"கனடியர்களுக்கு அவர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் இந்த வரவு செலவுத் திட்டம் மதிப்பிடப்பட வேண்டும்," என்று Pierre Poilievre கூறினார்.


அத்துடன், 'கனடா தினம்' (July 1) வரை டீசல் மீதான கூட்டாட்சி வரிகளை ஒழிக்க வேண்டும் என்றும், கோடைகாலம் வரை எரிபொருள் மீதான GST வரியை இடைநிறுத்த வேண்டும் என்றும், 'எரிபொருள் தர வரp' என அவர் அழைக்கும் வரியை ரத்து செய்ய வேண்டும் என்றும் பொய்லியேவ் கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே, வரவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தின் தலைப்பு மற்றும் கருப்பொருளை கூட்டாட்சி அரசாங்கம் வெளியிட்டது. இது ஒரு "ஆழ்ந்த மாற்றமும் நிச்சயமற்ற தன்மையும் நிறைந்த காலத்தைக்" குறிப்பதாக நிதியமைச்சர் பிரான்சுவா-பிலிப் ஷாம்பெயினின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பொய்லியேவ் தனது கோரிக்கைகளை முன்வைத்த அதே வேளையில், அதிபர் டொனால்ட் டிரம்புடன் தான் ஒரு "நல்ல உரையாடலை" மேற்கொண்டதாகவும், இரு நாடுகளின் குழுக்களும் "பரஸ்பர நன்மை பயக்கும்" வர்த்தக ஒப்பந்தத்தை நோக்கி வரும் வாரங்களில் செயல்பட வுள்ளதாகவும் பிரதமர் கார்னி ஒரு அறிக்கையை வெளியிட்டார்.



சிறுவருக்கான மகாபாரதம்



அத்தியாயம் - 7

பாண்டு இறந்ததும் குந்தியும் பாண்டவர்களும் அத்தினாபுரத்துக்கு வந்தனர்.

பஞ்ச பாண்டவர்கள் திருதராட்டினது நூறு பிள்ளைகளோடும் சேர்ந்து விளையாடுவார்கள்.

துரியோதனனுக்குப் பஞ்ச பாண்டவர்களைப் பிடிக்காது.

அதனால் பஞ்ச பாண்டவர்களுடன் முரண்படுவான்.

வீமன் பெரும் பலசாலி திருதராட்டினது பிள்ளைகள் பத்துப்பேரை ஒரே முறையில் அடிப்பான்.

அதனால் அவர்களுக்கு வீமன் மீது அதிக விரோதம் ஏற்பட்டது.

பிரம்மச்சாரியப் பருவத்தில் திருதராட்டினனது நூறு பிள்ளைகளாகிய கௌரவர்களும் பாண்டுவின் ஐந்து புத்திரர்கள் ஆகிய பஞ்ச பாண்டவர்களும் கிருபாச்சாரியாரிடம் வேதக் கல்வியையும் ஆயுதப் பயிற்சியையும் பெற்றனர்.

வீமன் வீரனாகையால் ஆயுதப் பயிற்சியின் பின் பெருவீரனானான்.

அதனால் அவன் பிற்காலத்தில் தனக்குப் பெரும் விரோதியாக மாறிவிடுவானென நினைத்து அவனைக் கொல்ல வேண்டுமெனத் துரியோதனன் நினைத்தான்.

வீமனைக் கொன்று விட்டால் பாண்டவர்களின் கொட்டம் அடங்கிவிடும்.

பின் அர்ச்சுனனையும் தருமனையும் பிடித்துச் சிறையில் அடைத்து விட்டுத் தான் அரசாளலாம் என்றும் நினைத்தான்.

ஒரு நாள் கங்கைக் கரையில் கூடாரம் அமைத்து அங்கே தங்கியிருந்து நீந்தி விளையாடிய பாண்டவர்களும் கௌரவர்களும் கங்கைக் கரையில் அமைந்திருந்த கூடாரத்தில் உணவருந்தினர்.

கபட எண்ணங்கொண்ட துரியோதனன் வீமனுக்கு ஒதுக்கப்பட்ட உணவில் நஞ்சைக் கலந்தான்.

அதை அறியாத வீமன் உணவை வயிறாற உண்டு விட்டுக் கங்கைக்கரையில் நின்ற மரநிழலில் படுத்து உறங்கினான்.

உணவில் நஞ்சு கலக்கப்பட்டதால் வீமன் மயக்கமடைந்தான்.

அதற்காகக் காத்திருந்த துரியோதனன் காட்டுக்கொடிகளால் வீமனது கைகளையும் கால்களையும் கட்டிக் கங்கை நீருள்த் தள்ளி விட்டான்.

கங்கை நீரில் நீந்தி விளையாடி மீன்களைப் பிடித்துத் தின்று கொண்டிருந்த விஷப்பாம்புகள் வீமனைக் கண்டதும் அது தீன்பண்டமென நினைத்துக் கௌவின.

அதனால் வீமன் உண்ட உணவில் இருந்த விஷம் செயலற்றுப்போய் விட்டது.

அதனால் வீமன் சுயநினைவடைந்தான்.

விஷப் பாம்புகள் வாழும் கங்கை நீரில் தள்ளப்பட்ட வீமனை விஷப் பாம்புகள் தீண்டியிருக்கும் என்றும்,

அத்துடன் உணவில் கலந்த விஷமும் சேர்ந்து வீமனின் உயிரைப் பறித்திருக்கும் என்றும் நினைத்துக் கௌரவர்கள் மகிழ்வுடன் அரண்மனைக்குச் சென்றனர்.

அடுத்த வாரம் தொடரும்



சினிமா

BEHIND ME MEDIA

சூப்பர் ஸ்டார் ‘தர்மன்’ படத்தில் நயன்தாரா?



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகிவரும் ‘தர்மன்’ திரைப்படத்தில் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா இணைந்திருப்பது தமிழ் சினிமா ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அக்டோபர் 25 அன்று படக்குழு வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிப்பு, இந்தப் படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

ரஜினிகாந்தின் 173-வது திரைப்படமாக உருவாகிவரும் ‘தர்மன்’ படத்தை, கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் டர்மெரிக் மீடியா நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. அஸ்வத் மாரிமுத்து இப்படத்தை இயக்குகிறார். ‘ஓ மை கடவுளே’, ‘டிராகன்’ போன்ற படங்களை இயக்கிய இவர், தற்போது ரஜினிகாந்துடன் இணைந்திருப்பது ரசிகர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

தயாரிப்பு நிறுவனம் வெளியிட்ட அறிவிப்புப் போஸ்டரில், நயன்தாரா இப்படத்தில் இணைந்திருப்பது உறுதிப் படுத்தப்பட்டது. ‘தி ஆரா இஸ் டபுள்’ என்ற வாசகத்துடன் வெளியான இந்த அறிவிப்பு, சமூக வலைதளங்களில் கவனத்தைப் பெற்றது. இயக்குநர் அஸ்வத் மாரிமுத்துவும் நயன்தாராவை வரவேற்றுப் பதிவிட்டார்.

திருமணம் பற்றி நடிகை சாய் பல்லவி...



நடிகை சாய் பல்லவி ஹிந்தி சேனல் ஒன்றில், தனது வருங்கால கணவர் பற்றி மனம் திறந்து பேசியது, தற்போது ஊடகங்களில் செய்தியாக மாறி உள்ளது. மருத்துவக் கல்லூரி மாணவியான சாய் பல்லவி, பல சின்னத்திரை ரியாலிட்டி ஷோக்களில் பங்கு பெற்று தனது நடன திறமையின் மூலம் புகழ்பெற்றார். அதன் பின்னர் பல யுடியூப் சேனல்களில் குறும்படங்களில் நடித்துக் கொண்டிருந்த அவருக்கு “பிரேமம்“ படத்தின் மூலம் வெள்ளித்திரை வாய்ப்பு கிடைத்தது. தனது முதல் திரைப்படத்திலேயே சாய் பல்லவி ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தார்.

பிரேமம் படத்தில் அவர் நடித்த மலர் டீச்சர் கதாபாத்திரத்திற்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டம் உள்ளது. பிரேமம் திரைப்படத்தை தொடர்ந்து பல்வேறு மலையாள திரைப்படங்களிலும், மற்ற தென்னிந்திய மொழி திரைப்படங்களிலும் வாய்ப்பு கிடைத்து சாய் பல்லவி முன்னணி நடிகையாக மாறியிருந்தார். தெலுங்கிலும் சாய் பல்லவி நடித்த திரைப்படங்கள் பெரிய வெற்றியை பெற அவருக்கு பாலிவுட் கதவு திறந்தது. தற்போது சாய் பல்லவியின் காட்டில் அடைமழை பெய்ய தொடங்கி உள்ளது. ஹிந்தியில் ஏற்கனவே அவர் அறிமுகமாக இருந்தாலும், தற்போது இந்தியாவின் மிகப்பெரிய திரைப்படமான இராமாயணத்தின் 2 பாகங்களிலும் அவர் நடித்து முடித்துள்ளார்.

மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாகியுள்ள இந்த திரைப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் சாய் பல்லவி நடிக்கும் “ஓம்“ திரைப்படத்தில் ட்ரைலர் வெளியானதில் அவரது தோற்றத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. அதே நேரம் மணிரத்தினம் இயக்கி வரும் “இஞ்சி வெல்லம்“ திரைப்படத்திற்கும் ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்புகள் நிலவுகிறது.தொடர்ச்சியாக சாய் பல்லவி பெரிய திரைப்படங்களில் நடித்து வருவதால் அவரது மார்க்கெட் எகிறி உள்ளது.

அமிதாபச்சன் தொகுப்பாளராக இயங்கும் இந்தியாவில் பிரபலமான “கோன் பனேகா குரோர்பதி“ நிகழ்ச்சியில் சாய் பல்லவி , ரன்பீர் கபூருடன் கலந்து கொண்டார். இந்த எபிசோட் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் அமிதாப்பச்சன் சாய் பல்லவியிடம் அவரது எதிர்கால கணவர் குறித்த எதிர்பார்ப்புகளை பற்றி கேள்வி எழுப்பியுள்ளார்?

அதற்குப் பதிலளித்த சாய் பல்லவி, ”எனது தனிப்பட்ட சுதந்திரத்தையும் எனது தொழில் வாழ்க்கையை மதிக்கக்கூடிய நபராக அவர் இருக்க வேண்டும். எனது வாழ்க்கையில் பொருளாதார ரீதியாக சுதந்திரமாகவும் தற்சார்பு மிக்கதாகவும் நான் நிர்வாகிக்க , அவர் ஆதரவு அளிக்க வேண்டும். என்னுடைய விருப்பங்களை மதித்து என்னுடைய லட்சியங்களை அடைவதற்கு துணையாக இருப்பவரையே நான் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன்.

ஒரு மதிப்புமிக்க உறவில் இருக்கும் இருவருக்கும் பரஸ்பர நம்பிக்கையும் மரியாதையும் மிகவும் அவசியம் . என் வருங்கால கணவர் நல்ல நகைச்சுவை உணர்வு கொண்டவராகவும் இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அவருக்கு நன்றாக சமைக்கவும் தெரிந்திருக்க வேண்டும் என்று வெளிப்படையாக கூறியுள்ளார்.

ஜெயிலர் - 2 வசூலை மறைமுகமாக தாக்குகிறாரா சுந்தர்.சி

இயக்குனரும் நடிகருமான சுந்தர்.சி தமிழ் சினிமாவின் பாக்ஸ் ஆபீஸ் வசூல் நிலவரங்களை பற்றி அவரது கருத்துக்களை தெரிவித்து இருந்தார். அவரது கருத்துக்கள் தற்போது அதிக கவனத்தை பெற்று வருகின்றன. அதே நேரம் தற்போது ஜெயிலர்- 2 திரைப்படம், 700 கோடி ரூபாய் வசூலை வாரிக் குவித்து வருகிறது. இந்நிலையில் சுந்தர்.சி கூடிய கருத்துக்கள் ஜெயிலர்- 2 திரைப்படத்தின் வசூலை முன்வைத்து கூறப்பட்டுள்ளதா? என்று சந்தேகங்களும் எழுந்துள்ளன.

தற்போது சுந்தர்.சி இயக்கத்தில் உருவான “மூக்குத்தி அம்மன் - 2 “ திரைப்படம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 6-ஆம் தேதி வெளியாக உள்ளது. ஏற்கனவே இந்த திரைப்படத்தின் முதல் பாகம் ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் வெளிவந்து நல்ல வெற்றியை பெற்றது. அதே நேரம் இரண்டாம் பாகம் சுந்தர்.சி இயக்குவதால், படத்தில் நகைச் சுவை காட்சிகள் ஏராளமாக இருக்கும் ரசிகர்களை மேலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. தற்போது இந்த படத்தின் பிரமோஷன் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.



மூக்குத்தி அம்மன் - 2 திரைப்படத்தை விளம்பரப்படுத்தும் வகையில் சுந்தர்.சி ஒரு நேர்காணல் கொடுத்திருந்தார். “நான் ஒரு லிட்டர் பாத்திரத்தில் 10 லிட்டர் பாலை ஊற்றி விட்டேன் என்று கூறினால், அது எவ்வாறு சாத்தியப்படும்? அது போல தான் ஒவ்வொரு திரைப்படத்திற்கும் வசூல் வரம்பு ஒன்று உள்ளது. ஒரு திரைப்படம் 500 கோடி ரூபாய் வசூல் செய்தது, 1000 கோடி ரூபாய் வசூல் செய்து விட்டது, என்று சொல்வதெல்லாம் கட்டுக்கதை மற்றும் பொய்யாகும்.

தியேட்டருகே வராமல் பிளாப்பான திரைப்படங்களை கூட, வசூலில் சாதனை படைத்ததாக போலி செய்திகளையும் போஸ்டர் களையும் தயாரிப்பாளர்கள் பரப்பி மக்களை நம்ப வைக்கிறார்கள்,” என்று சுந்தர்சி கூறியுள்ளார். தற்போது சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் நடித்து வெளியாகியுள்ள ஜெயிலர் - 2 திரைப்படம் ₹500 கோடி வசூலை தாண்டி ₹700 கோடி வசூலை நெருங்கிக் கொண்டிருக் கிறது. சுந்தர் சி யின் கருத்துக்கள் ஒருவேளை ரஜினியின் திரைப் படத்தை மனதில் வைத்து கூறப் பட்டிருக்குமா? என்று சமூக வலைதளங்களில் விவாதங்கள் தொடங்கியுள்ளன.

ரஜினி மற்றும் கமல் இணைந்து நடிக்கும் திரைப்படத்தை சுந்தர்.சி இயக்குவதாக கடந்த வருடம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் திட்டத்திலிருந்து சுந்தர்.சி வெளியேறியிருந்தார். ஒருவேளை அதன் காரணமாக சுந்தர்.சி தற்போது இதுபோன்று கருத்துக் களை கூறி இருக்கிறாரா? என்று சிலர் சந்தேகங்களை எழுப்பி யுள்ளனர்.



BEHIND ME MEDIA

பங்களாதேஷை வென்றது இலங்கை



ஹொங்கொங், மொங் கொக் மிஷன் றோட் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (30) நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான பி குழுவுக்கான தனது ஆரம்ப ஹொங்கொங் சர்வதேச சிக்சஸ் கிரிக்கெட் போட்டியில் இலங்கை ஒரு விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

அணிக்கு அறுவர் கொண்ட இப் போட்டியில் விஷேன் ஹலம்பகே ஆட்டம் இழக்காமல் சாதனைமிகு 80 ஓட்டங்களைக் குவித்து இலங்கையின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 6 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹபிபுர் ரஹ்மான் சொஹான் ஆட்டம் இழக்காமல் 57 ஓட்டங்களையும் சபிர் ரஹிம் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 5.2 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்று பரபரப்பான வெற்றியை ஈட்டியது.

இப் போட்டியில் கடைசி ஓவரில் இலங்கையின் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

முதலாவது பந்து வைட் என அறிவிக்கப்பட்டது.

அடுத்த பந்தில் சமிந்து விஜேசிங்க ஆட்டம் இழந்தார்

இதனைத் தொடர்ந்து கடைசி ஆட்டக்காரருக்கான வாய்ப்பைப் பயன்படுத்தி விஷேன் ஹலம்பகே, சிக்ஸ் ஒன்றை விளாசி இலங்கையின் வெற்றியை உறுதிசெய்தார்.

தேசிய கராத்தே வடமாகாண விஜயராஜ் தமிழ்நிலவனுக்கு வெண்கலம்!



இலங்கை விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒக்டோபரில் களனி பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தேசிய கராத்தேப் போட்டியில், வடமாகாணத்தைச் சேர்ந்த விஜயராஜ் தமிழ்நிலவன் காட்டா (Kata) பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

மாகாணப் பாடசாலை மட்டப் போட்டியில் நான்கு பிரிவுகளிலும் தங்கப் பதக்கங்கள். மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் மூன்று பிரிவுகளில் தங்கப் பதக்கங்கள். மாகாணக் கல்வி அமைச்சினால் 2026ஆம் ஆண்டின் சிறந்த கராத்தே வீரருக்கான விருது. பாடசாலை மட்ட தேசியப் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பதக்கங்கள் அவர் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வீரரின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக அவரது தந்தையாரான ரென்ஷி S. விஜயராஜ் (I.S.S.K.A. கராத்தே சங்கம்) செயற்படுகிறார்.

கிரிக்கெட் வீரர் 28 வயதில் ஓய்வு அறிவிப்பு?

அயர்லாந்து கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பென் வைட் , தனது 28 வயதில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 சர்வதேசப் போட்டியின் மூலம் அயர்லாந்து அணியில் அறிமுகமான பென் வைட், தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் 3 டெஸ்ட், 2 ஒருநாள் மற்றும் 38 ரி20 சர்வதேசப் போட்டிகள் என மொத்தம் 43 போட்டிகளில் விளையாடியுள்ளார்.



மேலும், 2021, 2024 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பைப் போட்டிகளில் அயர்லாந்து அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வங்கதேச அணிக்கு எதிராக விளையாடியதே பென் வைட்டின் கடைசி சர்வதேசப் போட்டியாக அமைந்தது.

தனது கிரிக்கெட் பயணத்தில் அயர்லாந்து அணிக்காக விளையாடுவதற்கு வாய்ப்பளித்த கிரிக்கெட் நிர்வாகத்திற்கும், பயிற்சியாளர்களுக்கும், சக வீரர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் வெளியில் இருந்து அயர்லாந்து அணிக்கு ஆதரவளிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர்கள் குழு முழுமையாக மாற்றம்?



மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர்கள் குழு முழுமையாக மாற்றம் செய்யப்பட்டு, கீரன் பொல்லார்ட் தலைமை பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தசூழலில் புதிய பேட்டிங், பவுலிங் பயிற்றுவிப்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகிய இரண்டு ழுபு ஐபிஎல் அணிகளுக்கும் கடந்த 3 ஐபிஎல் தொடர்களும் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு செல்லவில்லை. ஒருபக்கம் தோனி கேப்டன்சியிலிருந்து விலகிய பிறகு எங்கப்பா சிஎஸ்கேவை காணோம் என்ற விதத்தில் தான் சூப்பர் கிங்ஸ் இருந்துவருகிறது.

மறுபக்கம் கடப்பாரை அணி என பார்க்கப்பட்ட மும்பை இந்தியன்ஸின் நிலைமையோ கவலைக்கிடமாக இருந்துவருகிறது. கடைசியாக 2020 இல் கிண்ணத்தை வென்ற அந்த அணி படுமோசமான ஐபிஎல் சீசன்களையே கடந்து வந்துள்ளது.

2020 ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்றபிறகு ஒரு ஐபிஎல்லில் கூட இறுதிப்போட்டிவரை வராத நிலையில், மும்பை இந்தியன்ஸின் பயிற்றுவிப்பாளர்கள் குழு மொத்தமாக கலைக்கப்பட்டுள்ளது. மஹேலா ஜெயவர்த்தன, லசித் மலிங்க போன்ற பெரிய பெயர்களும் பயிற்சியாளர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

பயிற்சியாளர் பதவியில் இருந்து லசித் மாலிங்க விலகல்?



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்த்தன அண்மையில் விலகினார்.

அவருக்கு பதிலாக மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் பொல்லார்ட் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

இந்த நிலையில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளர்கள் குழுவில் இருந்து 3 பேர் பரஸ்பர சம்மதத்துடன் விலகி உள்ளனர்.

வேகப்பந்து வீச்சு பற்சியாளராக இருந்த இலங்கை முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க, இந்திய முன்னாள் வீரர் பராஸ் மாம்ப்ரே, களத்தடுப்பு பயிற்சியாளராக பணியாற்றிய இங்கிலாந்து முதல் தர கிரிக்கெட் வீரர் கார்ல் ஹாப்கின்சன் ஆகியோர் தங்கள் பொறுப்பில் இருந்து ஒதுங்கி இருக்கின்றனர்.

அக ஒளிபெற உதவும் தீபாவளிப் பண்டிகை!



எதிர்வரும் 8ஆம் திகதி தீபாவளிப் பண்டிகை உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

தீபாவளி என்பது 'தீப ஒளித் திருநாள்' ஆகும். 'தீபம்' என்றால் விளக்கு, 'ஆவளி' என்றால் வரிசை (விளக்குகளின் வரிசை) என்று பொருள். தீமைக்கு மேல் நன்மை வெற்றி பெற்றதையும், அறியாமை என்ற இருளை நீக்கி ஞானம் என்ற ஒளி பிறப்பதையும் குறிக்க இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்தப் பண்டிகை தமிழ் மாதக் கணக்கீட்டின்படி பெரும்பாலான வருடங்களில் ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தன்று கொண்டாடப்படுகிறது. சில வருடங்களில் மட்டும் அமாவாசைக்கு முந்தைய தினம் கொண்டாடப்படுகிறது.



ஞானம் என்ற விளக்கொளியால் மனத்தின் உள்ளே குடிகொண்டுள்ள அஞ்ஞானம் என்ற இருளை விரட்டியடிப்பது என்பது தத்துவம். பொய் பித்தலாட்டம் வஞ்சனை முதலிய அரக்க குணங்களை ஞான ஒளியால் வெளியேற்றி அக ஒளிபெற உதவும் பண்டிகை, தீபாவளி. நரகாசுரன் எனும் அரக்கனைக் கண்ணன் வதம் செய்ததையட்டி அமைந்த பண்டிகை என்பது புராண வரலாறு. தேவர்களும் மனிதர்களும் கொடிய அரக்கனாம் நரகாசுரனால் மிகுந்த தொல்லைகளுக்கு உள்ளாகித் துன்புற்றனர்.

தேவர்களின் தலைவனான இந்திரன் பகவான் கிருஷ்ணனிடம் முறையிடவே, கிருஷ்ணன் நரகாசுரனுடன் போர்புரிய சத்தியபாமாவுடன் புறப்படுகிறார். சத்தியபாமா இப்போரில் சக்தியின் அவதாரமாகச் செயல்பட்டாள் என்பது குறிப்பிடத்தக்கது. நரகாசுரன் என்ற தீய சக்தி கண்ணன் - சத்தியபாமாவினால் அழிக்கப்பட்ட மக்கள் அசுரனின் கொடுமையினின்றும் விடுபட்ட நாளையே தீபாவாளியாக கொண்டாடுகிறோம்.

தீபாவளி அன்று விடியற்காலையே எழுந்து தலைக்கு எண்ணெய் தேய்த்து, புனித நீராடுவதை கங்கா ஸ்நானம் என்று கருதுகிறோம். இப்பண்டிகை நாளில் எண்ணெயில் லட்சுமியும், நம் வீட்டுத் தண்ணீரில் கங்கையும் பிரசன்னமாகின்றனர் என்பது ஐதிகம், வீட்டுக் கிணற்றின் நீரிலோ அல்லது குழாயில் வரும் நீரிலோ கூட தீபாவளியன்று நீராடினால் புனித கங்கையில் நீராடிய பலன் கிட்டும் என்பது ஆன்றோர் வாக்கு.



அதனால்தான் இப்பண்டிகையன்று நீராடிப்புத்தாடை உடுத்து, இறைவனைத் துதித்து இனிப்புப் பண்டங்கள் புசித்து மகிழ்ந்த பின்னர் அக்கம் பக்கத்தில் வசிக்கும் உற்றார் உறவினரிடம், கங்காஸ்நானம் ஆயிற்றா? என்று விசாரிக்கிறோம். பகவத் கீதா கிஞ்சித் அதீதா, பகவத் கீதையில் சிறிதளவு, ஒரே ஒரு சுலோகம் மட்டுமாவது படித்தால போதும், கங்கா ஜல லவகணிகா பீதா - கங்கை நீரில் ஒரு திவலை அருந்தினாலும் போதும், ஸக்ருதபியேன முராரி ஸமர்ச்சா - விஷ்ணுவின் நாமத்தை வாழ்க்கையில் ஒரே ஒரு தடவை சொன்னாலும் போதும் - பரலோக பயம் நீங்கும், மக்கள் பேரின்பமாகிய மோட்சம் அடைவது உறுதி. இமய மலையிலிருந்து பெருகிவரும் அலக்நந்தா, மந்தாகினி, பாகீரதி, என்னும் நதிகள் கங்கை எனப் பெயர் பூண்ட புண்ணிய நதிகள் மக்கள் அதில் விளக்கேற்றி வழிபடுவது வழக்கம். அன்னை பவானியின் பூஜையாக வங்காளத்திலும், தாம்பூலத் திருநாளாக மகாராஷ்டிர மாநிலத்திலும் கொண்டாடப்படும் இப்பண்டிகை, குஜராத்தில் குபேர பூஜையாக புதுக்கணக்குத் நாடெங்கும் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது.

திருமணமான முதல் ஆண்டு வரும் தீபாவளியன்று மாப்பிள்ளையைக் கோலமிட்ட மணையில் உட்கார வைத்து "கௌரீ கல்யாணமே, வைபோகமே" என்று மாமியார் பாடித் தலையில் எண்ணெய் வைப்பது தமிழ் நாட்டவர் பழக்கம். பட்டாசு கொளுத்துவதன் மூலம் ஆயிரமாயரம் குடும்பங்கள் பிழைக்கவும் இந்த திபத்திருநாள் வழிவகுக்கிறது. புத்தாடை உடுத்தும் வழக்கம் நம்மிடையே இருப்பதால் நெசவுத் தொழிலும் செழிக்கிறது.

இப்பெருநாளில் இந்துக்கள் மட்டுமின்றிப் பிற மதத்தவரும் தங்கள் வீட்டுப்பிள்ளைகளக்குப் பட்டாசும், ஏன் புத்தாடையும் கூட, வாங்கிக் கொடுத்த மகிழ்கின்றனர்.

தீபாவளியன்று தொடங்கும் தீப அலங்காரம் கார்த்திகைப் பண்டிகை வரை நீடிக்கிறது.

நரகாசுரன் என்ற அசுரனை ஸ்ரீகிருஷ்ணர் வதம் செய்த நாளையே தென்இந்தியாவில் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. தன் இறப்பு மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று நரகாசுரன் வரம் கேட்டதாக ஐதீகம். இந்நாளில்தான் எண்ணெய் தேய்த்து நீராடுதல் (எண்ணெய் ஸ்நானம்) மற்றும் புத்தாடை அணிதல் சிறப்பாகச் செய்யப்படுகிறது.

வடஇந்தியாவிலும் மற்ற சமயங்களிலும் வேறு சில புராணக் கதைகளும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன:

ராமர் அயோத்தி திரும்புதல்: ராமபிரான் 14 ஆண்டு வனவாசத்தை முடித்து, ராவணனை வீழ்த்திவிட்டு சீதை மற்றும் லட்சுமணனுடன் அயோத்தி திரும்பிய நாளை, மக்கள் விளக்கேற்றி வரவேற்ற நிகழ்வாக வடஇந்தியாவில் கொண்டாடப்படுகிறது.

செல்வத்தின் தெய்வம் லக்ஷ்மி வழிபாடு: லட்சுமி தேவியை வரவேற்க வீடுகளில் விளக்கேற்றி சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

சமண மற்றும் சீக்கிய சமயங்கள்: சமண மதத்தின் நிறுவனர் பகவான் மகாவீரர் நிர்வாணம் (பேரின்பம்) அடைந்த நாளாகவும், சீக்கியர்களின் குரு ஹர்கோபிந்த் சிங் சிறையிலிருந்து விடுதலையாகி அம்ரித்சர் திரும்பிய நாளாகவும் இது கொண்டாடப்படுகிறது.

ஆனால், இவையெல்லாம் தீபாவளியின் பின்னணி குறித்த கதைகளே தவிர, அவை கொண்டாடப்பட்டது குறித்த ஆவணமல்ல. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது தமிழில் தீபாவளி குறித்த பதிவுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

"தமிழ் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு வரை தீபாவளி குறித்த குறிப்புகள் ஏதும் கிடையாது. வீரமாமுனிவரின் சதுரகராதி 1732இல் வெளியிடப்பட்டது அதில் தீபாவளி என்ற சொல் கிடையாது. தமிழ் இலக்கியங்களிலும் 19ஆம் நூற்றாண்டு வரை தீபாவளி என்ற சொல் ஏதும் கிடையாது. 1842ல் இலங்கையில் வெளியிடப்பட்ட மானிப்பாய் தமிழ் – தமிழ் அகராதியில் இந்தச் சொல் இருக்கிறது. அதற்கு புராண விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தத் தருணத்தில் இந்த விழா அறிமுகமாகியிருக்கலாம்" என்ற சொல்வோரும் உள்ளனர்.



லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக வழக்கு



நுகர்வோர் விவகார அதிகார சபையினால் லா.ஃப்ஸ் எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள 86 ஆம் இலக்கக் கட்டளையை மீறி, நுகர்வோருக்குத் தொடர்ச்சியாக எரிவாயு விநியோகத்தை வழங்காமை தொடர்பிலேயே இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவ்வழக்கு புதுக்கடை இலக்கம் 5 நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, லா.ஃப்ஸ் எரிவாயு நிறுவனத்திற்குச் அழைப்பாணை பிறப்பித்த நீதிமன்றம், இந்த வழக்கை நவம்பர் 11 ஆம் திகதி மீண்டும் அழைப்பதற்கு உத்தரவிட்டுள்ளதாக அத தெரண நீதிமன்றச் செய்தியாளர் தெரிவித்தார்.

கனடாவில் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான Express Entry திட்டம்!

கனடாவில் நிரந்தர வதிவிடத்தைப் பெற விரும்பும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான நுஒிசநளள நுவெசல திட்டத்தின் கீழ் அக்டோபர் 28ஆம் திகதி புதிய அழைப்புச் சுற்று நடைபெற்றுள்ளது.
கனடாவின் குடிவரவு அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சு, போக்குவரத்துத் தொழில்கள் பிரிவில் தகுதிபெற்ற 150 விண்ணப்பதாரர்களுக்கு நிரந்தர வதிவிட விண்ணப்ப அழைப்புகளை வழங்கியுள்ளது.

வழங்கப்பட்ட அழைப்புகள்: 150, குறைந்தபட்ச ஊசுளு மதிப்பெண்: 477, அழைப்புச் சுற்று: போக்குவரத்துத் தொழில்கள் பிரிவு, இந்தப் பிரிவில் விமானிகள், விமானப் பராமரிப்புத் தொழில்நுட்ப வல்லுநர்கள், விமான ஆய்வாளர்கள் மற்றும் வாகனப் பழுதுபார்ப்புத் தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட தகுதியான தொழில்களில் பணியாற்றுபவர்கள் இடம்பெறுகின்றனர்.

இந்தப் பிரிவின் கீழ் தகுதிபெற கடந்த மூன்று ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட ஒரு தொழிலில் குறைந்தபட்சம் 12 மாதங்கள் முழுநேரப் பணி அனுபவம் அல்லது அதற்கு இணையான பகுதிநேரப் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.



கனடாவிலோ வெளிநாட்டிலோ பெற்ற தகுதியான பணி அனுபவம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படலாம். அத்துடன் நுஒிசநளள நுவெசல திட்டத்தின் ஏனைய தகுதி நிபந்தனைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும். கடந்த அக்டோபர் 27ஆம் திகதி பிரெஞ்சு மொழித் திறன் பிரிவில் 5,000 பேருக்கு ீசு அழைப்புகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் புதிய சுற்று நடைபெற்றுள்ளது.

இலங்கை – நெதர்லாந்து இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவு

இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் மற்றும் நட்புறவின் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்வில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை – நெதர்லாந்து நாடுகளுக்கிடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் இராஜதந்திர ஒத்துழைப்பை நினைவுகூரும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.







உலக சுகாதார அமைப்பின் சர்வதேச மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித் துவப்படுத்திய தமிழ் வைத்தியர்!



தென் கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் (WHO) சர்வதேச மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வைத்தியர் மதுரகன் செல்வராசா பங்கேற்றுள்ளார். உலக சுகாதார அமைப்பின் 2026ஆம் ஆண்டுக்கான Palliative Care Global Action Forum பணிக்குழுவின் வருடாந்தக் கூட்டம், ஒக்டோபர் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் தென் கொரியாவின் சியோலில் உள்ள கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டுடன் இணைந்து நடைபெற்ற சர்வதேச மாநாடு, நிவாரணப் பராமரிப்பின் 30ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்திற்குத் தயாரான நிவாரணப் பராமரிப்பு, கொள்கை, தொழில்நுட்பம் மற்றும் சமத்துவத்தை ஒருங்கிணைத்தல் என்பன மாநாட்டின் முக்கிய கருப்பொருள்களாக அமைந்திருந்தன. இக்கூட்டத்தில் 31 நாடுகளைச் சேர்ந்த 66 பேர் கலந்துகொண்டதாக வெளியிடப்பட்டுள்ள தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இலங்கை யிலிருந்து ஒரே பிரதிநிதியாக மதுரகன் செல்வராசா பங்கேற்றதாகவும் அந்தப் பதிவு குறிப்பிடுகிறது.

36 ஆண்டுகளாகத் தொடரும் நில இழப்பு - 28 ஆவது வாரமாகவும் தொடரும் மயிலிட்டி மக்களின் போராட்டம்

மயிலிட்டி மக்களின் பூர்வீகக் காணிகளையும் வாழ்விடங்களையும் விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த 30ஆம் திகதி 28 ஆவது வாரமாகவும் தொடர்ந்தது. மயிலிட்டி கொமாண்டோ பங்களா இராணுவ முகாமுக்கு முன்பாக இன்று நடைபெற்ற இப்போராட்டத்தில், தமது பூர்வீக நிலங்களை மீளப் பெற்றுத் தமது சொந்த மண்ணில் மீண்டும் குடியேறுவதற்கான உரிமையை வழங்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தினர்.

குறிப்பாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த சொந்த மண்ணிலிருந்து வெளியேறிய மக்கள், 36 ஆண்டுகள் கடந்தும் தமது பூர்வீக வாழிடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை தொடர்ந்து வருவது பெரும் கவலையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், தமது குடியிருப்புக் காணிகள் மட்டுமன்றி விவசாய நிலங்கள் உள்ளிட்ட வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய சொத்துக்களையும் இழந்துள்ள மக்கள், நீண்டகாலமாக அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப்பல்வேறு கோரிக்கைகளையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

மயிலிட்டி மக்களின் நில உரிமைப் பிரச்சினைக்கு இனியும் காலதாமதமின்றித் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், காணி விடுவிப்பு தொடர்பில் தெளிவான காலக்கெடுவுடன் கூடிய நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




தொழில்நுட்பமும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன!

தொழில்நுட்பமும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களும் எந்தவொரு தனி நிறுவனத்தினாலும் அல்லது அரசாங்கத்தின் வரவு □ செலவுத் திட்டத்தினாலும் ஈடுகொடுக்க முடியாத வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றன. எமது திரைகளில் எத்தகைய தகவல்கள் தோன்ற வேண்டும் என்பதை அல்கோரிதங்கள் தீர்மானிக்கின்றன. ஆனால், அல்கோரிதங்கள் வாக்களிப்பதில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் அமீர் பாயிஸ் தெரிவித்துள்ளார்.

“தவறான தகவல்களுக்கு எதிரான மீள்திறனை வலுப்படுத்துதல்“ (Strengthening Resilience Against Disinformation) என்ற திட்டத்தின் கீழ், “அல்கோரிதத்திற்கு அப்பால்“ (Beyond the Algorithm) எனும் தலைப்பிலான கலந்துரையாடலொன்று கொழும்பு சினமன் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை (30) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு “தவறான தகவல்களும் தேர்தல் நேர்மையும்“ என்ற தலைப்பில் உரையாற்றிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் அமீர் பாயிஸ் மேலும் தெரிவித்ததாவது: “அல்கோரிதத்திற்கு அப்பால்“ என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானது. ஏனெனில், சில சந்தர்ப்பங்களில் எதை வெளிப்படுத்துவது, எதை வெளிப்படுத்தாமல் இருப்பது என்பதைத் தீர்மானிக்கும் வாய்ப்புக்கூட சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இல்லாமல் போகிறது. எமது திரைகளில் எத்தகைய தகவல்கள் தோன்ற வேண்டும் என்பதை அல்கோரிதங்கள் தீர்மானிக்கின்றன. ஆனால், அல்கோரிதங்கள் வாக்களிப்பதில்லை.

ஒவ்வொரு திரைக்குப் பின்னாலும் ஒரு குடிமகன் இருக்கிறார். ஒவ்வொரு வாக்கிற்குப் பின்னாலும், அந்தக் குடிமகன் வாசித்த, கேட்ட மற்றும் உண்மை என நம்பிய தகவல்களின் அடிப்படையில் உருவாக்கிக்கொண்ட ஒரு தீர்மானம் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் தரம் எத்தகையதாக இருக்கிறது என்பதும், அத்தகைய தீர்மானம் உருவாகும் சூழல் எவ்வாறு அமைகிறது என்பதை கவனம் செலுத்த வேண்டியது முக்கியமானது.




ஜனநாயகம் ஒரு வாக்குறுதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது, குடிமக்கள் தங்களது விருப்பப்படி சுயாதீனமாக தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், அந்தத் தெரிவுகள் போதிய தகவல்களின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பதாகும். தவறான தகவல்கள் இந்த வாக்குறுதியை அமைதியாகச் சிதைக்கின்றன. வாக்களிப்பு நிலையத்தின் நுழைவாயிலில் ஒரு வாக்காளரைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் தவறான தகவல்கள் செயற்படுவதில்லை. மாறாக, அதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, கையடக்கத் தொலைபேசி ஊடாகவும், மற்றவர்களால் பகிரப்படும் செய்திகளின் ஊடாகவும், திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்கள் அல்லது போலியாக உருவாக்கப்பட்ட காணொளிகள் மூலமாகவும் அவை வாக்காளர்களைச் சென்றடைகின்றன. பல சந்தர்ப்பங்களில், உண்மைத்தன்மையைச் சரிபார்ப்பதற்கு முன்னரே இத்தகைய தகவல்கள் பரவிவிடுகின்றன. அதனால்தான், தவறான தகவல்கள் என்பது வெறுமனே ஒரு தகவல் தொடர்பாடல் பிரச்சினை மாத்திரமல்ல. அது தேர்தல் ஒருமைப்பாட்டுக்கே சவாலாக அமைகிறது.

ஒரு தேர்தல் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி நிர்வகிக்கப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு வாக்கும் முறையாகச் செலுத்தப்பட்டு, சரியாக எண்ணப்பட்டிருக்கலாம். இருப்பினும், உண்மையைவிட வேகமாகப் பரவும் ஒரு பொய்யான தகவல், தேர்தல் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைச் சிதைக்கக்கூடும். இலங்கையில் குறுகிய கால இடைவெளியில் தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று முக்கிய தேர்தல்களின்போதும் நாம் இதனை அவதானித்துள்ளோம். குறிப்பாக, 2024ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல், 2025ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றின்போது, தேர்தல் நடைமுறைகள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் முடிவுகள் தொடர்பாகப் பரப்பப்பட்ட தவறான தகவல்கள் எவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்தி, பொதுமக்களின் நம்பிக்கையைச் சோதனைக்கு உட்படுத்தின என்பதை நாம் அவதானித்தோம்.

நல்ல முயற்சிகள் ஒருபோதும் தற்செயலாக உருவாவதில்லை. தேர்தல் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான போட்டி டிஜிட்டல் தளங்களுக்கும் விரிவடைந்து வருகின்றது என்ற புரிதல் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குள்ளேயே உருவானது. எமது முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, தனது தொலைநோக்குப் பார்வையுடன் இந்தப் புரிதலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றார். இந்த ஒத்துழைப்புக்கு அடித்தளமிட்ட ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் அவரே முன்னெடுத்தார். 2024ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு முன்வைத்த பரிந்துரைகளையும் அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் தவறான தகவல்களுக்கு எதிரான மீள்திறனை வலுப்படுத்தும் திட்டம் (Strengthening Resilience Against Disinformation in Sri Lanka – SRADS) உருவாக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு முன்வைத்த பரிந்துரைகளையும் அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் தவறான தகவல்களுக்கு எதிரான மீள்திறனை வலுப்படுத்தும் திட்டம் (Strengthening Resilience Against Disinformation in Sri Lanka – SRADS) உருவாக்கப்பட்டது.



அவரது தொலைநோக்குப் பார்வைக்கும் தலைமைத்துவத்திற்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியை இங்கு பதிவு செய்துகொள்கிறேன். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் ஊடாகப் பல முக்கியமான முன்னேற்றங்களை எம்மால் அடைய முடிந்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் 74 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் கண்காணிப்புப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் 42 கணினிகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. அத்துடன், Meta Content Library மற்றும் YouTube Data Interface ஆகியவற்றுக்கான ஆய்வு அணுகலைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2025 மார்ச் மாதத்தில், Meta நிறுவனத்துடன் கலந்துரையாடுவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று சிங்கப்பூருக்குச் சென்றது. இதன் விளைவாக, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் Meta நிறுவனத்துக்கும் இடையில் முறையான ஒத்துழைப்புக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. 2025 டிசம்பர் மாதத்திற்குள், ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தொடர்பாடல் வழிமுறைகள் ஊடாக 900 இற்கும் மேற்பட்ட முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய முறைப்பாடுகள் தொழில்நுட்பத் தளங்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டன. மேலும், ஆணைக்குழுவினால் மேல்நிலைப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் உள்ளடக்கங்கள் நீக்கப்பட்ட விகிதம் 15.2 சதவீதத்திலிருந்து 20.3 சதவீதமாக அதிகரித்தது.

2026 ஜூன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது விஜயத்தின் ஊடாக, எதிர்காலத் தேர்தல்களை முன்னிட்டு கூகுள் உள்ளிட்ட ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களும் விரிவுபடுத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் ஊடாக அடையப்பட்ட முன்னேற்றங்கள், 2026 முதல் 2029 வரையிலான தேர்தல்கள் ஆணைக்குழுவின் பங்கேற்பு அடிப்படையிலான மூலோபாயத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. Democracy Reporting International (DRI) மற்றும் FACTUM அமைப்புகளின் ஆதரவுடன், தவறான தகவல்கள் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய உள்ளடக்கங்கள் தொடர்பான மூலோபாயச் செயல் திட்டமொன்றைத் தயாரித்து வருகிறோம். அதேவேளை, ஆணைக்குழுவின் டிஜிட்டல் திறன்களை மதிப்பீடு செய்து, அதன் டிஜிட்டல் செயற்பாடுகளுக்கான எதிர்காலப் பாதையை வகுப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வாக்காளர்களைப் பாதுகாப்பதே எமது நோக்கமே தவிர, அவர்களின் கருத்துக்களைக் கட்டுப்படுத்துவது அல்ல. நாம் முன்னெடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றுடன் இணக்கமானதாக இருக்க வேண்டும். தேர்தல் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது என்ற பெயரில் நியாயமான அரசியல் விவாதங்களையோ விமர்சனங்களையோ அடக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. தேர்தல்கள் ஆணைக்குழு மீதான விமர்சனங்களும் இதில் உள்ளடங்குகின்றன. தேர்தல் ஒருமைப்பாடு என்பது இறுதியில் திறமையான, வினைத்திறனான மற்றும் சுயாதீனமான தேர்தல்கள் ஆணைக்குழுவிலேயே தங்கியுள்ளது. இந்த மூன்று பண்புகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. நிறுவனத்தின் ஆற்றலால் ஆதரிக்கப்படாத சுயாதீனம் பலவீனமானது. வினைத்திறனுடன் பயன்படுத்தப்படாத ஆற்றல் வீணானது. அதேவேளை, சுயாதீனமற்ற வினைத்திறன் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியாது.

தேர்தல்கள் ஆணைக்குழு உயர்ந்தளவிலான நம்பகத்தன்மையையும் பொதுமக்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது. எனினும், இந்த நம்பிக்கையை நிரந்தரமான ஒன்றாகவோ அல்லது எப்போதும் உறுதியாக இருக்கும் ஒன்றாகவோ நாம் கருதவில்லை. தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதுடன், அதனால் உருவாகக்கூடிய சவால்களும் அதிகரித்து வருகின்றன. எனவே, பொதுமக்களின் நம்பிக்கையைத் தொடர்ந்து பேணுவதுடன், அதனை மேலும் வலுப்படுத்தவும் நாம் உறுதிபூண்டுள்ளோம். எனினும், இந்தப் பணியைத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மாத்திரம் முன்னெடுக்க முடியாது. தொழில்நுட்பமும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களும் எந்தவொரு தனி நிறுவனத்தினாலும் அல்லது அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தினாலும் ஈடுகொடுக்க முடியாத வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றன.

எனவே, பங்காண்மைகள் மிகவும் அவசியமானவை. குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கை மற்றும் ஜனநாயகத்தின் மீது அக்கறை கொண்ட ஏனைய நட்பு நாடுகளும் நலன்விரும்பிகளும் இதில் முக்கிய பங்காற்ற வேண்டும். இந்தத் திட்டத்தின் பங்காளிகளான DRI மற்றும் FACTUM அமைப்புகள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நெருக்கமாக அவதானித்துள்ளன. ஆணைக்குழுவின் பலங்களையும் அதன் ஆற்றல்களையும் அவை நன்கு அறிந்துள்ளன. எட்டு மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் மூன்று தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக, இரவு பகலாகப் பணியாற்றிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பையும் அவர்கள் நேரடியாகக் கண்டிருப்பார்கள் என நம்புகிறேன். ஆணைக்குழுவின் சுதந்திரத்தை மதித்து, அதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வழங்கப்படும் தொடர்ச்சியான ஆதரவு, அதன் வினைத்திறனை அதிகரிப்பதுடன், பொதுமக்களின் நம்பிக்கையையும் ஜனநாயகத்தையும் மேலும் வலுப்படுத்தும்.

அடுத்த மாதம் இந்தத் திட்டம் உத்தியோகபூர்வமாக நிறைவடையவுள்ள போதிலும், எமது பணிகள் அதனுடன் முடிவடையப் போவதில்லை. காலத்திற்கேற்றதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான பொதுத் தகவல்களை வழங்குதல், தேர்தல் காலங்களில் ஊடக மற்றும் டிஜிட்டல் தயார்நிலையைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல், தேர்தல் காலம் முழுவதும் சிவில் சமூகம், ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பத் தளங்களுடன் நடைமுறை ஒத்துழைப்பை முன்னெடுத்தல் ஆகியவற்றைத் தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.

இந்த நடவடிக்கைகள் வாக்களிப்பு தினத்திற்கு முந்தைய சில வாரங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், முழுத் தேர்தல் சுழற்சியிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். கருத்து வேறுபாடுகள் இல்லாதிருப்பதுதான் வலுவான ஜனநாயகத்தின் அடையாளம் அல்ல. மாறாக, பல்வேறு கருத்துக்களுடன் மக்கள் ஈடுபடுவதற்கும், தகவல்களை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதற்கும், திட்டமிட்ட ஏமாற்று நடவடிக்கைகளால் தங்களது தீர்மானங்கள் பாதிக்கப்படாமல் சுதந்திரமாகத் தெரிவுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும் ஆற்றலே வலுவான ஜனநாயகத்தின் உண்மையான அடையாளமாகும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில், ஐரோப்பிய ஒன்றியம், Democracy Reporting International, FACTUM, சிவில் அமைப்புகள், ஊடக நண்பர்கள் மற்றும் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.



BEHIND ME MEDIA

கனடாவில் பேராசிரியர் ஆ. சதாசிவம் நூற்றாண்டு விழாவும் நினைவு மலர் வெளியீடும்!



Toronto வில் உள்ள தமிழிசைக் கலா மன்றத்தில் மொழியியல் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் நூற்றாண்டு விழா கவிஞர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்து, கனடா பண் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து வரவேற்பு நடனமும், கனடா, அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளர் நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு அவர்களின் வரவேற்புரையும் இடம் பெற்றன.

அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் ஆ. சதாசிவம் 1948 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றார். 1952 ஆம் ஆண்டு சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார். உதவி விரிவுரையாளராக அங்கே பணியாற்றி 1954 ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். ஆங்கிலம், வடமொழி, பாளி, மலையாளம் போன்ற மொழிகளையும் கற்றுக் கொண்டார். 'சுமேரியன் ஒரு திராவிட மொழி' 'சுமேரிய - திராவிடம்' போன்ற நூல்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார். கருத்துரைக்கோவை, ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம், ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை, ஞானப்பள்ளு, தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி, மொழியியலும் தமிழ் மொழி வரலாறும், ஈழத்துத் தமிழ் வழக்கு அகராதி, மொழி இலக்கியம் இறைநெறி போன்ற நூல்களைத் தமிழில் தந்துள்ளார். பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் மனைவி திருமதி திருஞானேஸ்வரி மற்றும் குடும்பத்தினர் அமெரிக்காவில் இருந்து வருகைதந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கவிஞர் அகணி சுரெஸ் தலைமை உரையைத் தொடர்ந்து பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களி உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் பல்கலைக்கழகத்தில் படித்த நாட்களில் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களுடன் பழகிய மறக்க முடியாத சில நினைவுகளைக் குறிப்பிட்டார். தொடர்ந்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் பேராசிரியர் ஆ. சதாசிவம் அதிகம் கவனம் செலுத்திய ஆக்கங்களில் இருந்து சுமேரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் குறிப்பிட்டார்.



பேராசிரியர் இ. பாலசுந்தரம், திருமதி பூங்கோதை பாலராஜன் ஆகியோரால் தொகுக்கப்பட்ட நூற்றாண்டு நினைவு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப் பெற்றது. 522 பக்கங்களைக் கொண்ட இந்த நூலைத் தொகுத்து எமக்களித்த பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களை எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் மலர்ச்செண்டு வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் மகனான மதியழகன் ஆறுமுகம் அவர்களின் உரையும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இமாச்சலப் பிரதேசத்தின் "நாட்டி" நடனம் எப்படி கின்னஸ் சாதனை படைத்தது?

நாட்டி (Nati) என்பது இமாச்சலப் பிரதேசத்தின் குறிப்பாக குல்லு பள்ளத்தாக்கில் (Kullu Valley) மிகவும் பிரபலமாக ஆடப்படும் புகழ்பெற்ற ஒரு பாரம்பரிய நாட்டுப்புற நடனம் ஆகும். இது அந்த பிராந்தியத்தின் கலாச்சாரம், ஒற்றுமை, ஆன்மீகம் மற்றும் திருவிழாக் கொண்டாட்டங்களின் முக்கிய அடையாளமாக விளங்குகிறது.

நாட்டி நடனம் (Nati Dance):

பின்னணியும் முக்கியத்துவமும்:
இந்த நடனம் இமாச்சலப் பிரதேசத்தின் குல்லு பள்ளத்தாக்கில் தோன்றியதாக கருதப்படுகிறது. இது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவராலும் குழுவாக ஆடப்படும் ஒரு அழகான நடனம் ஆகும். இந்த நடனம் முதன்மையாக அறுவடைத் திருவிழாக்கள், திருமணங்கள், உள்ளூர் சந்தைகள் மற்றும் உலகப் புகழ்பெற்ற குல்லு தசரா திருவிழாவின் போது என மகிழ்ச்சியான தருணங்களில் ஆடப் படுகிறது.

உள்ளூர் கிராமிய மரபுகளின்படி, இந்நடனம் கிருஷ்ணர் மற்றும் கோபியர்களின் "ராஸ் லீலா" கதைகளுடனும், இமய மலைப் பகுதி இந்து தெய்வங்களுக்கு நன்றி செலுத்தும் வழிபாட்டு முறையுடனும் தொடர்புடையது. உள்ளூர் தெய்வங்களை (தேவதாக்கள்) வரவேற்று கௌரவிக்கும் ஒரு வழிபாட்டு முறையாகவும் கருதப்படுகிறது.

தொடக்கத்தில் மிகவும் மெதுவாகவும் நளினமாகவும் தொடங்கி, பின்னணி இசைக்கு ஏற்ப நடனத்தின் வேகம் படிப்படியாக அதிகரித்து விறுவிறுப்பான நிலையை அடையும். சிக்கலான பாத அசைவுகளும் கை கொட்டல்களும் இதன் சிறப்பம்சமாகும். நாட்டுப்புற வாத்தியங்களின் அதிரடி தாளங்களுக்கு ஏற்ப நடன கலைஞர்கள் தங்கள் காலடிகளை ஒருங்கிணைத்து ஆடுவார்கள்.



இந்நடனம் தோல் (Dhol), நகாரா (யேபயசய), ஷெனாய், தமவ் (Damau) மற்றும் கர்ணல் (karnal) ஆகிய பாரம்பரிய பஹாரி இசைக் கருவிகளின் பின்னணி இசைக்கு ஏற்ப இந்த நடனம் ஆடப்படுகிறது.

நடனக் கலைஞர்கள் குல்லு பள்ளத்தாக்கின் பிரத்யேக பாரம்பரிய உடைகளை அணிகின்றனர். பெண்கள் தங்களுக்கு மேல் "பட்டு" (Pattu) எனப்படும் எம்ராய்டரி செய்யப்பட்ட பெரிய கம்பளி ஆடையை வெள்ளி சங்கிலிகளால் பிணைத்து அணிவார்கள்.

தலையை "தத்து"(Dhatu) என்ற துணியால் மூடி, கைகளால் செய்யப்பட்ட "புல்லாஸ்" (Pullas) என்ற காலணிகளை அணிவார்கள்.

பாரம்பரிய உடைகளை அணிந்த 9,892 நடனக் கலைஞர்கள், பெரும்பாலும் பெண்கள் இந்த கூட்டு நடனத்தில் ஒரே நேரத்தில் பங்கேற்றனர். இது உலகின் மிகப்பெரிய தன்னார்வ நாட்டுப்புற நடனமாக கின்னஸ் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த பிரம்மாண்ட நடன நிகழ்வு "குல்லுவின் பெருமை" (Pride of Kullu) மற்றும் "பெண் குழந்தைகளைக் காப்போம்" என்ற விழிப்புணர்வு செய்தியை உலகிற்கு பறைசாற்றுவதற்காக ஏற்பாடு செய்யப் பட்டது. இந்த நடனத்தை நேரில் காண ஆசைப்பட்டால் ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் சம்பா பகுதியில் நடைபெறும் மிஞ்சார் திருவிழாவின் (Minjar Fair) போது காணலாம். அத்துடன் அக்டோபர் மாதத்தில் இமாச்சலப் பிரதேசத்தின் குல்லு பள்ளத்தாக்கில் உள்ள தல்பூர் மைதானத்தில் ஒரு வாரம் முழுவதும் நடைபெறும் சமயத்தில் காணலாம்.

மேலும், பாரம்பரிய வெள்ளி மற்றும் தங்க நகைகளை அணிகின்றனர். ஆண்கள் "சோலா" எனப்படும் மடிப்புகள் கொண்ட நீண்ட கம்பளி அங்கியை இடுப்பில் துணியால் (Dora) கட்டிக்கொண்டு, சுதான் (Suthan) என்ற இறுக்கமான பேண்டை அணிவார்கள். தலையில் வண்ணமயமான நூல்களால் அலங்கரிக்கப்பட்ட இமாச்சலி தொப்பியை அணிந்து கொண்டு ஆடுவார்கள். பாரம்பரிய கம்பளி ஆடைகளை அணிந்துகொண்டு மக்கள் இந்த நடனத்தை ஆடுவது பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இந்த நடனம் 2016ல் கின்னஸ் சாதனையிலும் இடம்பெற்றுள்ளது. 26 அக்டோபர் 2015 அன்று இமாச்சலப் பிரதேசத்தின் குல்லு நகரில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சர்வதேச தசரா விழாவின் போது இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

வேலை செய்துகொண்டே இருந்தால்
நேரம்போவது தெரியாது
நாட்கள் போவது தெரியாது
வாரம் போவது தெரியாது
மாதம் போவது தெரியாது
வருடம் போவது தெரியாது
வயதுபோனது தெரியாது
பருவங்கள்
வருவதும் போவதும் தெரியாது
உறவுகள் உடைந்து தெரியாது
மழை பெய்வது தெரியாது
வெயில் அடிப்பது தெரியாது
நாம் இருந்த இடத்திலேயே
இருக்கிறோம் என்பது தெரியாது
நம் கண் முன்
நடக்கும் அநீதிகள் தெரியாது

மனிதர்கள் வாழ்வதற்காக அல்ல
வாழ்க்கையைப் பற்றி
நினைக்காமலிருக்கவே
வேலை செய்கிறார்கள்

வேலை ஒரு மயக்க மருந்து
மிக நீண்ட உறக்கம்

ஓய்வு கிடைக்கும் நேரங்களில்
மனம் உடைந்து அழுகிறார்கள்
ஓய்வு பெறும் நாளில்
மெல்ல இறக்கத் தொடங்குகிறார்கள்

நன்றி:
மனுஷ்ய புத்திரன்



BEHIND ME MEDIA

தடுப்புக் காவலில் கைதி உயிரிழப்பு: பொலிஸ் தரப்பில் சட்ட நடைமுறைகள் மீறப்பட்டுள்ளன!



ஹோமாகம பொலிஸ் நிலையத்தினால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்த இஷார என்ற நபர் கைது செய்யப்பட்ட விதம் மற்றும் அதற்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்கள் குறித்துப் பொலிஸார் பல புதிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து மேல் மாகாண சிரேஷ்ட பிரதி காவல்துறை மா அதிபர் சஜீவ மெதவத்த ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், கைதுசெய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் குறித்த நபர் கிராமத்தினரால் தாக்கப்பட்டுள்ளார்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர், தான் சைக்கிளிலிருந்து கீழே விழுந்ததாகவே ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும், விசாரணைகளில் அவர் சைக்கிளிலிருந்து விழவில்லை என்பதும், உண்மையில் அது கிராமத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதல் என்பதும் தெரியவந்துள்ளது.



தாக்குதலின் பின்னர் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்த நபர் சுய விருப்பத்தின் பேரில் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கைதுக்கு முன்னர், தாக்குதலுக்குள்ளாகி தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறித்து அவர் பொலிஸாருக்கு ஆரம்பத்தில் முறையாகத் தெரிவிக்கவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தனி விசாரணை நடத்தப்பட்டு, தாக்குதல் நடத்திய தரப்பினரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸார் அவரைக் கைது செய்து குற்றப்பிரிவிடம் ஒப்படைக்கும் வரை, அவரது உடல்நிலையில் அல்லது அவர் காவலில் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மருத்துவ ரீதியான தீவிரமான சிக்கல்கள் எதுவும் உத்தியோகபூர்வமாகப் பதிவாகவில்லை.

விசாரணைகளின் தகவலின்படி அவர் போதைப்பொருளுக்கு அடிமையானவராக இருக்கலாம் எனக் கருதப்பட்டாலும், பொலிஸ் நிலையச் சிறையில் இருந்தபோது அவர் சில வித்தியாசமான தன்மைகளை காட்டியதையடுத்து உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம். சந்தேகநபரை முறைப்படி கைது செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய சட்ட மற்றும் பொலிஸ் நடைமுறைகள் இதன்போது முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பதை சிரேஷ்ட பிரதி காவல்துறை மா அதிபர் சஜீவ மெதவத்த வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொதுவாகச் சந்தேகநபரைக் கைது செய்யும் போது அவரது உடல்நிலை குறித்துப் பதிவிடுவதும், உறவினர்களுக்கு அறிவிப்பதும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் அந்த முறையான வழிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதால் தான் உடனடியாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் சார்ஜண்ட் விளக்கமறியலில்

கொபெய்கனே பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நிகவெட்டிய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் பொலிஸ் அதிகாரி முதலாம் திகதி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொபெய்கனே, பெத்தேகம பகுதியில் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் நபர் ஒருவர், கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி மதியவேளையில் பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு கொபெய்கனே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் இரண்டு நாட்களாக அவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்ததுடன், கடந்த 27 ஆம் திகதி இரவில் திடீர் சுகவீனம் காரணமாக நிகவெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்தார்.

இதேவேளை, உயிரிழந்த நபர் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்தமைக்குப் பின்னர், அவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்த ஐந்த கிராமவாசிகளையும் கொபெய்கனே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், இதுவரை அவர்கள் விடுவிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், கைது செய்யப்பட்டுள்ள கிராமவாசிகளின் உறவினர்கள் பொலிஸாருக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

உயிரிழந்த நபர் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்தமைக்குப் பின்னர், அவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்த ஐந்த கிராமவாசிகளையும் கொபெய்கனே பொலிஸார் கைது செய்துள்ளனர்

சந்தேகநபரைப் பிடித்தவர்கள் மரத்தில் கட்டிவைத்து ஒரு மணி நேரத்திற்குள் பொலிஸாருக்கு அறிவித்து, எந்தவிதமான ஆபத்துமின்றி பாதுகாப்பாக அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு ஒப்படைக்கும்போது ஏதேனும் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தாலும்கூட, அவர் இறப்பதற்கு முன்னர் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு இருந்திருக்க வேண்டும் என உறவினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னரும் குறித்த நபரின் திருட்டுச் செயல்கள் குறித்து பல சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், அப்போது பொலிஸாரே அவரைப் பிடித்துத் தன்னிடம் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு அறிவுறுத்தியிருந்ததாகவும் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து கொபெய்கனே பொலிஸாரும் ஏனைய சட்ட அமுலாக்க நிறுவனங்களும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

கனடா தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை முதலில் நீக்கி ஏனைய நாடுகளும் நீக்க வழிகாட்ட வேண்டும் – சிறீதரன் எம்பி கோரிக்கை!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது கனடா விதித்துள்ள தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அந்நாடு முதலில் முன்னெடுத்து, ஏனைய நாடுகளும் தமது தடைகளை நீக்குவதற்கு முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட வேண்டுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கனடாவின் தலைநகர் Ottawa வில் கடந்த வாரம் அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

இச்சந்திப்பில் கல்கரி ஹெரிடேஜ் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், கன்சர்வேட்டிவ் கட்சியின் இலங்கைத் தமிழர் விவகாரங்களுக்குப் பொறுப்பானவரும், சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான நாடாளுமன்ற உபகுழுவின் உபதலைவருமான Shuvaloy Majumdar MP, Ontario மாகாணத்தின் அரோரா - ஓக் ரிட்ஜஸ் - ரிச்மண்ட் ஹில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Costas Menegakis MP மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக வெளித்தொடர்புப் பிரிவைச் சேர்ந்த Daryna Ostrovska ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவடைந்து 17 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையைத் தொடர்ந்து பேணுவதற்கான அவசியத்தை கனடா மறுபரிசீலனை செய்ய வேண்டுமென சிறீதரன் வலியுறுத்தினார்.

குறிப்பாக, கனடா இவ்விடயத்தில் முதற்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து தடையை நீக்குவதுடன், ஏனைய நாடுகளும் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழியை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். செம்மணி மனிதப் புதைகுழி விசாரணைக்கு சர்வதேச தடயவியல் உதவி கோரிக்கை

இச்சந்திப்பில் இரண்டாவது முக்கிய விடயமாக, யாழ்ப்பாணம் செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தரத்திலான தடயவியல் தொழில்நுட்ப உதவிகளையும் நவீன ஆய்வு உபகரணங்களையும் பெற்றுக்கொடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் நம்பகத்தன்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுக்கப்படுவதற்கு சர்வதேச நிபுணர்களின் பங்களிப்பும், மனித எச்சங்களை விஞ்ஞான ரீதியாகப் பரிசோதிப்பதற்குத் தேவையான நவீன தடயவியல் கருவிகளும் அவசியமானவை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்காக கனடா உரிய தொழில்நுட்ப உதவிகளையும் சர்வதேச தடயவியல் நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி விசாரணைகளுக்கான சர்வதேச தடயவியல் உதவிகள் ஆகிய இரண்டு முக்கிய கோரிக்கைகளை மையமாகக் கொண்டு இச்சந்திப்பு நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக கட்சித் தலைமையுடன் ஆலோசித்து சாதகமான முடிவை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன் கனடாவைச் சேர்ந்த தமிழ் தேசிய செயற்பாட்டாளர் திரு. அமலிதனும் அவரது குழுவினரும் கலந்துகொண்டனர்.

BEHIND ME MEDIA

இரண்டாவது முக்கிய விடயமாக, யாழ்ப்பாணம் செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தரத்திலான தடயவியல் தொழில்நுட்ப உதவிகளையும் நவீன ஆய்வு உபகரணங்களையும் பெற்றுக்கொடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது





Scarborough - Olivia Chow வின் மறுதேர்தல் வெற்றிக்கு வழிவகுத்ததா?

கடுமையான போட்டி நிறைந்த தேர்தலில் முடஎையை ஊழற, எதிர்த்துப் போட்டியிட்ட Brad Bradford தோற்கடித்து Toronto மேயராக இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

இரண்டு வேட்பாளர்களும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான வாக்குகளைப் பெற்றனர். கடந்த இரண்டு தேர்தல்களுடன் ஒப்பிடும்போது வாக்காளர் களின் பங்கேற்பு கணிசமாக அதிகரித்துள்ளதை ஆரம்பகட்ட முடிவுகள் காட்டுகின்றன.

Chow தனது பிரசாரத்தின் பெரும்பகுதியைச் செலவிட்ட Scarborough பகுதியில் அவர் எளிதாக வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

Scarborough ஐந்து வார்டுகளிலும் வெற்றி பெற்றார்.

அவரது வெற்றி Scarborough North பகுதியில் மிகவும் தெளிவாக இருந்தது அங்கு அவர் 56 சதவீத வாக்குகளைப் பெற்றார்.





கிழக்குப் பகுதியைத் தவிர்த்து Willowdale மற்றும் Don Valley West போன்ற புறநகர் தொகுதிகளில் ஊழறவின் வெற்றி சற்றே மந்தமாக இருந்தது. இது ஆச்சரியப்படுவதற்கில்லை என்று CTV நியூஸின் அரசியல் விமர்சகர் Scott Reid தெரிவித்தார்.

”இது யூத வாக்காளர்களின் வாக்குப்பதிவால் உந்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். இந்த பிரம்மாண்டமான வெற்றிக்குப் பிறகு Chow க்கு இருக்கும் கவலைகளில் ஒன்று யூத சமூகத்தினரின் ஒரே மாதிரியான வாக்குப்பதிவு முறை தான்” என்று அவர் கூறினார்.

அக்டோபர் 7, 2023 அன்று இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், குறிப்பாக அந்த நிகழ்வின் முதலாம் ஆண்டு நினைவேந்தலில் கலந்து கொள்ளாதது மற்றும் நகரில் அதிகரித்த யூத எதிர்ப்பு உணர்வுகளைக் கையாண்ட விதம் ஆகியவற்றுக்காக Chow Toronto வின் யூத சமூகத்தின் விமர்சனங்களை எதிர்கொண்டார்.

பிரசாரத்தின் போது இந்த விஷயத்தில் தீவிரமாகப் பேசிய Brad Bradford, நகரத்தின் மிகப்பெரிய யூத சமூக மக்கள் வாழும் Eglinton-Lawrence தொகுதியில் Chowit விட அதிக வாக்குகளைப் பெற்றார்.

”எனவே, நான் அவராக (Chow) இருந்தால், நான் தீர்க்க விரும்பும் விஷயங்கள் மற்றும் சரிசெய்ய விரும்பும் பிணக்குகளின் பட்டியலில் இதுதான் முதலிடத்தில் இருக்கும் என்று நினைக்கிறேன்.

நகரம் முழுவதும் உள்ள ஆறு வார்டுகளில், முக்கியமாக Etobicoke, Mid town Toronto மற்றும் North York ஆகியவற்றில் Brad ford முன்னிலை பெற்றார்.

குறிப்பாக, Brad ford ன் சொந்த வார்டான Beaches-East York சௌ, பிராட்போர்டை விட இருமடங்கிற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றார்.

இரு வேட்பாளர்களும் கடந்த இரண்டு மேயர் தேர்தல்களில் வெற்றி பெற்ற வேட்பாளரை விட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

2022-இல் ஜான் தோரி (John Tory) 342,158 வாக்குகளுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை மாற்றுவதற்காக 2023-இல் நடந்த சிறப்பு இடைத்தேர்தலில் சௌ 269,372 வாக்குகளுடன் வெற்றி பெற்றார்.

ஆட்சியில் உள்ள எந்த அரசாங்கமும் பௌத்தத்துக்கு எதிராக செயற்படாது - ஜனாதிபதி சட்டத்தரணி



அரசாங்கம் பௌத்தத்துக்கு எதிராக செயற்படுகிறது என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால் அது எவ்வாறான செயற்பாடு என்று குறிப்பிடுவதில்லை. பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆட்சியில் உள்ள எந்த அரசாங்கமும் பௌத்தத்துக்கு எதிராக செயற்படாது என ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமாரபெரும தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை இடம்பெற்ற தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசாங்கம் பௌத்த மதத்துக்கு எதிராக செயற்படுவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆனால் அது எவ்வகையிலான குற்றச்சாட்டுக்கள் என்று எவரும் எவ்விடத்திலும் குறிப்பிடுவதில்லை. பௌத்த தேரர்கள் சட்டத்துக்கு விரோதமாக செயற்படும் போது அதற்கு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் போது அதனை பௌத்தத்துக்கு எதிரான செயற்பாடு என்று எவ்வாறு குறிப்பிடுவது.

அரசாங்கம் பௌத்தத்துக்கு எதிராக செயற்படுவதாக குறிப்பிடுவது கேலிக்கூத்தானது. ஏனெனில் அரசியலமைப்பின் 9 ஆவது பிரிவின் பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும், போசிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.ஆகவே ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் பௌத்தத்துக்கு எதிராக ஒருபோதும் செயற்படாது. பௌத்தத்துக்கு அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒருசில பௌத்த பிக்குகள் அண்மையில் கண்டியில் இருந்து கொழும்புவரை பேரணியாக வந்தார்கள். ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அதன் பின்னர் விகாரமாதேசி பூங்கா பக்கம் சென்றார்கள். இந்த நாட்டில் 72 சதவீதமளவில் பௌத்தர்கள் உள்ளார்கள். இதில் எத்தனை பேர் இந்த போராட்டத்தில் கலந்துக் கொண்டார்கள்.

அரசாங்கம் பௌத்தத்துக்கு எதிராக செயற்படுவதாக இருந்தால் ஒட்டுமொத்த மக்களும் ஒருசில தேரர்களின் போராட்டத்தில் கலந்துக் கொள்ள வேண்டும். ஆகவே அரசாங்கம் பௌத்தத்துக்கு எதிராக செயற்படுகிறது என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானது என்றார்.

BEHIND ME MEDIA

பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களை அறிமுகப்படுத்தினால் அரசாங்கம் ஜிஎஸ்பி வரிச்சலுகையை இழக்க நேரிடலாம்!



அரசாங்கம் ஒடுக்குமுறை பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களை அறிமுகப்படுத்தினால் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை இழக்கவேண்டிய நிலையேற்படலாம் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எச்சரித்துள்ளார். எதிர்கட்சி தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது பொதுமக்களின் எதிர்ப்பை ஒடுக்குவதற்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையை மூடி மறைப்பதற்கும் அனுரகுமாரதிசநாயக்க அரசாங்கம் கடுமையான சட்டங்களை அறிமுகப்படுத்த முயல்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத சட்டத்தினை அதற்கு பதிலான கடுமையான சட்டத்தின் மூலம் மாற்றீடு செய்வதை விட பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குமாறும் மனித உரிமைகள் ஜனநாயக பாதுகாப்புகள் ஆகியவற்றை வலுப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ்வாறான சட்டங்களை அறிமுகப்படுத்துவதனால் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஐரோப்பிய சந்தைகளுக்கு விசேட சலுகைகளை வழங்கும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழக்கநேரிடலாம்.

உத்தேச சட்டங்கள் சிவில் அரசியல் மனித உரிமைகளை பலவீனப்படுத்தும் அதேவேளை யார் பயங்கரவாதி என தீர்மானிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்குகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கொள்ளைச் சந்தேக நபர்களான தம்பதிகள் கொடுத்த மயக்க மருந்தால் வயோதிபப் பெண் உயிரிழப்பு!

மட்டக்களப்பில் மயக்க மருந்து கொடுத்து தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டு வந்த கணவன், மனைவியான சந்தேக நபர்கள் இருவரும் கொடுத்த மயக்க மருந்தினால் உடல் நலம் பாதிக்கப்பட்ட கல்லாற்றைச் சேர்ந்த வயோதிபப் பெண் (வயது 65) உயிரிழந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை (29) இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் உயிரிழந்தவரின் உறவினர்கள் குறித்த மரணம் தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

கடந்த மார்ச் 20ஆம் திகதி கொக்கட்டிச்சோலை நெல்லிக்காடு வயல் பகுதியில் பாழடைந்த கிணற்றில் உயிருடன் போராடிக்கொண்டிருந்த இளம் தாய் ஒருவர் மீட்கப்பட்டதுடன் அதே கிணற்றிலிருந்து அழுகிய நிலையில் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

அத்துடன் அருகில் உள்ள வயல் பகுதியில், காப்பாற்றப்பட்ட இளம் தாயின் 3 வயது 4 மாதங்களான பெண்குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது. இந்த சம்பவத்திலேயே வவுணதீவு பாவக்கொடிச்சேனையைச் சேர்ந்த இந்த கணவன், மனைவி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த சந்தேக நபர்கள் இருவரும் கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு பிற்பகல் 1 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

அங்கு, வவுண தீவு பாவக்கொடிச்சேனையில் உள்ள தனது மகளை சந்திக்கச் செல்வதற்காக, பஸ் வண்டியை எதிர்பார்த்து, தனியாக



காத்திருந்த வயோதிபப் பெண்ணிடம் மெல்ல பேசிக்கொண்டே, மயக்க மருந்து கலக்கப்பட்ட பழச்சாற்றை பருகக் கொடுத்துள்ளனர்.

சந்தேக நபர்களான கணவன், மனைவி இருவரும் வயோதிபப் பெண்ணின் அருகில் சென்று, ‘‘கவனம் அம்மா, இங்கே கள்ளர்கள் நடமாட்டம் அதிகம். கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு போய விடுவார்கள்’’ என அறிவுரை கூறியுள்ளனர்.

இதையடுத்து, அந்த வயோதிபப் பெண், தனது கையில் இருந்த 2 பவுண் வளையல், கழுத்தில் அணிந்திருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியை கழற்றி தனது கைப்பையில் வைத்துள்ளார்.

அப்போது அந்தப் பெண்ணுக்கு, மயக்க மருந்து கலக்கப்பட்ட பழச்சாற்றை சந்தேக நபர்கள் பருகக் கொடுத்துள்ளனர். அவர் அதைக் குடித்து சிறிது நேரத்தில் மயக்கமுற்றதும், அவரது தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டு இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

அதன் பிறகு, சுமார் 4 மணித்தியாலத்தின் பின்னர், குறித்த பெண் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நீரிழிவு நோயாளியான அந்த வயோதிபப் பெண், அதன் பின்னர், மன, உடல் ரீதியாக நோய்வாய்ப்பட்டு, சிறுநீரகமும் பாதிக்கப்பட்டதன் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை (29) உயிரிழந்தார்.

சந்தேக நபர்கள் கொடுத்த மயக்க மருந்து காரணமாகவே அந்தப் பெண் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்துள்ளதாக அவரது உறவினர்கள் குற்றஞ்சாட்டி, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியச் செய்திகள்

BEHIND ME MEDIA

“தமிழகத்துக்கு வரவேண்டிய ரூ. 1,614 கோடி முதலீடுகள் ஆந்திரா சென்றுவிட்டன”



“தமிழகத்துக்கு வர வேண்டிய 1,614 கோடி ரூபாய் கொரிய முதலீடுகள் தவெக அரசின் அலட்சியத்தால் ஆந்திராவுக்கு சென்றுவிட்டன. எல்லாத் துறைகளிலும் இவ்வளவு வேகமாக ரிவர்ஸ் கியரில் செல்வது எப்படி என இவர்களிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும்” என தவெக அரசை திமுக தலைவர் ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில், “காலையில் கடந்து வந்த இரு செய்திகள்: 1) ஜிஎஸ்டி வருவாய் வளர்ச்சியில் தேசிய சராசரிக்கும் கீழே தவெக ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சி புதைக்கப்பட்டிருக்கிறது.

2) தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய 1,614 கோடி ரூபாய் கொரிய முதலீடுகள் தவெக அரசின் அலட்சியத்தால் ஆந்திராவுக்குச் சென்றுவிட்டன. முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த கைடன்ஸ் தமிழ்நாடு அமைப்பே இந்த ஆட்சியில் தனிநபர்களின் ஈகோவுக்கு காவு கொடுக்கப்பட்டுவிட்டது.

எல்லாத் துறைகளிலும் இவ்வளவு வேகமாக ரிவர்ஸ் கியரில் செல்வது எப்படி என இவர்களிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும். இதுவெல்லாம் என்னவென்றே புரியாத, தெரியாத நம் முதல்வரோ இடைத்தேர்தல் நடக்கும் தொகுதிகளில் கையசைத்து ஷோ காட்டக் கிளம்பிவிட்டார்” எனத் தெரிவித்தார்.

தவெக ஆட்சியில் தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் தொடர் சரிவை சந்திக்கிறது



“பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக இருந்த தமிழ்நாடு தவெக ஆட்சியில் தொடர்ந்து சரிவை சந்தித்துக் கொண்டிருக்கிறது” என திமுக முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக இருந்த தமிழ்நாடு தவெக ஆட்சியில் தொடர்ந்து சரிவைச் சந்தித்துக் கொண்டிருப்பது கவலை அளிக்கிற்து.

அக்டோபர் மாத ஜிஎஸ்டி வரி வருவாயில், கேரளா 23%, ஆந்திரா 24%, கர்நாடகா 18%, தெலங்கானா 14% என அண்டை மாநிலங்கள் இரட்டை இலக்கத்தில் வளர, தமிழ்நாடு வெறும் 3% வளர்ச்சியோடு பின்தங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் சில முக்கிய பொருட்களில் இருந்து பெறப்படும் வரியால், மாநிலத்தின் மொத்த வரிவருவாயில் ஓரளவு உயர்வு காணப்பட்டாலும், நமது சொந்த உற்பத்தியின் மூலம் ஈட்டப்படும் வரி வருவாய் குறைந்தே வருகின்றது.

இது மாநிலத்தில் நிலவும் ஒட்டுமொத்த பொருளாதார தேக்க நிலையின் அளவீடாகக் கருதப்படவேண்டியது என்பதனை தவெக அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே, இறக்குமதி ஆகும் பொருட்களின் மீதான வருவாயை மட்டும் நம்பியிராமல், நமது சொந்த உற்பத்தியினைப் பெருக்கி வெளிமாநிலங் களுக்கும் வெளிநாடுகளுக்கும் விற்பனையை அதிகரிக்கவும், அதன் வாயிலாக தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தையும் நமது இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளையும் உயர்த்துவதற்குமான வழிவகைகளை தவெக அரசு உடனடியாகக் காண வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

AI ஐ பயன்படுத்தி பொய்க் கூட்டம் நடாத்தியதா இண்டி கூட்டணி?

தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தியும், எஸ்ஐஆர் பணியை ரத்து செய்யக்கோரியும், டில்லி ராம் லீலா மைதானத்தில் இண்டி கூட்டணி சார்பில் நேற்று பேரணி நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றதாகவும், போராட்டம் வெற்றி பெற்றதாகவும் காங்கிரஸ் உள்ளிட்ட இண்டி கூட்டணி கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். கூட்டத்தில் பல இருக்கைகள் காலியாக இருந்ததாகவும் போராட்டம் பிசுபிசுத்துப் போனதாக பாஜ விமர்சித்து வருகிறது.

அந்த வகையில், மத்திய பார்லி விவகாரங்கள் துறைக்கான அமைச்சர் கிரண் ரிஜிஜு, இண்டி கூட்டணி பொய்யான பிரசாரம் செய்து வருவதாகக் குற்றம்சாட்டி, ஒரு ஏஐ போட்டோவையும் பகிர்ந்துள்ளார். அவர் விடுத்துள்ள பதிவில் ராம் லீலா மைதானம் நிரம்பி வழிந்தது போன்ற ஏஐ போட்டோவைக் கூட அவர்கள் (இண்டி கூட்டணி) சரியாக செய்யவில்லை. பொய்யை பரப்பும் காங்கிரஸ், எனக் குறிப்பிட்டுள்ளார்.



கடத்தப்பட்ட மீன்பிடி கப்பலை மீட்டது இந்திய கடற்படை!

சோமாலியாவின் ஆயுதமேந்திய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட அசினி என்ற மீன்பிடி கப்பலை இந்திய கடற்படை வெற்றிகரமாக மீட்டது. மேலும், கப்பலில் இருந்த 20 பணியாளர்களும் எவ்வித பாதிப்பும் இன்றி பத்திரமாக மீட்கப்பட்டனர். கடற்படையின் இந்த செயலுக்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். இந்திய கடற்படை தகவலின்படி, ஆயுதமேந்திய கடற்கொள்ளையர் குழு ஒன்று கடந்த மாதம் இந்த மீன்பிடி கப்பலை கடத்தியது. அப்பகுதியில் செல்லும் வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான தாய் கப்பலாக இதை பயன்படுத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கடல்சார் பாதுகாப்புக்கு இது பெரும் அச்சுறுத்தலாக இருந்ததால், மீன்பிடி கப்பலை மீட்கும் பணியில் இந்திய கடற்படை ஈடுபட்டது. தனது போர்க்கப்பல் ஒன்றையும், கடல்சார் கண்காணிப்பு விமானம் ஒன்றையும் களமிறக்கி, கடத்தப்பட்ட கப்பலைக் கண்டறிந்து பின்தொடர்ந்தது.

இந்திய விமானப்படையின் சரியான நேரத்திலான ஆதரவுடன், ஆயுதமேந்திய கடற்கொள்ளையர்களிடமிருந்து கப்பலையும் பணியாளர்களையும் விரைவாகக் கண்டறிந்து, இடைமறித்து, பத்திரமாக மீட்டது, இந்திய கடற்படையின் உயர் செயல்பாட்டுத் தயார்நிலையையும் கடல்சார் அச்சுறுத்தல்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் அதன் திறனையும் வெளிப்படுத்துகிறது.

எங்கள் துணிச்சலான பணியாளர்கள், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உயர்களைப் பாதுகாப்பதிலும், கடல்சார் பாதுகாப்பை நிலைநாட்டுவதிலும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதிலும் இந்தியாவின் திறன், நோக்கம் மற்றும் உறுதியை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர். பாதுகாப்பான கடல் சூழலையும் சுதந்திரமான திறந்த மற்றும் பாதுகாபான இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தையும் உறுதி செய்வதில் இந்தியா தொடர்ந்து உறுதியுடன் உள்ளது.” என தெரிவித்துள்ளார்.